# வணிகச்சுடர்

# VANIHACHCHUDAR



வணிக மாணவர் மன்றம்

commerce students union

கொக்குவில் இந்துக்கல்லூரி

KOKUVIL HINDU COLLEGE

1993-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துகிறோம்

# மிக் கைத்தொழில் நிறுவனம்

**விநியோகஸ்தர்கள் :**

★ கல்லூரி உபகரணங்கள்

★ எழுதுகருவிகள்

★ காகிதாதிகள்

★ அச்சக உபகரணங்கள்

# MIK INDUSTRIES

26 & 26/1, Nadarajah Compound,

Thirunelvely New Road,

**JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகச்சுடர்

# VANIHACHCHUDAR

## 1993 – 1994

வணிக மாணவர் மன்றம்
கொக்குவில் இந்துக் கல்லூரி
கொக்குவில்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி வணக்கம்

தெளிதரு கலை யில் பலமா ணவர்சேர்
கொக்குவில் ஹிந்துக்கல் லூரி!
கொக்கூர்க்கு ஹிந்துக் கல்லூரிநீ தீபம்!
கிராமத்துக் கொண்மணி மகுடம்
நினதுயர் கலைமுறை நிதம்நிதம் பெற்றோம்.
நினதருள் யாமினி மறவோம்
நீயே வித்தையி னுறையுள் நினதே எங்களினுயர்வு
நினதடி யேத்து வோமே.

பல்லவி

நினதருள் மிகுமொழி நமதே பொருளாம்: நீதரு ஞானம கீதம்
ஜெயஹோ! ஜெயஹோ! ஜெயஹோ! ஜெய. ஜெய. ஜெய. ஜெயஹோ
நீதரு ஞானம கீதம்
அறிவுச் சுடர்கொண் டறம்பொரு ளின்பம்
தழுவும் வாழ்வினைத் தந்தாய்
கற்றன ஒழுகும் சீருறு வழிநீ
காட்டினை, நீடுக எனவே
அற்புத நடமா டமலன் அடிமன னொடுவழி படுவோம்
வழிமுறை மிளிர்க நின் நாமம்.

பல்லவி

நினதருள் — ஞானம கீதம்
உள்ளத் துறுதி தருவா யுன்றன்
பாரம் பரியம் பேண
பூமியில் நீபெறு நல்லிசை மேலாம்
பெருமிதம் மாணவர்க் கென்றும்
முயல்குவம் நீயுயர் வழிகள் முழுமன னொடுமகிழ் வாக
கொக்குவில் ஹிந்து நமதே.

பல்லவி

நினதருள் — ஞானம கீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்



இ. மகேந்திரன், B. A. (Cey.). D.p. in Ed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடிவு பிறக்க வேண்டும்

என் இனிய இதயமே! வைரமுள்ள நெஞ்சு வேண்டும் என்ற இனிய இசை எங்கோ ஒலிக்கின்றது. நினைவு நல்லது வேண்டும் என்று யாரோ சுருதி மீட்கின்றார்கள். நெஞ்சினிலே எழும்பி எழும்பி அலைகள் அடிக்கின்றன......

மாணவர்களின் சிந்தனைகள் பாடக்குறிப்புகள் என்ற குறுகிய எல்லைகளுக்குள் அடங்கி முடங்கிவிடக் கூடாது. விஞ்ஞான மனப்பாங்குடன் சிந்திக்கப் பழக வேண்டும். ஆய்வு மனப்பாங்கினை வளர்த்திட வேண்டும். செயற்றிட்டம் என்பதோடு செயல்திறமையும் பெற முயற்சிக்க வேண்டும். பாடத்திட்டம் என்பது குறுகிய வட்டம். அதற்கு அப்பாலும் ஏன் பார்க்கக் கூடாது.

யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் திறந்த பொருளாதாரமா? கலப்புப் பொருளாதாரமா? இப்படி ஆசிரியர் கற்பிக்க ஆரம்பித்தால்......! பாடத் திட்டத்தில் இது இல்லையே? பரீட்சைக்கு இது வரவே வராது. எனவே வேண்டவே வேண்டாம். எமது பகுதிகளில் விலை உயர்வுக்குரிய காரணங்கள் என்ன என்பதினை நாம் சற்று ஆராய்வோம் என்று ஆசிரியர் தொடங்கினால்......? இப்படி ஆசிரியர் ஆரம்பிக்கப் போவதுமில்லை. அதனைக் கேட்க மாணவர்கள் இருக்கப் போவதுமில்லை. நுகர்வோருக்குரிய பாதுகாப்புகளை நாம் எவ்வாறு உருவாக்கலாம்? அநியாயம் பதுக்கல், கட்டுக்கு மீறிய விலை உயர்வு, கலப்படம் ஆகிறவற்றினை எதிர்ப்போம் என்று மாணவர்கள் சிந்திக்க முற்பட வேண்டாமா? கூலியின் மகத்துவம் தத்துவ அளவில் தான். செய்யும் தொழிலே தெய்வம் என்பது கவிதையில் தான். நமது சமுதாயம் தொழிலாளியை மதிக்கின்றதா? செய்யும் தொழில் எதுவாக இருந்தாலும் அது கௌரவமானது என்பதினை ஏற்கின்றதா? சமூக அநீதிகளை எதிர்க்க வேண்டும் சமூகப் புரட்சி என்ற இலக்கினை, இலட்சியத்தினை எமது இதயதாகமாக மாற்ற வேண்டும். உண்மையான சுதந்திரம், விடிவு, விடுதலை என்பது பொருளாதாரச் சுதந்திரத்தில் தங்கி இருக்கின்றது. கடின உழைப்பு, சமூக நலன் என்பவை உடனடித் தேவை.

பரீட்சை மயமான கல்வி அந்நியரின் அன்பளிப்பு. இது வேண்டவே வேண்டாம். பொது அறிவு வளர வேண்டும். மாணவர்கள் வகுப்பறைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் சிறைப்பட்டு வாழாமல் சிறகடித்துப் பறக்க வேண்டும். விளையாட்டுகளில் பங்கு கொள்ள வேண்டும். நமது கலைகளை விரும்பி ரசிக்க வேண்டும். அவற்றினைக் கற்க வேண்டும். இலக்கிய ரசனையுடன் நூல்களைக் கற்க வேண்டும். நூல்கள் தான் நல்ல தோழர்கள். படிக்கும் போதே ஏதாவது தொழில் ஒன்றினைச் செய்ய முயற்சிக்க வேண்டும். இப்படி இதயத்தில் எண்ண அலைகள் எழும்புகின்றன. உயர உயர எழும்புகின்றன.

திடீரென்று அலைகள் ஆர்ப்பரிக்கின்றன. இதயக்கடல் குமுறுகின்றன. மாணவர்களின் கல்வி வீழ்ச்சி. அது ஒரு குமுறல். ஆசிரியர்கள் நன்றாகக் கற்பிப்பதில்லை. மலையென எழுகின்றது அலை. இதனைக் கேட்டுக் கொண்டு நாம் மௌனமாக வாழ்வதா? இந்தக் குற்றச்சாட்டைப் பொடிப் பொடியாக உடைத்து எறிய வேண்டாமா? ஆசிரியர்கள் அணி திரள வேண்டும். பொங்கி எழ வேண்டும். பொங்கிப் பிரவகிக்கும் பொழுதினிலே எமது விடிவு பிறக்க வேண்டும்......

நெஞ்சமே... நினைத்தாலே இனிக்கின்றது. எமது வணிகத்துறை மாணவர்களின் விடாமுயற்சி போற்றத் தக்கது. வணிகச்சுடர் இதழினை அழகுற வெளிக்கொணர்வது என்பது மிகவும் சிரமமான காரியமாகும். தலைவர், செயலாளர். பொருளாளர் என்போருடன் வணிகத்துறை மாணவர்களின் பங்களிப்பு மகத்தானது. வணிகத் துறை ஆசிரியர்களின் சேவை மனப்பாங்கினைக் கண்டு பெருமிதமடைகின்றோம். வணிகத்துறை மேலும் வளர்ச்சியுற ஆண்டவன் அருள் புரிவாராக.

இ. மகேந்திரன்
அதிபர்

கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவத்தின்
# தனிச் சிறப்பு



கொக்குவில் இந்துக் கல்லூரி வணிகத் துறை மாணவர்வழமைபோல் இம்முறையும் தமது உயர்ந்த சிந்தனைகளின் செயற்பாடுகளினால் வணிகச் சுடரை ஏற்றவுள்ளார்கள் என்பதைக் கேட்டு மகிழ்வுறுகிறேன். தனக்கென ஒரு பாரம்பரியத்தைக் கொண்டு பல்துறையிலும் சிறப்புற்று வளர்ந்துவருகின்ற கொக்குவில் இந்துக் கல்லூரி காலத்துக்குக் காலம் அதிபர்களின் செயற்பாடுகளினாலும் ஆசிரியப் பெருந்தகைகளின் பங்களிப்புகளாலும் இன்று தனக்கென நன்முத்திரை ஒன்றைக் கல்வி உலகத்தில் பதித்துவிட்டது. கல்விப் புலத்தில் அண்மைக்காலமாகப் பல்கிப் பெருகும் மாணவர் கூட்டத்தையும் பல்கலைக் கழகத் தேர்வில் திறம்படச் சித்தியடையும் மாணவர்களையும் கொண்டிலங்குவதும் வணிகத்துறையே!

"நெல்லுமுயிரன்றே நீருமுயிரன்றே
மன்னனுயிர்த்தே மலர்தலை உலகம்"

எனும் சங்கச் செய்யுளின் பொருளுரைக்கமைய ஆளுமை மிக்க தற்போதைய அதிபரின் வழிநடத்தலில் பல்துறைப் புகழை வாரிக்குவிப்பது அண்மைக்கால யதார்த்த உண்மையாகும். துணிச்சலும் அயரா உழைப்பும் கொண்ட தலைமைத்துவத்தைக் கொண்ட இக்கல்லூரி வணிகத் துறையில் மாணவர் வாண்மையை வளம்படுத்தி முகாமைத்துவ நெறிக்குப் பெரும் எண்ணிக்கையில் மாணவர்களை செப்பனிடுவார்களாக!

இணுவையம் பதியின் அருகே பாங்குற அமைந்த கோண்டாவில் கொக்குவில் வாழ் மாணவர் தாம் வாழும் மண்ணாகிய மருத நிலம் போல் செழிப்புற்று இலம் என்ற சொல்லை இல்லை என வைத்து நலம் பெற என் வாழ்த்துக்கள். ஆற்றல் தோய்ந்த ஆசிரியப் பெருமக்களின் விளக்கங்களில் விளங்கி வியனுறு கலைகள் பலகற்று வையகம் பயனுற வாழப் போகும் மாணவச் செல்வங்களை வாழ்த்தி அமைகின்றேன்.

உங்கள் அயர்ச்சியிலா முயற்சி
எங்கள் மண்ணுக்கு என்றுந் தேவை

**இரா. சுந்தரலிங்கம்**
வடமாநிலக் கல்விப்பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகச்சுடரின் ஒளி பாரெங்கும் பரவ
வாழ்த்துகிறோம்

# இந்திரா ஜுவல்லறி

புதிய டிசைன்களில் உத்தரவாதம்
நம்பிக்கையான தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்


# இந்திரா ஜுவல்லறி

● ஓடர் நகைகளை குறித்த காலத்தில்
தவணை தவறாது தரும் நிகரில்லா ஸ்தாபனம்

இல, 183, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங் கொழிக்கட்டும்



கொக்குவில் இந்து, முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றாகும். தனது பாரம்பரியத்தைப் பேணி நன்மாணவர்களை நல்லவராக, வல்லவராக ஆக்கும் பணியில் முனைந்து நிற்பதாகும். சமுக நலப்பணியிலும். கல்விப் புலத்திலும் தனக்கென ஒரு நல்லிடத்தைப் பிடித்த அதிபரின் வழிநடத்தலில் விரைந்து வளரும் கொக்குவில் இந்து வணிக மன்றத்தார் வணிகச்சுடரினை ஒளி பெறச் செய்ய முயல்வது போற்றத் தக்கதாம். கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக மனோவேகத்தில் முன்னேறிவரும் வணிகத்துறை மாணவர் மனங்கவர்வதும் மாணவர் நலன் பேணும் துறையாக மிளிர்வதும் கண்கூடு. வணிகத் துறையில் பல சீரிய மாணவர்களை உருவாக்கிப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கும் வெற்றி போற்றற்குரியது. ஆசிரிய குழாத்தின் அயரா முயற்சியும் அதிபரின் சீரிய நேரிய வழிநடத்தலும் வெற்றிக்கு வித்திட்டதெனலாம். வணிகச்சுடர் காலத்தின் தேவைக்கு ஈடுகொடுக்கும் வகையில் இங்கு மலர்வது மகிழ்ச்சிக்குரியதொன்றே.

வங்கம் செலுத்தி வளமார் கடல்தாண்டி
எங்கும் வணிகம் செய்து பொருளீட்டி
இங்கு கொணர்ந்தே சேர்க்கும்
தங்க வணிக்கரங்கள் தம்புகழைப் பாடுதுமே

என்று பாராட்டத் தோன்றும் வகைக்கு ஈழத்துணவும், காழகத் தாக்கமும் என்ற பரிபாடல் பக்குவ நிலைக்கும் வணிகத் துறை, வணிகக் கலை துன்னெற்றொளிர்ந்து வளர்ந்து மிளிர்க என் நல்லாசிகள். கொக்குவில் இந்து பல் துறையிலும் தனக்கே இயல்பான நன்முத்திரையைப் பதிப்பதே போல் வணிகத் துறையிலும் வளங்கொழிப்பதாக.

**கோ. சி. வேலாயுதம்**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகச்சுடர் மென்மேலும் வளர வாழ்த்துகிறோம்

25 வருட அனுபவமுள்ள நகை வியாபார மாளிகை
ஓடர் நகைகள் 22 கரட் தங்கத்தில் சிறந்த முறையில்
செய்து தரப்படும்

கிருபா நகை மாளிகை

இல. 333A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வணிகச்சுடரை வாழ்த்துகிறோம்

உங்கள் தேவைகளுக்கு எங்களிடம் வாருங்கள்
புதுப்புது டிசைன்களில்
தங்க நகைகள்
உற்பத்தி செய்பவர்கள்

நியூ புஷ்பா நகை மாளிகை

இல. 284, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தின் தேவை



வணிகக் கல்விக்கு இன்று அதீத முக்கியத்துவம் மாணவர்கள் மத்தியில் உண்டு. எதிர்கால வாய்ப்பும் வளமும் இத் துறைக்குப் பிரகாசமாக இருப்பதே இதற்குக் காரணம்.

புதிய உலகின் ஒழுங்குமுறை இத் துறை சார்ந்தே அமைகின்றது. அதற்கு ஈடு கொடுக்க இத்துறை சார்ந்தோர் உழைப்பு அவசியம்.

துறைசார் தேர்ச்சியுடையோர் தமிழில் ஆக்கங்களை வெளிக்கொணர்வது காலத்தின் தவிர்க்க முடியாத தேவை. இத்தகைய முயற்சிகள் பொலியாத காரணத்தினாலேயே வணிகமலர்கள் மலர்கின்றன. மாணவர்களின் தேவை — அறிவுத்தேடல் — அத்துணை அவசியமானதாக உள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களும் காலத்தின் தேவை கருதி இப்பணியில் முன்வரிசையில் நிற்கின்றார்கள். அவர்களுக்குக் கிடைத்த நல்ல வழிகாட்டல் — அவர்களை முந்தியிருக்கச்செய்கின்றது.

வணிகச்சுடர் ஆண்டுதோறும் சுடர்விட்டுப் பிரகாசிக்க என் வாழ்த்துக்கள்.

**சி. சிவராசா**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
வர்த்தகம்

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

With the Best Compliments
from

**Vickna Tution Centre**

**No. 52, Stanley Road,**
**Jaffna.**

வணிகச்சுடரின் பணி மேலும் தொடர
வாழ்த்துகிறோம்

குறைந்த செலவில் நிறைவான உணவாகவும்
போஷாக்கு குறையை நீக்கவும் பாவியுங்கள்

ஜீவாகாரம்

100 g ஜீவாகாரத்தில் 17g புரதமும்
400 கிலோ கலோரி சக்தியுமுண்டு
உங்கள் தேவைக்கேற்ப தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்

அண்ணா தொழிலகம்
இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியர் வாழ்த்து

1992 ஆம் ஆண்டில் எமது வணிக மாணவர் மன்றத்தால் ஏற்றப் பட்ட வணிகச்சுடர் நாடெங்கிலும் ஒளிவிட்டுப்பிரகாசித்து இரண்டாவது வயதில் பூரிப்புடன் வீறுநடையுடன் பவனிவருவதைக் கண்டு பெருமை யும், பெருஉவகையும் அடைகின்றேன். எமது கல்லூரி பல்துறைகளிலும் ஈடிணையற்ற செயற்பாடுகளை வெளிக்கொணர்ந்து யாழ் மாவட்டத் திலேயே முன்னணியில் திகழ்வதை யாவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அதற்கு மைல் கல்லாக இருப்பது எமது கல்லூரிப் பிதாவான திருவாளர் இ. மகேந்திரன் அவர்களின் தலைமைத்துவமே என்றால் மிகையாகாது. அவரது காப்பில் உருவாகிய வணிகமாணவர் மன்ற மானது தன்னிகரற்ற முனைப்புடன் செயற்பட்டு வருவதைக்கண்டு கற் றோரும் மற்றோரும் இறும் பூதெய்துகின்றனர். என்பது வெள்ளிட மலை.

வணிகச்சுடருக்கு ஒளியூட்டும் நெய்யாக பல ஆக்கங்களை பல் கலைக்கழக விரிவுரையாளர்கள், வர்த்தக மாணவர்கள் சமைத்து அளித் துள்ளனர். "பொன்னின் குடத்துக்கு பொட்டிடவேண்டுமா" என்பது போல் அவை திரிபின்றி அமைந்துள்ளமை கண்டு களிப்படைகின்றேன். அத்துடன் 1993, 1994 கழகமாணவர்கள் பல இடர்கள் வந்துற்ற போதும் அச்சமில்லை, அச்சமில்லை என்ற வீரத்துணிவுடன் வணிகச் சுடரை வெளிக்கொணர உற்சாகத்துடன் செயற்படுகின்றனர். அது கண்டவர் வியந்தனர், வியக்கின்றனர், வியப்பர்.

வணிக மாணவர் மன்றத்தின் செயற்பாட்டினால் யாழ் கல்வித் திணைக்கள வணிக வளநிலையத்தால் நடாத்தப்பட்டகட்டுரை, குறு வினாவிடை, வினாடிவினாப்போட்டி முதலியவற்றில் வணிக மாணவர் கள் பங்குபற்றிப்பல வெற்றிகளைத்தட்டிக் கொண்டதுடன் கல்லூரியில் சென்ற தவணை நடாத்தப்பட்ட, அதிசிறப்பான கற்றோராலும் மற் றோராலும் போற்றப்பட்ட கல்விக் கண்காட்சியில் பங்கு கொண்டு நவீன சாதனைகளைப் படைத்த பெருமையும் இவர்களையே சாரும்.

எமது மன்றத்தின் அச்சாணியாக மிளிரும் எனது ஆசிரியரும், கல்லூரி அதிபருமாகிய திரு. இ. மகேந்திரன் அவர்களது ஆசியும் ஆத ரவும் எமக்குக் கிட்டியிருப்பது பெரு வரப்பிரசாதம் என்றே கூறலாம். அவருக்கு முதற்கண் எனது இதய பூர்வமான நன்றியை நல்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் எங்கள் கல்லூரி முன்னாள் வர்த்தக ஆசிரியரும், 1992 ஆம் ஆண்டு வணிக மன்றத்தின் இணைப் பொறுப்பாசிரியருமாகிய செல்வி நா. வேலுப்பிள்ளை (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வர்த்தகவியல்) அவர்கள் வணிகச்சுடர் வெளியீட்டிற்கும், வணிக மாணவர் செயற் பாட்டிற்கும் ஊக்கமுட்டி, ஆலோசனை வழங்கி வருவது கண்டு மகிழ்ச்சி யுடன் கூடிய நன்றியைக் கூறுகின்றேன்.

எங்கள் கல்லூரி கலை, வர்த்தக வகுப்பு ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், விளம்பரதாரர்கள், கட்டுரை தந்து உதவிய அறிஞர்கள், ஆசியுரை வழங்கிய கல்விமான்கள், எமது கல்லூரி மாணவர்கள், அனைவரையும் இவ்வேளையில் நினைவு கூர்ந்து நன்றியை மகிழ் வுடன் தெரிவிக்கின்றேன்.

தொடர்ந்தும் தங்களின் ஆசியும், உதவியும் 'வணிகச்சுடர்' ஒளி விட வருடாவருடம் அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நன்றி.

**M. வேலாயுதபிள்ளை**
பொறுப்பாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவத்துக்கு களப்பயிற்சி



இன்று உலகில் காணப்படுகின்ற பல துறைகளுள் மிகவும் துரிதமாக வளர்ந்து வரும் துறை வர்த்தக துறையாகும்.

இத்துறையானது இன்று பலதுறைகளுடன் இணைந்து வளர்ச்சியடைந்து வரும் துறையாகக் காணப்படுகின்றது.

இச் சிறப்புமிகு துறையில் கல்வி பயிலும் மாணவர்கள் கடந்த காலங்களில் குறைவாக காணப்பட்டபோதும் இன்று பெரும்பாலான மக்கள் மிகவும் விருப்பத்துடன் இத்துறையை நாடிவருதல் காணக்கூடியது.

இந்நிலையில் வணிக மாணவர்களின் அறிவினை வளர்க்க கூடிய நூல்கள் தமிழ்மொழியில் குறைவாகக் காணப்படுகின்றன. மாணவர்களின் அறிவுப்பசியினை போக்குவதற்கு இன்று யாழ்மாவட்ட பாடசாலைகள் பல வணிகத்துறை சார்ந்த நூல்களை வெளியிட்டு வருகின்றன. அதுமட்டுமன்றி மாணவர்களுக்கிடையே சிறந்த முகாமைத்துவத்தினையும் வளர்ப்பதற்கும் வாய்ப்பாக அமைகின்றன.

இதனை அடிப்படையாகக் கொண்டே எமது பாடசாலையில் 1993 ஆம் ஆண்டு மாணவர்களினால் வணிகமாணவர் மன்றமானது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அவ்ஆண்டில் எமது வணிகத் துறையின் வெள்ளிவிழா மலராகவும் முதல் மலராகவும் விளங்குகின்ற வணிகச்சுடரானது செல்வன் செ. சர்வேஸ்வரனின் தலைமையில் 18-11-92 அன்று பிரகாசமாகியது.

இன்றைய நெருக்கடியான காலகட்டத்திலும் இம்மலரினை குறுகிய காலத்தில் எல்லோருடைய ஒத்துழைப்பாலும் அச்சிட்டு வெளியிட கூடியதாக உள்ளது. அதிலும் எமது செயற்பாடுகளுக்கான ஆலோசனைகளையும் சதல உதவிகளையும வழங்கியமையும் "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்ற தன்மை கொண்ட அதிபரின் சேவையும் எமக்கு மிகவும் உற்சாகத்தை ஊட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோளோடு தோள் நின்று எமக்கு சகலவித ஒத்துழைப்பையும் உதவிகளையும் ஆலோசனைகளையும் தந்து எம்மை நேரான பாதையில் வழிநடத்திச் செல்லும் தன்நலம் அற்றசேவையும் உடைய பொறுப்பாசிரியர் இங்கு குறிப்பிடத்தக்கவர்.

கட்டுரைகளைத் தந்துதவிய பேராசான்மார் அதற்கு ஆக்கம் ஊக்கம் அளித்துவரும் ஆசிரியர்கள் மாணவர்களின் செயற்பாடும் இச் சுடர் வெளியீட்டில் முக்கிய இடம் வகிக்கின்றது.


மலர் வெளியீட்டிலும் அதையொட்டி விழாவினை தலைமைதாங்குவதற்கும் எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததை இட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அடுத்தடுத்து வரும் கல்வியாண்டு மாணவர்கள் இப்பணி தொடர அயராது உழைக்க வேண்டும் எனவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**குமாரசாமி குமாரதாசன்**
தலைவர்,
வணிக மாணவர் மன்றம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் பிரகாசிக்கும்



எமது கல்லூரியின் வணிக மாணவர் ஒன்றியம் 1992 இல் ஆரம்பிக்கப்பட்டது.

இன்னல்கள் சூழ்ந்துள்ள வேளையில் ஆசிரிய, மாணவர்களின் ஒத்துழைப்புடன் பெரு முயற்சிக்கு மத்தியில் முதலாவது சுடர் 1992 இல் வெளிவந்தது.

அவர்கள் காட்டிய வழியில் அவர்கள் முயற்சியைப் பின் தொடர்ந்து – இரண்டாவது சுடரை வெளியிட எமக்குதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

சொல்ல வொண்ணாத் துன்பங்கள் சூழ்ந்த இவ்வேளையில் நாம் இரண்டாவது சுடரை வெளியிடத் தீர்மானித்த போது அகமகிழ்வுடன் முகமலர்ச்சியுடன் எமக்கு வழிகாட்டி நல்லுதவி புரிந்த எங்கள் அதிபர் அவர்களுக்கு மனமுவந்த நன்றிகள்.

அன்பான பொறுப்பாசிரியரினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளும் இரவு பகல் பாராது எமக்கு எந்நேரமும் நல்கிய ஒத்துழைப்பும், பொன்னான மிடுக்கான செயற்பாடுகளும் உதவிய ஆசிரியர்களின் அசையாத நம்பிக்கைகளும் எமது வணிகச் சுடர் தொடர்ந்து பிரகாசிக்க வழிகோலியது.

சுடரைப் பொலிவுற அமைப்பதற்கு பெருமுயற்சியுடன் ஆக்கங்களை அளித்துதவிய யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர்களுக்கும், எமக்க ஆசியுரை வழங்கிய பெரியோர்களுக்கும், கட்டுரைகள் தந்துதவிய மாணவர்களுக்கும், எமது மன்றத்தின் முன்னாள் பொறுப்பாசிரியையும் தற்போதைய ஆசிரியஆலோசகருமான செல்வி நா. வேலுப்பிள்ளை – அவர்களின் வழிகாட்டலும் ஒத்துழைப்பும் இன்றும் எமக்குண்டு – அவர்களுக்கும்,

எமது கல்வி வளர்ச்சியில் தமக்கும் பங்குண்டு என்ற மனப்பாங்குடன் விளம்பரங்கள் தந்துதவிய நிறுவனங்களுக்கும், இச் சுடரை ஏற்ற உதவிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

அடுத்துவரும் எம் வணிகத்துறைசார் மாணவர்கள் இச்சுடர் மேலும் பிரகாசிக்க உழைக்க வேண்டுமென்று அன்புடன் வேண்டுகின்றேன்.

க. சிவதாசன்
செயலாளர்,
வணிக மாணவர் மன்றம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகச்சுடரை வாழ்த்துகிறோம்

# நியூ பாமா ஹாட்வெயர்ஸ்

இல. 11/3, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

வணிகச்சுடரை வளர வாழ்த்துகிறோம்

# சண்முகா ஏஜென்சி

இல. 6, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே . . .


★ வெளிநாட்டு கடன்களும்... மா. சின்னத்தம்பி — 21

★ விலைச் சுட்டெண்... ச. ரஞ்சிதரூபன் — 27

★ இலங்கையின் உல்லாசப் பயணத் துறை... வி. ஆரூரன் — 33

★ வாடகைக் கொள்வனவு கே. கே. அருள்வேல் — 37

★ அடிப்படைக் கணக்கியல்... இ. ரகுராகவன் — 46

★ வியாபார மூலதனம்... தே. ஜெயராமன் — 53

★ புதிய நிறுவனம்... அ. ஜெயதீபன் — 57

★ இலங்கை ஏற்றுமதி... அ. வின்சர்ஜோன் — 60

★ பிரித்தானியாவின்... க. றொபேட் — 66

★ யாழ்ப்பாண மாவட்ட மீன்பிடி க. சிவதாசன் — 74

★ அத்வைத... நாச்சியார் செல்வநாயகம் — 78

★ இந்தியக் கலைகள்... க. சுதன் — 86

★ இலங்கையின் கல்வி... செல்வி நா. வேலுப்பிள்ளை — 90

★ வாழ்க வணிகச்சுடர் வ. பிரபாகரன் — 94


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகச்சுடரை வாழ்த்துகின்றோம்

# சாந்தி ரெக்ஸ்ரைல்ஸ்

இல. 157, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

வணிகச்சுடரை வாழ்த்துகிறோம்

# சுந்தர்சன்

மத்திய சந்தை,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகச்சுடரை வாழ்த்துகிறோம்

## V. S. K. ஸ்ரோர்ஸ்

ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

வணிகச்சுடரை வாழ்த்துகிறோம்

## V. M. S. ஸ்ரோர்ஸ்

ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

வணிகச்சுடர் வளம் பெற வாழ்த்துகிறோம்

- READYMADE GARMENTS
- SHIRTINGS
- BLOUSE MATERIALS
- SAREES
- SUITINGS
- CHILDREN WEAR

# Lingam Silk House

No. 21, UPSTAIR,
MODEL MARKET, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகச்சுடரை வாழ்த்துகிறோம்

நாகரிகப் பொருட்கள். விளையாட்டுப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள் யாவும் நிதான விலையில்
கிடைக்குமிடம்:

**FASHION HOUSE** ★★★ பெஷன் ஹவுஸ்

இல: 65; காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

**Phone: 23046**

வணிகச்சுடர் வளம் பெற வாழ்த்துகின்றோம்


## நிகாணி

சகலவிதமான அழகுசாதனப் பொருட்கள்
இன்றைய நாகரிகத்திற்கு ஏற்றபடி இங்கு
மலிவாகவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

இல. 72. நவீன சந்தை.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணிக மாணவர் மன்றம் 1993 — 1994



இருப்பவர்கள் - இடமிருந்து வலம்:

மு. வேலாயுதபிள்ளை (பொறுப்பாசிரியர்), க. சிவதாசன் (செயலாளர்), கு. குமாரதாசன் (தலைவர்), ச. குகன் (பொருளாளர்), த. பகீரதராஜ் (பத்திராதிபர்), இ. மகேந்திரன் (அதிபர்)

நிற்பவர்கள் - இடமிருந்து வலம்:

ஈ. தமிழ்செல்வி (உப தலைவர்), S. அமுதரசி, சி. சுபாஜினி, (உப செயலாளர்), செ. சர்வேஸ்வரன் (முன்னாள் தலைவர்), சி. நிறஞ்சன் (விளம்பரதிபர்), து. ராம்ராஜ், செ. சுதேஸ், ம. அரவிந்தன் (விளம்பரதிபர்), நா. பத்மராஜா (கணக்காய்வாளர்).

வருகை தராதோர்:

கி. கிருபாகரன், இ. ரகுராகவன் (முன்னைநாள் செயலாளர்), S. குகேந்திரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா. சின்னத்தம்பி,
விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.

# வெளிநாட்டுக் கடன்களும் அபிவிருத்தியும் இலங்கை அநுபவம்

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களின் அபிவிருத்திக்கு மூலதன ஆக்கம், இறக்குமதி என்ற இரண்டும் அடிப்படைத் தேவைகளாகவுள்ளன. அபிவிருத்திக்குரிய முதலீட்டைச் செய்வதற்கான மூலதனத்தை வழங்கக்கூடியளவு சேமிப்பு அவசியம். அச்சேமிப்பு போதியளவு இருப்பது உள்நாட்டில் முதலீட்டைக் கூட்டும். ஆனால் சேமிப்பு மாத்திரம் போதுமானதன்று. ஏனெனில் குறைவிருத்தி நாடுகளில் சேமிப்பு போதியளவு இருந்தாலும் அபிவிருத்திக்குத் தேவைப்படுகின்ற தொழில்நுட்பம், முதற்கருவிகள் சிலவகையான கனிப்பொருட்கள் போன்றவற்றை பிறநாடுகளிலிருந்து பெறுவதற்கு இறக்குமதி செய்யவேண்டியதவசியம். இதற்குப் போதியளவு அன்னியச் செலாவணியைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில், சர்வதேச வர்த்தக ரீதியிலான பாதகநிலைமைகள் முதலீட்டு வருமானங்களின் அபரிமிதமான வெளிப்பாய்ச்சல் போன்றவற்றினால்போதுமான செலாவணி மீதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. இந்த நிலையில் பெரிதும் உதவக்கூடிய அபிவிருத்தி நிதி மூலமாக வெளிநாட்டுக் கடன்கள் விளங்குகின்றன.

இலங்கையின் அநுபவத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 5% னால் வருடாந்தம் உயர்த்துவதானால் 3545 மில்லியன் ரூபா அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது. அதனைப் 10% உயர்த்துவதானால் 8003 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது இந்தளவு அந்நியச் செலாவணி வளத் தேவையுள்ள நிலையில் அதனை ஈடுசெய்வதற்குக் கிடைக்கத்தக்க சாத்தியமான வெளிநாட்டு மூலமாக இருப்பது வெளிநாட்டு உதவி ஆகும்.

இந்த வெளிநாட்டு உதவி என்பது கொடைகளையும் கடன்களையும் உள்ளடக்குகின்றது. கொடைகள் திருப்பிக் கொடுக்க வேண்டிய தேவையில்லாதன. இதனால் எதிர்காலத்தில் நிதிரீதியான சுமையை அவை உருவாக்குவதில்லை.

அடுத்த அம்சமாக அமைவது வெளிநாட்டுக்கடன்களேயாகும். இந்தத் தொடர்பில் வெளிநாட்டுக்கடன்கள் பற்றியே இக் கட்டுரைகள் ஆராய்கின்றது

## உள்நாட்டு - வெளிநாட்டுக் கடன்கள்

இலங்கையின் வரவு செலவுத்திட்டமானது பொருளாதார அபிவிருத்தியில் அரசு கொண்டுள்ள கொள்கை சார்ந்த செயற்றிட்டத் தொடர்பிலான நிதி முற்கூறல்களைக் குறிப்பிடுவதாகும்.

அரசாங்கம் தனது மீண்டெழும் செலவினம் மூலதனச் செலவினம் என்பவற்றுக் கேற்றளவுக்கு வரிவருமானத்தையும், வரியல்லாத வருமானத்தையும் பெறமுடியாத போது கடன்களை நாடுகின்றது. இக்கடன்கள் உள்நாட்டுக் கடன்களாகவும் வெளிநாட்டுக்கடன்களாகவும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டுக் கடன்கள் பல அம்சங்களில் வெளிநாட்டுக் கடன்களிலிருந்து வேறுபடுகின்றன.

1) உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்படும் உள்நாட்டுக் கடன்கள் மத்திய வங்கியின் பணவெளியீடு மூலமாக அவசரநிலையில், தீர்த்துக்கொள்ளக் கூடியன.

2) உள்நாட்டுக் கடன்கள் சர்வதேச ரீதியிலான நாணய மாற்று விகிதங்களில் நிகழும் பாதிப்புக்களுக்கு உள்ளாவதில்லை.

வெளிநாட்டுக் கடன்கள் நாணயப் பெறுமதி மாற்றங்களுக்கு உட்பட்ட வகையில் அதிகளவு பாதிப்புக்குள்ளாகக் கூடியன. இலங்கை போன்ற நாடுகளில் இப்பாதிப்பு அதிகமாகும்.

3) உள்நாட்டுக் கடன்கள் இலங்கையின் அபிவிருத்தி தொடர்பான கொள்கையில் அரசாங்கத்தின் இறைமையை மறுதலிக்க மாட்டாது.

ஆனால் வெளிநாட்டுக் கடன்கள் பல சமயங்களில் பிணைக்கப்பட்ட உதவியின் கீழ் வரும்போது இலங்கை அரசின் தீர்மானங்களை மாற்றியமைக்க வல்லதாக அமைந்துவிடுகிறது. இது இலங்கை அரசின் இறைமையை மட்டுப்படுத்துவனவாக வெளிநாட்டுக் கடன் செயற்படுவதைக் குறிக்கும். இலங்கையில் அரசியல் சமூக செயற்திட்டங்களில் கடன் வழங்குவோர் ஆதிக்கம் செலுத்தும் நிலையை உருவாக்கிவிடும்.

இந்த அடிப்படையில் வெளிநாட்டுக் கடன் சுமை பிரச்சினைக்குரியதாக அமைகிறது. இதனால் அதிகளவு வெளிநாட்டுக் கடன் பெறுவதை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் விரும்புவதில்லை.

## கடன் அளவும் சேர்க்கையும்

இலங்கையின் வெளிநாட்டுக்கடன்கள் படிப்படியாக அதிகரித்தே செல்கின்றன. ரூபாய் அடிப்படையில் இக்கடன் அதிகரிப்பினை அட்டவணை 1 காட்டுகிறது.

அட்டவணை ஒன்று

இலங்கையின் வெளிநாட்டுக்கடன்கள் 1978 - 1992

| வருடம் | மில்லியன் ரூபா | மில்லியன் சி எ உ |
|---|---|---|
| 1978 | 3215.3 | 206.4 |
| 1988 | 7085.8 | 165.7 |
| 1992 | 243850.2 | 3948.9 |

*Source:* Sri Lanka Socio Economic Da ta 1990
Central Bank Annual Report 1992.

இக்கடன்கள் பல்பக்க மூலவளங்களிலிருந்தும் நிதிச்சந்தைகளிலிருந்தும் பெறப்பட்டன.

பல்பக்க மூலங்கள் பெரிதும் சர்வதேச ரீதியில் தொழிற்படும் பொருளாதாரக் கூட்டிணைப்புக்களாகவும், நிதிநிறுவனங்களாகவும் காணப்பட்டன. ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, சர்வதேச நாணய நிதி, ஐரோப்பிய சமூகம், ஒபெக், வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் போன்றவற்றிடமிருந்து இவை திரட்டப்படுகின்றன. வெளிநாட்டுக்கடன்களில் 30% - 45%



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை இந்த மூலங்களிடம் இலங்கை பெறுகிறது.

இருபக்க மூலங்கள் இலங்கையுடன் தொடர்புடைய நாடுகளினால் வழங்கப்படுவதாகும். வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகள் பலவற்றுடன் இந்தியா, சீனா, குவைத், சவுதி அரேபியா போன்றனவும் இதனை வழங்குகின்றன. 40% – 60% வரையிலான கடன்களை இவை இலங்கைக்கு வழங்கியுள்ளன.

சர்வதேச ரீதியில் இயங்கும் யூரோ நாணயம், அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி, சுவீடன், ஜப்பான் நாடுகளின் நிதியமைப்புக்கள் போன்றவற்றிடமிருந்து இவை பெறப்படுகின்றன. இவற்றின் பங்கு 5% – 10% வரையிலேயே அமைவதுண்டு.

வெளிநாட்டுக்கடன்கள் செயற்றிட்ட அடிப்படையிலேயே அதிகம் பெறப்படுகின்றன. இவை நடுத்தவணையிலோ, நீண்டதவணையிலோ பெறப்படும். மொத்த இலங்கையின் வெளிநாட்டுக் கடன்களில் 60% வரை இவைகாணப்படுகின்றன. பல்பக்க மூலங்கள் பெருமளவுக்கு இவற்றையே வழங்க விரும்புகின்றன. செயற்றிட்டமல்லாத கடன்கள் ஒப்பீட்டுரீதியில் குறைவாவே காணப்படுகின்றன.

அட்டவணை இரண்டு

கடன் சேர்க்கைகள் 1983 – 1992

| விடயம் | 1983 மில் ரூபா | சதவீதம் | 1992 மில் ரூபா | சதவீதம் |
|---|---|---|---|---|
| பல்பக்க மூலம் | 12830.5 | 27.5 | 91,167.2 | 38.8 |
| இருபக்க மூலம் | 27644.0 | 59.2 | 133,325.0 | 56.8 |
| நிதிச்சந்தை | 6213.3 | 13.3 | 10,358.0 | 4 .4 |
| | 4[illegible]687.8 | 100.0 | 234,850.2 | 100.0 |

மூலம்: இலங்கை மத்தியவங்கி அறிக்கை – 1992, அட்டவணை 76.

## பெயரளவுக் கடனும் மெய்க்கடனும்

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் ரூபாய் வடிவில் பன்மடங்கு பெருகிச் சென்றுள்ளது. 1980 இல் 30 பில்லியன் ரூபாவாக இருந்த இக்கடன் 1987 இல் 145 பில்லியன் ரூபாவாகவும் அதிகரித்தது. ரூபாய் வடிவிலான இக் கடன் அதிகரிப்பு வெளிநாட்டுக் கடனின் மெய்ப் பெறுமதியைக் குறிக்கும். இக்கடன்களுக்காக இலங்கை இழக்கவேண்டிய வளத்தின் அளவினை இது குறிப்பிடுகின்றது.

சி எ உ (SDR) இல் கணிக்கும் போது நாணய மாற்று விகித வேறுபாடுகளின் பாதிப்பினைத் தவிர்த்துவிட முடிகிறது. ஆனால் அது நாடு தியாகம் செய்யவேண்டிய ஏற்றுமதி அளவினைக் காட்டுவதில்லை. அவ்வாறே கடனுக்காக இழக்க வேண்டிய இறக்குமதித் தொகையையும் சி எ உ பெறுமதியிலான கடன் அளவு காட்டுவதில்லை.

உண்மையான வெளிநாட்டுக் கடன் சுட்டெண்ணானது (The Real external debt Index) கடனுக்கான ஏற்றுமதி அலகுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான இறக்குமதி அலகுகளினால் பிரிப்பதன் மூலம் பெறப்படுகிறது. இச்சுட்டெண் 100 லும் கூடுதலாக இருப்பின் கடனுக்காக நாடு இழக்கவேண்டியது அதிகம் என்பதையும் 100 இலும் குறைவாக இருப்பின், தியாகம் செய்யவேண்டிய அளவு குறைவு என்பதையும் இச்சுட்டென் ( REDI ) குறிப்பிடுகின்றது.

அட்டவணை மூன்று

இலங்கையின் வெளிநாட்டுக்கடன் சுட்டெண்கள் ( 1981 = 100 )

| விடயம் | 1980 | 1987 |
|---|---|---|
| பெயரளவு வெ. நாட்டுக்கடன் ( ரூபாவில் ) | 70.8 | 341.3 |
| பெயரளவு வெ. நாட்டுக்கடன் ( சி எ உ ) | 73.6 | 187.3 |
| மெய் வெளிநாட்டுக்கடன் | 93.4 | 88.3 |

மூலம்: P.113 Table 8 – Staff Studies – Vol 16 No 1 + 2

1980 - 1987 காலப்பகுதியில் மெய் வெளிநாட்டுக்கடன் ( Real External Debt ) நிலையினை ஒப்பிட்டுக் கொள்வதற்கு இச்சுட்டெண்கள் பயன்படுகின்றன. 1980 ஐ விட 1987 இன் நிலைமை திருத்தமடைந்திருப்பதைக் காட்டுவதாக இவை அமைகின்றன.

## வட்டி வீதங்கள் ( INTEREST RATES )

இலங்கை அநுபவத்தில், சராசரிப் பெயரளவு வட்டிவீதம் ( Average Nominal Interest Rate ) உலக சந்தை வட்டி வீதங்களை விடக் குறைவானதாகவே பெரிதும் அமைந்திருந்தன. 1980 – 87 காலப்பகுதியில் இலங்கை செலுத்திய சராசரி வட்டி வீதம் 3.83 சதவீதமாயிருந்தது. யூரோ செலாவணியின் வட்டி வீதம் 9 ஆகவும் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் செலுத்திய வட்டி வீதம் 8.75 சதவீதமாயிருந்த நிலைமையுடன் ஒப்பிடும்போது இலங்கை நிலைமை திருப்திகரமானது. இதனால் இலங்கையின் கடன் பளு குறைய முடிந்தது.

பெயரளவு வட்டி வீதங்களை விட மெய் வட்டி (Real Interest Rates ) வீதங்களே முக்கியமானவை. இலங்கையின் ஏற்றுமதி விலைச்சுட்டெண்ணுக்கு ஏற்ப பெயரளவு வட்டி வீதங்களை சீராக்கம் செய்யும்போதே மெய் வட்டிவீதம் பெறப்படுகின்றது. இதன்படி நோக்கும்போது இலங்கைக்குச் சாதகமான போக்கிலேயே வட்டி வீதங்கள் மாறிச் சென்றுள்ளன. அட்டவணை 4 இதனைத் தெளிவாகக் காட்டும்.

அட்டவணை நான்கு

சராசரிப் பெயரளவு, சராசரி மெய்வட்டி வீதங்கள் 1980 – 1987

| | 1980 | 1987 |
|---|---|---|
| சராசரிப் பெயரளவு வட்டி வீதம் | 3.27 | 3.55 |
| ஏற்றுமதி விலைச்சுட்டெண் மாற்றம் | 12.20 | 15.87 |
| சராசரி மெய் வட்டி வீதம் | -8.93 | -12.32 |
| ஏனைய அபிவிருத்தியடையும் நாடுகள் செலுத்திய சராசரி மெய் வட்டி வீதம் | -2.5 | -5.00 |

Source: P.116, Table 9. Staff Studies. Vol 16 No. 1 + 2.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்வட்டி வீதங்கள்எதிர்க்கணியத்தில் இருப்பதால் இலங்கைக்கு சார்பான நிலையைக் காட்டுகின்றது. ஏனைய அபிவிருத்தியடைந்துவரும்நாடுகளின் சராசரியைவிடவும் இலங்கையின் சராசரி மெய்வட்டி வீதம் குறைவாயிருப்பதும் திருப்திகரமான நிலைகைமளாக அமைகின்றன.

### படுகடன் பணி விகிதங்கள்
### *Debt Service Ratios*

நடுத்தர, நீண்டகால கடன் தீர்ப்பனவு கடன் மீதான வட்டிக் கொடுப்பனவு என் பவற்றை ஏற்றுமதி வருமானங்களின் வீதமாகக் கணிக்கும் படுகடன் பணிகளுக்கான வீதம் கடன் தீர்க்கும் தகுதியைக் காட்டுவதாகும். இது ரூபாய் அடிப்படையிலும் சி எ உ அடிப்படையிலும் கணிக்கப்படுவதுண்டு. 1988 – 92 காலப்பகுதியிலான இந்த வீதங்களை அட்டவணை 5காட்டுகின்றது.

அட்டவணை ஐந்து

வெளிநாட்டுப் படுகடன் பணி விகிதங்கள் 1988 – 1992

| விடயம் | 1988 | 1992 |
|---|---|---|
| படுகடன் பணி விகிதம் ( தனியார் மாற்றல் சேராமல் ) | 28.7 | 16.7 |
| படுகடன் பணிவிகிதம் ( தனியார் மாற்றல் சேர்த்தது ) | 24.1 | 14.3 |

மூலம்: அட்டவணை 1, 49, இலங்கை மத்திய வங்கி அறிக்கை 1992

இலங்கை 1980 களின் பின் வெளிநாட்டுக் கடன்களை முதலீடுகளிற் பயன்படுத்தியதாலும், ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்ததாலும் இத்தகைய சார்பான நிலைமை தோன்றியிருந்தது.

### முடிவுரை

எதிர் காலத்தில் இலங்கை வெளிநாட்டுக் கடன்களில் சலுகைக் கடன்களை அதிகம் பெற முடிந்தால் கடன் சுமையைக் குறைக்க முடியும். வர்த்தக ரீதியிலான தனியார் துறைக்கடன்களை இயன்றளவு குறைப்பதும் அவசியமாகும். இயன்றளவு பாதுகாப்பான முறையில் கொடைகளைப் பெறுவதும் கடன் சுமையைக் குறைக்கும்

பாதீட்டுப் பற்றாக் குறையை இயன்றளவு மூலதனக் கண்க்கு மிகை நிலையுடன் தொடர்புபடுத்த முயலுதல் வேண்டும். மூலதன உட்பாய்ச்சலுக்கு அனுமதியளிப்பது இதற்கு அவசியம். கடன் தவணைக்காலத்தை இயன்றளவு உயர்த்த வேண்டும். இலங்கை 1970 ல் 26 வருடமாக இருந்த சராசரி முதிர்ச்சிக் காலம் 1986 இல் 33 வருடமாக உயர்த்தப்பட்டமை கவனிக்கத்தக்கது. தயை காலத்தை அதிகரிப்பதும் உதவியாக அமையும்.

இத்தகைய விடயங்களின் கட்டுப்பாடுகளைப் பிரயோகிக்க முடிந்தால் எதிர்காலத்தில் வெளிநாட்டு வளங்களை உயர்த்தக் கூடிய வகையிலும் இலங்கையின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையிலும் வெளிநாட்டுக் கடன்களைப் பயன்படுத்த முடியும். □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## REFERENCE

1. Wijewardena W.A ( 1989 )
" External Debt Management: Strategies The Case of Sri Lanka. " *STAFF STUDIES* Vol 16. No 1 + 2 Central Bank of Sri Lanka. Colombo P. 103 - 135

2. Dahanayake P.A.S ( 1975 )
" External Resource Requirements for Economic Growth in Sri Lanka: An Empirical Analysis ", *STAFF STUDIES* Vol. 5 No. 1 Central Bank of Sri Lanka, Colombo P. 75 - 116

3. Central Bank of Sri Lanka. ( 1990 ) " *Sri Lanka Socio - Economic Data 1990* " Central Bank of Sri Lanka P. 17

4. இலங்கையின் மத்திய வங்கி ( 1992 )
1992 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை இலங்கை மத்திய வங்கி, கொழும்பு பக்கங்கள் 155 - 160.

5. சின்னத்தம்பி. மா. ( 1990 ) அரசநிதி, அபிவிருத்தி அபிவிருத்தி நிறுவனம் கொக்குவில். பக்கங்கள் 91 - 102.

### ஆசிய வளர்ச்சி வங்கி
### *Asian Development Bank — A D B*

1966-ல் இருந்து செயற்பட ஆரம்பித்தது. 1974 ஜூனில் ஆசிய வளர்ச்சி நிதி நிறுவனத்தைத் தொடக்கியது. ஆசியாவிலுள்ள உறுப்பு நாடுகளுக்கு சலுகை விகிதத்தில் கடன் அளிப்பதை தன்நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஜப்பான் நாட்டின் நிதி உதவியால் செயற்படுகிறது.

தலைவர்- சிமிமாம்சா தாருமிசா (ஜப்பான்)

தலைமைப் பீடம்- மணிலா, பிலிப்பைன்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. ரஞ்சிதரூபன்
ஆண்டு 13
வர்த்தகப் பிரிவு 94

# விலைச் சுட்டெண்

பொருட்கள், சேவைகளின் விலைகளில் ஏற்படுகின்ற மாற்றத்தினை அளவிடப் பயன்படும் ஓர் குறிகாட்டியே விலைச் சுட்டெண் ஆகும். அதாவது விலைமட்டம் அதிகரித்துள்ளதா ? அல்லது குறைவடைந்தள்ளதா ? என்பதைக் கணிப்பதற்கு பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஒரு சுட்டியே விலைச் சுட்டெண் ஆகும். மேலும் விலைச் சுட்டெண் என்பது குறிப்பிட்ட காலப் பகுதியில் பொதுவிலை மட்டம் எவ்வாறு மாற்றமடைந்து செல்கிறது. என்பதனை அறியப்பயன்படும் சுட்டெண்ணே விலைச் சுட்டெண் ஆகும்.

நாட்டில் ஏற்படும் பொதுவிலை மட்ட மாற்றத்தை கணிப்பிடப் பயன்படும் விலைச் சுட்டெண்ணை பின்வருமாறு நோக்கலாம்.

1. நுகர்வோர் விலைச் சுட்டெண் அல்லது சில்லறை விலைச் சுட்டெண்
2. மொத்த விற்பனை விலைச் சுட்டெண்
3. உள்ளார்ந்த மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி
4. இறக்குமதி விலைச் சுட்டெண்
5. ஏற்றுமதி விலைச் சுட்டெண்

இவ் விலைச் சுட்டெண்களைக் கணிப்பிடும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சங்கள் பின்வருமாறு,

1. கணிப்பீட்டிற்குரிய பொருளைத் தெரிந்து எடுத்தல்
2. கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகின்ற பொருட்களின் முக்கியத்துவத்திற்கேற்ப நிறையளித்தல்
3. கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகின்ற பொருட்கள் சேவைகளின் விலைமாற்றங்களைக் கவனத்திற் கொள்ளல்.
4. ஓர் அடிப்படையாண்டைத் தெரிவு செய்து அவ் ஆண்டின் விலைகள் சராசரியாக 100% ஆக எடுத்துக் கொள்ளுதல்.

போன்ற அம்சங்களை அடிப்படையாகக் கொண்டே விலைச் சுட்டெண் கணிப்பிடப்பட வேண்டும்.

## நுகர்வோர் விலைச் சுட்டெண்

நுகர்வோர் விலைச் சுட்டெண் என்பது குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் சில்லறை விலைகளில் ஏற்படும் மாற்றத்தை அளவிடப் பயன்படும் குறிகாட்டியே நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகும்.

இதனைக் கணிப்பிடும் முறையினைக் கருதுகோள் அளவாகப் பின்வருமாறு நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பண்டங்கள் | நிறை | வாழ்க்கைச் செலவு (அடிப்படை ஆண்டு) | வாழ்க்கைச் செலவு (நடைமுறை ஆண்டு) | மாற்றம் | மாற்றவீதம் |
|---|---|---|---|---|---|
| உணவு | 5 | 25 | 50 | 25 | $\frac{25}{25} \times 100 = 100 \times 5 = 500$ |
| உடை | 1 | 40 | 50 | 10 | $\frac{10}{40} \times 100 = 25 \times 1 = 25$ |
| எரிபொருள் | 2 | 20 | 25 | 05 | $\frac{5}{20} \times 100 = 25 \times 2 = 50$ |
| வாடகை | 1 | 30 | 50 | 20 | $\frac{20}{30} \times 100 = 67 \times 1 = 67$ |
| தேனீர் | 1 | 50 | 80 | 30 | $\frac{30}{50} \times 100 = 60 \times 1 \doteq 60$ |

∴ நுகர்வோர் விலைச் சுட்டெண் $= \frac{702}{5} = 140.4$

இங்கு அடிப்படையாண்டு விலைச் சுட்டெண் 100 ஆக உள்ளது. ஆனால் நடைமுறையாண்டு விலைச் சுட்டெண் 140.4 ஆக உள்ளது. எனவே நடைமுறை ஆண்டில் பொருட்கள் சேவைகளின் விலை 40.4% ஆல் அதிகரித்துள்ளமை புலனாகின்றது. இவ் விலைச் சுட்டெண் கணிப்பீட்டின் மூலம் நாட்டின் பொதுவிலைமட்டம் அதிகரித்துள்ளது. அதனால் மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. எனவே மக்களின் வாழ்க்கைத் தரம் குறைவடைந்துள்ளது போன்ற முடிபுகளை நாம் அறியக் கூடியதாகவுள்ளது.

இலங்கையில் பொதுவிலைமட்டப் போக்கின் மாற்றத்தை அளவிடப் பயன்படும் சுட்டெண்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. கொழும்பு நுகர்வோர், விலைச் சுட்டெண்
2. மொத்த விற்பனை, விலைச் சுட்டெண்
3. உள்ளார்ந்த மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி

## கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

1952-ம் ஆண்டு கொழும்பு மாநகரில் வாழ்கின்ற நடுத்தரத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் பற்றி ஓர் சமூக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இச் சமூக ஆய்வு மூலமே கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கணிக்கப்படுகின்றது. இதனைப் பின்வருமாறு வரையறை செய்ய முடியும்.

கொழும்பு மாநகரில் வாழ்கின்ற நடுத்தரத் தொழிலாளர் நுகருகின்ற பொருட்கள், சேவைகளின் சில்லறை விலைகளில் ஏற்படுகின்ற சராசரி விலைமட்டப் போக்கினை எடுத்துக்காட்டும் சுட்டெண்ணே கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகும்.

இதனை இலங்கை குடித்தொகை மதிப்பீட்டுப் புள்ளிவிபரத் திணைக்களம் 1952ம் ஆண்டை அடியாண்டாகக் கொண்டு கணிப்பீடு செய்து வருகின்றது. ( 1952 = 100 ) இக் கணிப்பீட்டிற்கு அவற்றின் முக்கியத்துவத்திற்கு இணங்க பின்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பண்டம் | நிறை (100%) |
|---|---|
| உணவு | 61.9 |
| உடை | 9.4 |
| எரிபொருள் | 4.3 |
| வாடகை | 5.7 |
| ஏனையவை | 18.7 |

இவ் வகையாகப் பொருட்களின் கணிப்பீட்டினை மூன்று துறைவாரியாகவும் கணிப்பிட முடியும்.

1. உள்நாட்டுத் துறை
2. ஏற்றுமதித் துறை
3. இறக்குமதித் துறை

இலங்கையில் இவ்வாறாகக் கணிப்பிடப்படும். கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மூலம் பொருளாதாரத்தில் பின்வரும் அனுகூலமான விளைவுகள் தோன்றியுள்ளன. அவை பின்வருமாறு

1. நாட்டின் பொதுவிலைமட்டப் போக்கினை அறியப் பயன்படுகின்றது.
2. மக்களின் வாழ்க்கைத்தரம், வாழ்க்கைச் செலவை அறியப் பயன்படுகின்றது.
3. மெய்க் கூலியின் அளவைத் தீர்மானிக்க இது உதவும்.

போன்ற அனுகூலங்கள் இருந்த போதிலும் இவ் விலைச் சுட்டெண்ணைக் கணிப்பதால் நாட்டின் உண்மையான விலை மட்டமாற்றத்தை அறிய முடியாதுள்ளது. இதனால் இவற்றின் கணிப்பீட்டில்பின்வரும் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படுகின்றது

1. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கணிப்பீட்டிற்கு கொழும்பு மாநகரில் வாழ்கின்ற நடுத்தரத் தொழிலாளரின் நுகர்வு நாட்டம் மாத்திரமேகருத்திற் கொண்டு கணிப்பிடப் படுகின்றமையால் நாட்டின் ஏனைய பாகங்களின் உண்மையான கணிப்பீட்டைப் பெற முடியாதுள்ளது.
2. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1952 ஆம் ஆண்டை அடியாண்டாகக் கொண்டு கணிப்பிடப்படுவதால் அடிப்படையாண்டிற்கும் இக் காலப் பகுதிக்குமிடையில் அதாவது நடைமுறையாண்டிற்கும் இடையில் சுமார் 40 ஆண்டுகள் இடைவெளி நிலவுகின்றது. எனவே இக் காலப் பகுதிகளிற்கிடையில் நுகர்வின் மாற்றம் கவனத்தில் எடுக்காமல் கணிப்பிடுவதும் ஒரு குறைபாடாகவுள்ளது.
3. இலங்கை அரசு விதித்த கட்டுப்பாட்டு விலை, மானியம் விதித்தபின் விலை என்பவற்றை கருத்திற் கொண்டு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கணிப்பிடப்படுவதால் உண்மையான பொருளாதார நிலமையை இது வெளிக்காட்டாது.

போன்றவற்றைக் குறிப்பிடலாம். கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கணிப்பிட்டு பெற்ற தரவுகள் கடந்த 5 ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்பு வருமாறு.

| ஆண்டு | கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண். |
|---|---|
| 1988 | 744.1 |
| 1989 | 830.2 |
| 1990 | 1018.5 |
| 1991 | 1113.5 |
| 1992 | 1260.5 |

இவ்வாறு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளமைக்கு பின்வருவன அடிப்படையாக அமைந்தன.

1. தேசிய உற்பத்தியிலும் பார்க்கப் பண நிரம்பல் அதிகரித்துள்ளமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு பண வீக்கத்தன்மை கொண்ட மூலகங்களிலிருந்து கடன்பெற்றமை அதாவது வணிக வங்கி, மத்திய வங்கி போன்றவற்றிடம் இருந்து அரசு கடன்பெறும் போது நாட்டின் பண நிரம்பல் அதிகரித்துப் பண வீக்கம் ஏற்படும்.

3. நேரில் வரிகள் அதிகரிப்பு போன்ற காரணங்களாலேயே கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது.

## மொத்த விற்பனை விலைச்சுட்டெண்

மொத்த விற்பனை விலைச்சுட்டெண் என்பது பொருட்களின் மொத்த விற்பனைகளில் ஏற்படும் மாற்றத்தை அளவிடப் பயன்படும் ஒரு குறிகாட்டியாகும். அதாவது சந்தைப்படுத்தப்படுகின்ற பொழுது சந்தையிலுள்ள ஆரம்ப விலையினை அடிப்படையாகக் கொண்டு மொத்த விற்பனை விலையில் ஏற்படும் மாற்றத்தை அளவிடப் பயன்படும் சுட்டியே மொத்த விற்பனை விலைச் சுட்டெண் ஆகும்.

இவ் விலைச்சுட்டெண் 1974 ஆம் ஆண்டை அடியாண்டாகக் கொண்டு இலங்கை மத்திய வங்கியினால் கணிப்பிடப்பட்டு வருகின்றது. ( 1974=100 ) இவ் விலைச் சுட்டெண் கணிப்பீட்டின் போது பின்வரும் பொருட்கள் அவற்றின் முக்கியத்துவத்திற்கு இணங்க நிறையிடப்பட்டு கணிப்பிடப்படுகின்றது.

| பண்டவகை | நிறை |
|---|---|
| 1. உணவு | 67.08 |
| 2, வெறிதரும் குடிவகை | 2.86 |
| 3. புடவை காலணிகள் | 4.02 |
| 4. தாள் உற்பத்திகள் | 1.37 |
| 5. இரசாயன இரசாயனமல்லா உற்பத்திகள் | 5.16 |
| 6. பெற்றோலிய உற்பத்திகள் | 6.42 |
| 7. உலோக மல்லாத உற்பத்திகள் | 1.78 |
| 8. உலோக உற்பத்திகள் | 0.93 |
| 9. போக்குவரத்துக் கருவி | 0.80 |
| 10. மின் கருவிகள் | 0.96 |
| 11. பொறிகள் | 1.35 |
| 12. எரிபொருளும் வெளிச்சமும் | 1.70 |
| 13. பல்வகை ( ஏனையவை) | 4.85 |

போன்ற பல்வேறுபட்ட பொருட்களும் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் கணிப்பீட்டிற்கு சேர்க்கப் படுகின்றது. இதனால் இவ் விலைச் சுட்டெண் கணிப்பீட்டின் மூலம் உண்மையான விலைமட்டப் போக்கினைக் கணிப்பிட முடியும்.

| ஆண்டு | கொழும்புநுகர் வோர்விலைச் சுட்டெண் | மொத்தவிற் பனை விலைச் சுட்டெண் |
|---|---|---|
| 1989 | 830.2 | 532.9 |
| 1990 | 1008.5 | 651.1 |
| 1991 | 1131.5 | 710.8 |
| 1992 | 1260.4 | 773.0 |

மேற்காட்டப்பட்ட 4 ஆண்டு தரவுகளின்படி இலங்கையில் கணிப்பிடப்படும் இரு விலைச் சுட்டெண்களும் வேறுபட்ட விகித சாரத்தில் அதிகரித்துள்ளது. இவ்வாறு வேறுபட்ட விகிதாசார அதிகரிப்பிற்கு பின் வரும் காரணங்களை அடிப்படையாகக் கூறலாம்.

1. அடிப்படை ஆண்டு :- இரு விலைச் சுட்டெண்களும் அடிப்படையாண்டில் பின் வேறுபட்டுக் காணப்படுகின்றன. அதாவது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1952ம் ஆண்டையும், மொத் விற்பனைவிலைச் சுட்டெண் 1974 ம் ஆண்டையும் அடியாண்டாகக்கொண்டு கணிப்பிடப்படுகின்றன. இருவிலைச்சுட்டெண்களும் வேறுபட்ட விகிதாசாரமாக மாற்றத்தைக் கொண்டுள்ளன.

2. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் சில்லறை விலையில் ஏற்படும் மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப் படுகின்றது. ஆனால் மொத்தவிற்பனை விலைச் சுட்டெண் மொத்த விற்பனை விலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் மாற்றத்தைக்கொண்டு கணிப்பிடப்படுகின்றது.

3. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கொழும்பு மாநகரில் ஏற்படும் மாற்றத்தை கவனத்தில் கொண்டு கணிப்பிடப்பட மொத்த விற்பனை விலைச் சுட்டெண் நாடு பூராகவும் ஏற்படும்மாற்றத்தை கவனத்திற் கொண்டு கணிப்பிடப்படுகின்றது.

போன்ற காரணங்களினால் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணும் ஒரே ஆண்டில் வேறுபட்ட விகிதாசார மாற்ற அளவைக்காட்டுகின்றன.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை விட மொத்த விற்பனை விலைச் சுட்டெண் கணிப்பதால் ஏற்படும் அனுகூலங்களாக

1. பலதுறை சார்ந்த பொருட்கள் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் கணிப்பீட்டில் எடுக்கப்படுகின்றது.

2. நாடு பூராகவும் கணிப்பிடப்படுகின்றது

3. சந்தையில் பொருட்கள், சேவைகளில் ஏற்படும் விலைமாற்றம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

போன்ற நன்மைகள் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் கணிப்பீட்டினால் பெறப்படும்.

## உள்ளார்ந்த மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கி

தேசிய உற்பத்திக்குள் அடங்குகின்ற பொருட்கள், சேவைகளின் விலைகளில் ஏற்படும் மாற்றத்தைக் கணிப்பிடப் பயன்படும் சுட்டியே உள்ளார்ந்த மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கியாகும்.

இது 1982 ஆம் ஆண்டை அடியாண்டாகக் கொண்டு ( 1982 = 100 ) இலங்கை மத்திய வங்கியினால் கணிப்பிடப்பட்டு வருகின்றது. இவ் விலைச்சுட்டெண் மூலம் நடைமுறை விலைத் தேசிய உற்பத்தியை நிலையான விலைத் தேசிய உற்பத்தியாக மாற்றுவதற்கு பயன்படுகின்றது.

$$\text{நிலையான விலைத்தேசிய உற்பத்தி} = \frac{\text{நடைமுறை விலைத் தேசிய உற்பத்தி}}{\text{உள்ளார்ந்த மொத்த தேசிய உற்பத்தி சுருக்கி}} \times 100$$

உதாரணம்:

1991 ஆம் ஆண்டு நடைமுறை விலைத் தேசிய உற்பத்தி 12000 M.R

1991 ஆம் ஆண்டு உள்ளார்ந்த மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி 120

( 1981 = 100 )

$$\text{நிலையான விலைத் தேசிய உற்பத்தி} = \frac{12000}{120} \times 100 = 10000 \text{ M.R.}$$

## இலங்கையில் விலைச் சுட்டெண் கணிப்பீட்டினால் ஏற்படும் பயன்கள்

1. பணவீக்க நிலமையினை அறிந்து கொள்ளப்பயன்படுகின்றது. அதாவது பொருட்கள், சேவைகளின் பொது விலை மட்ட அதிகரிப்பை கணிப்பிடப் பயன்படுகின்றது.

2. கூலிச் சுட்டெண் கணிப்பதன் மூலம் ஊழியர்களிற்கான மெய் வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தை அளவிடப் பயன்படுகிறது. அதாவது பணக் கூலியைக் கொண்டு கொள்வனவு செய்யக் கூடிய பொருட்கள், சேவைகளின் அளவே மெய்க்கூலி ஆகும். இம் மெய்க் கூலியில் ஏற்படும் மாற்றத்தை அள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதன்மூலம் கூலிச் சுட்டெண்ணைக் கணிப்பிடமுடியும்.

3. தொழிலாளருக்கான சம்பள அளவைத் தீர்மானிக்க விலைச் சுட்டெண் பயன் படுகின்றது. அதாவது,

1. அரச ஊழியருக்கும்

2. தனியாரிற்குமான சம்பள அளவைத் தீர்மானிக்க விலைச் சுட்டெண் பயன் படுகின்றது. அதாவது ஓர் ஆண்டினை அடிப்படை ஆண்டாகக் கொண்டு தொழிலாளரின் பணக் கூலியில் ஏற் படும் மாற்றத்தை விலைச் சுட்டெண் மூலம் கணிப்பிடலாம்,

4. நாட்டின் மெய்வருமானத்தை ஏற்று மதி இறக்குமதி விலைச்சுட்டெண் மூலம் கணிப்பிடலாம்.

5. நாணயத்தின் கொள்வனவு சக்தியைத் தீர்மானிக்க விலைச் சுட்டெண் பயன் படுகிறது. பொருட்கள், சேவைகளின் விலைமட்டம் அதிகரித்துள்ளதா? குறைவடைந்துள்ளதா? என அறிய விலைச் சுட்டெண் பயன்படுகிறது. ❑

உசாத்துணை நூல்

இலங்கை மத்தியவங்கி அறிக்கை 1992


மனித உரிமைக் கழகம்
*Amnesty International*

1961 மே 28-ல் பிரிட்டிஷ் வழக்கறிஞர் பீட்டர் பெரன்சன் என்பவரின் வேண்டுகோளைக் கொண்டு ஆரம்பித்தது. இப்போது 150 நாடுகளில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. 1977 ல் நோபல் சமாதானப் பரிசைப் பெற்றது.

பொதுச் செயலாளர்: இயன் மார்ட்டின் (பிரிட்டன்)

தலைமையகம்: லண்டன்

வி. ஆரூரன்
ஆண்டு 13
வர்த்தகப் பிரிவு 93

# இலங்கையின் உல்லாசப்பயணத்துறை ...

கைத்தொழில் துறையிலே சேவைத் துறையில் அதிக முக்கியமானதாகவும் அதிக வருவாயைப் பெற்றுத் தரும் சேவைத் துறை உல்லாசப் பயணத்துறை ஆகும். இத் துறையானது வேகமாக வளர்ச்சிபெற காரணமாக இலங்கையின் தீவு அமைப்பு இயற்கை எழில் பிரதேசமும் புவியியல் காலநிலை அமைப்பு இவ் உல்லாசப் பயணிகள் கவருவதாக அமைகின்றன. 1982-ம் ஆண்டுக்கு பின்பு 407230 உல்லாசப் பயணிகளை மூலம் 3100 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டது. இவ்வளர்ச்சிக்கு இலங்கையில் போக்குவரத்துத்துறை வளர்ச்சியும் வளர்ச்சி அடைந்த நாடுகளின் ஆதிக்கம் சர்வதேச ரீதியான பிரதேசரீதியான அடிப்படையில் உறவுகளை வளர்க்க முற்படும் முக்கிய காரணமாக அமைந்தன. ஆனால் 1983-ம் ஆண்டு இவ் வளர்ச்சிப் போக்கு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக வீழ்ச்சி அடையத் தொடங்கினாலும் தற்போது இத்துறை வளர்ச்சியடைந்து செல்கின்றது. இலங்கையில் உல்லாசப் பயணத்துறையானது தேசிய வருமானத்தில் முக்கிய பங்கு வகிப்பதால் அரசாங்கம் அதிக அக்கறை காட்டி வரும் தன்மை காணப்படும். இத்துறையானது சர்வதேச வர்த்தகத்தை விடவும் வேகமாக வளர மனித அபிவிருத்திகளின் வேகமான செல்வாக்கும் ஒரு முக்கிய பொருளாதாரக் காரணியாகும். எனினும் இலங்கையின் உல்லாசப் பயணத்துறையின் வளர்ச்சிப் போக்கினை மையமாகக் கொண்டு இதனை வகைப் படுத்தலாம்.

1. இன்பப் பயணிகள்
2. சுற்றுலாப் பயணிகள்

இன்பப் பயணிகள் என்பது 24 மணித்தியாலத்துக்குள் வந்து செல்லும் உல்லாசப் பயணிகள் எனவும் அழைப்பார்கள். இவர்கள் இயற்கை காட்சியை காண்பதற்கோ பொருட்கள் கொள்வனவு விற்பனை செய்யவோ இலங்கை வருவார்கள்.

உல்லாசப் பயணிகள் என்பவர்கள் 24 மணித்தியாலத்துக்கு மேல் இலங்கையில் தங்கி நிற்கும் உல்லாசப் பயணிகள் ஆவார்

## இலங்கையின் உல்லாசப் பயணத் துறையின் வளர்ச்சிப் போக்குகள்:

இலங்கையின் உல்லாசப் பயணத்துறையானது திட்டமிட்ட அடிப்படையில் 1966 ஆண்டில் இருந்து வளர்ச்சி பெறத் தொடங்கியது. 1965 ம் ஆண்டின் உல்லாசப்பயணிகள் சபை இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனம் போன்றன உருவாக்கப்பட்டதன் விளைவாக இதன் வளர்ச்சிப் போக்கு அதிகரித்தது. இதன்படி பத்து ஆண்டு கால திட்டம் உருவாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதன் அடிப்படையில் பின்வரும் பிரதான ஐந்து வலயமாக பிரிக்கப்பட்டன.

1. நீர்கொழும்பிலிருந்து கல்கிசை வரை யான வலயம்
2. பெந்தோட்டையில் இருந்து யாலை தேசிய வனம் வரையிலான தெற்கு கரையோர வலயம்.

3. திருகோணமலையில் இருந்து பாசிக்குடா வரையிலான கிழக்கு கரையோர வலயம்.

4. அநுராதபுரம், பொலநறுவை, கண்டி சீகிரியா முக்கிய பகுதியைக் கொண்ட வரலாற்றுப் பிரதேச வலயம்

5. இயற்கை அழகினைக் கொண்ட மலைநாட்டு வலயம்

மேற்கூறிய 5 வகையான வலயங்கள் மூலம் உல்லாசப் பயணத்துறையானது பரவலாக விருத்திக்கு வாய்ப்பாக அமைகின்றன. எனினும் 1967 ம் ஆண்டிலிருந்து மேற்கைரோப்பிய நாடுகளில் இருந்தே அதிகளவு உல்லாசப்பயணிகள் இலங்கை நோக்கி வரலாயினர். இதில் மேற்கு ஜேர்மனி சுவீடன் பிரான்ஸ் ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகள் முக்கியமானது ஆகும். இவை தவிர கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஐக்கிய அமெரிக்கா, ஆபிரிக்கா மத்திய கிழக்கு நாடுகள் லத்தீன் அமெரிக்கா நாடுகள் இந்தியா ஜப்பான் தாய்லாந்து போன்றவற்றை உள்ளடக்கிய ஆசியாநாட்டு உல்லாசப் பயணிகளும் இலங்கைக்கு அதிகளவு வரத் தொடங்கினர். இவ் வருகை தருவோர் தொகை 1968 — 1977 ஆண்டுக்கு இடையே வருடாந்தம் சராசரியாக 21% அதிகரித்து சென்றதுடன் வருமானமும் சராசரியாக 45% தினால் அதிகரித்து சென்றது. 1970 ம் ஆண்டு1971 இக்கிடைப்பட்ட பகுதியில் 20% குறைந்தது இதற்கு காரணம் பொருளாதார மாற்றம் காரணம் எனப்பட்டது. எனினும் இவ்வாண்டு 20.3 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டது. பின்னர் 1973 ஆம் ஆண்டு 77888 பேர் வருகை தந்ததன் மூலம் 79.5 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டது. இவ்வாறு அதிகரித்த வேகம் 1982 ஆம் ஆண்டில் மிகவும் உச்சநிலை அடைந்தது. இவ்வாண்டில் வருகை தந்த 407230 உல்லாசப் பயணிகள் மூலம் 3100 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டது.

கடந்த 15 ஆண்டில் இலங்கையின் உல்லாசப்பயணத் துறையில் ஏற்பட்ட துரித வளர்ச்சிக்குப் பல்வேறு காரணிகள் துணையாக அமைந்தன. அவற்றின் கடந்த காலத்தில் உல்லாசப்பயணத்துறை வசதிகள் விஸ்தரிக்கப்பட்டதும், உல்லாசப்பயணத்துறையுடனான சேவைகள் விஸ்தரிக்கப்பட்டதும், நகரங்கள் கவர்ச்சிகரமாக்கப்பட்டதும் உல்லாசப்பயணிகளுக்கான பாதுகாப்பு, சுகாதார வசதிகள் உறுதியாக்கப் பட்டதும் கடற்கரையோரப் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டமை, உல்லாசப்பயணிகள் விடுதிகள், ஹோட்டல்கள் நவீனமயமாக்கப்பட்டமையும், வசதியுடையனவாக ஆக்கப்பட்டமையும், அத்துடன் உல்லாசப் பயணிளை விருத்தி செய்ய உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், விளம்பரங்களும், பிரச்சாரங்களும் மிகக் கவர்ச்சிகரமான முறையில் மேற்கொள்ளப்பட்டமையாலும் இவ் உல்லாசப்பயணத்துறை வளர்ச்சி பெற்றது. இவ் வளர்ச்சிப்போக்கு முக்கிய காரணமாக 1978 – 1979 ஆண்டுகளுக்கு இடையே பிரமிப்புக்குரியதான உல்லாசப் பயணிகள் வருகை அதிகரிப்புக்கு 1978 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை அரசு கடைப்பிடித்து தாராள இறக்குமதிக் கொள்கை மூலகாரணமாக அமைந்தது. இக் கொள்கைப்படி அதிகமான, தரமான, வெளிநாட்டு பொருட்களை இலங்கையின் தீர்வை அற்ற வர்த்தக நிலையங்களில் கொள்வனவு செய்ய முடிந்தமை (DUTY FREE SHOP) குறிப்பாக ஆசியா நாட்டுப் உல்லாசப்பயணிகளை வெகுவாக கவர்ந்தமையால் 1978 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த உல்லாசப் பயணிகளில் ஆசிய நாட்டு உல்லாசப் பயணிகளின் பங்கு மிக அதிகம் எனக் கருதப்படுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக 1973 ஆம் ஆண்டு 16520 பேராக காணப்பட்ட ஆசியா நாட்டு உல்லாசப் பயணிகள் 1978 ஆம் ஆண்டு 35995 ஆக இரண்டு மடங்குக்கு மேலாக அதிகரித்து 1980 ஆம் ஆண்டு 72022 ஆக காணப்பட்டு மீண்டும் 1982 ஆம் ஆண்டு 135,088 ஆசியாப் பய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணிகள் வருகை அதே இரு மடங்காக அதிகரித்தது.

இவற்றைத் தவிர இக்கால எல்லையுள் மேற்கைரோப்பிய நாடுகளின் உல்லாசப் பயணிகள் வருகை அதிகரிப்புக்கு இலங்கையில் காணப்பட்ட உணவு வகைகள் ஆடம்பரச் செலவுகள். சொகுசுகள் மிகவும் மலிவாக கிடைக்கப்பட்டமை. மேற்கைரோப்பிய நாட்டவர் வருகையை அதிகரித்துள்ளது.

இவ்வாறான நிலமைகளில் 1983ஆம் ஆண்டில் பல்வேறுபட்ட மாற்றங்கள் கண்டன. அதாவது 1983 ஆம் ஆண்டில் இலங்கையின் உல்லாசப் பயணிகள் துறையில் ஒப்பீட்டு ரீதியில் 1982 ஆம் ஆண்டு மொத்தம் 33.342 ஆம் வருகை தந்தனர்கள். இது 1982 ஆம் ஆண்டுத் தொகையை விட 17% வீழ்ச்சி ஆகும். இதற்கு மிக முக்கிய மூலகரணமாக 1983 ஆம் ஆண்டு யூலை 1983 கலவரம் எடுத்துக் காட்டப்பட்டன. இக் கலவரத்தால் இந்தியா உட்பட ஆசிய நாடுகளின் உல்லாசப்பயணிகள் வருகை 1983 யூலையை அடுத்துள்ள மாதத்தில் குறைய - முக்கிய காரணமாக யூலைக் கலவரமே முக்கிய காரணமாக - கூறப்படுகிறது. 1983 ஆம் ஆண்டு மே மாதம் வருகை தந்த ஆசியா நாட்டு உல்லாசப் பயணிகள் 20720 ரீதியாக காணப்பட அதே நேரம் ஆகஸ்ற் மாதம் 1968 பேராக மட்டுமே இருந்தது. இத்தரவுஆனது 1982ஆம்ஆண்டு ஆகஸ்ட்மாத வருகையோடு ஒப்பிட்டால்கூட மிகக் பெரும் வீழ்ச்சியாகும். இந்நிலமையே மேற்கைரோப்பிய நாடுகளில் காணப்பட்டது. 1982 ஆம் ஆண்டை விட 1983 ஆம் ஆண்டில் ஏறத்தாழ, 50% மாக குறைந்தது இதனை விட வட அமெரிக்கா, அவுஸ்ரேலியா முதலிய நாடுகளில் இருந்து உல்லாசப்பயணிகள் வருகையிலும் வீழ்ச்சி காணப்பட்டது. ஆனால் 1983 ஆம் ஆண்டு கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் உல்லாசப் பயணிகள் வருகை மட்டும் முன்னைய ஆண்டை விட சிறிய உயர்ச்சி காணப்பட்டது.

1983 ஆம் ஆண்டு வீழ்ச்சிக்கு ஜுலைக் கலவரங்கள் காரணமாக எடுத்துக் கூறப்பட்டாலும் வேறு காரணிகளும் இதற்கு சான்றாக அமைந்தன. குறிப்பாக தலைமன்னார் படகு சேவை நிறுத்தப்பட்டமை, கொழும்புத்துறைமுகம்மூலம் பயணிகள் வருவது தடைப்பட்டதுமான. உலக நாடுகளில் பலவற்றின் உல்லாசப் பயணிகள் துறையில் இவ்வாண்டில் இலங்கையின் உல்லாசப் பயணத்துறையில் வீழ்ச்சிகள் காணப்பட்டமை ஏனைய காரணிகள் செல்வாக்குச் செலுத்தியதற்கு எடுத்துக்காட்டாகும். இக்காலப் பகுதியில் மேற்த நாடுகளில் ஏற்பட்ட தற்காலிக, வர்த்தக மாற்றம், நிச்சயமற்ற பொருளாதார சூழல், உல்லாசப் பயணிகளின் மனோபாவத்திலும், குணத்திலும் ஏற்பட்ட மந்தநிலையும் இங்கு ஹோட்டல்கள் விடுதி ஆகியவற்றில் ஏற்பட்ட விலை உயர்வு போன்றன காரணமாக குறிப்பிடலாம்.

உல்லாசப் பயணிகள் துறை நன்கு வளர்ச்சி பெற பல்வேறுபட்ட துணைத் துறையின் பங்களிப்பு முக்கியமானதாகும். இதில் வங்கிகள் பிரையாணமுகவர் நிலையங்கள், கடைகள், ஹோட்டல்களும் விடுதியும் இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் என்பன முக்கியம் பெறுகின்றன.

ஹோட்டல்களும், விடுதிகளும் என்பன வற்றினைப் பொறுத்தவரை 1967 இல் இருந்து தற்போது வரை வளர்ச்சி கண்டுள்ளது. இவ் வளர்ச்சியானது கொழும்பு தொடங்கி மேற்கு, கிழக்கு, தெற்கு கரையோரப்பகுதிகளின் வரலாற்று நகரப்பகுதியையும், மலை நாட்டுப் பகுதியையும் கொண்டு ஏற்பட்டதாகும். இக் ஹோட்டல் பலர் வேலைவாய்ப்பு பெறுவதுடனும் வருமானம் அதிகரிப்பு புதிய மொழி அறிவு கல்விஅறிவு, என்பன வளர்ச்சி பெற்று இலங்கை மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கு இவ்வளர்ச்சிகள் பெரிதும் உதவுவதா அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் உல்லாசப் பயணிகள் வருகை தற்போதைய ஆண்டில் பெரு வீழ்ச்சியைப் பெறுகின்றன. இதனால் பின்வரும் பொருளாதார விளைவுகள் ஏற்படும்.

1. உல்லாசப் பயணத்துறை மூலம் கிடைக்கும் அந்நிய செலவாணி வருமானம் வீழ்ச்சி அடையும். அண்மை ஆண்டில் இவ் வருமானம் பெருமளவாய் வீழ்ச்சி அடைவதால் சென்மதிநிலுவையில் பற்றாக்குறைத் தன்மை நிலவும்.

2. உல்லாசப் பயணத்துறை சார்ந்த நேரடியான, மறைமுகமான, வேலைவாய்ப்பும் வீழ்ச்சி அடைந்து செல்கின்றன இதனால் வேலைவாய்ப்பு தற்கால வீழ்ச்சியைப் பெற்றன.

3. உல்லாசப் பயணத்துறையுடன் கூடிய கைப்பணிகள், போக்குவரத்து சேவை என்பனவற்றின் உற்பத்தி குறைவடைந்து வேலைவாய்ப்பும் குறையும்.

4. உல்லாசப் பயணத்துறைசார்ந்த ஹொட்டல்கள் விடுதிகள் என்பனவற்றின் இயல் அளவு வீழ்ச்சியால் அவற்றின் வருமானம் வீழ்ச்சி அடைவதுடன் வேலைவாய்ப்பு குறைவடைந்து மக்கள் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியுறும்.

5. மொத்தவிற்பனைவரி, வருமானவரி என்பனவற்றின் மூலம் கிடைக்கும் வருமானம் குறைவடைந்து சமமீதிப்பற்றாக்குறையை ஏற்படுத்தும்.

6. உல்லாசப் பயணத்துறை வீழ்ச்சியால் இலங்கையின் ஏயர்லங்கா விமான சேவை வருமானம் பெரிதும் வீழ்ச்சியடையும்.

போன்றன இத்துறையின் வீழ்ச்சியால் ஏற்பட்ட பொருளாதார விளைவாகும்.

இத்துறையின் அண்மியஅண்டின் போக்குகளை நோக்கின் 1986 ஆம் ஆண்டு 230, 136 பயணிகளும் 1989 184,732 பயணிகளும் 1990 இல் 297,887, பயணிகள் வருகை தந்தனர். இவ் அதிகரிப்பு ஆனது முன்னைய ஆண்டைவிட 62% அதிகரிப்பு ஆகும். இதன் மூலம் 1990 ஆம்ஆண்டில் மட்டும் 4800 மில்லியன் ரூபா பெறப்பட்டது. 1989 வருமானம் (SDR) 1988 ஆண்டைவிட 18% அதிகரிக்கப்பாகும் அண்மையில் உல்லாசப் பயணிகள் துறைமூலம் 1990இல் நேரடியாக 25000பேர் வேலைவாய்ப்புப் பெற்றனர். இவ் வேலைவாய்ப்புத் தன்மை மக்கள் வருமானத்தை அதிகரித்தது. வாழ்க்கைத் தரம் உயர்ந்து பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் துறை ஆகும். இத் துறையில் பலவகையான பிரதிகூலம் இருந்தும் அநுகூலம் அதிக நன்மை தருவதால் இத் துறைக்கு இலங்கை அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகின்றது. இத்துறையானது இலங்கையின் செலாவணிப் பிரச்சனையை எதிர்கொள்ளும் கட்புலனாகாத ஏற்றுமதியின் பகுதியில் முதல் இடம் பெறும் துறையாக அமைவதும் இதற்கு ஒரு சான்றாகும். இதனாலேயே இத்துறை தொடர்ந்து ஊக்குவிக்கப் படுகின்றது.

உல்லாசப் பயணத்துறை வளர்ச்சி அடைய அதன் தீய விளைவும் அதிகரித்தன அவை பின்வருமாறு.

1. இலங்கையின் தேசியகலை கலாசாரம் பாதிப்படைகின்றது.
2. மர்வாணா போதைப் பொருள் கெரோயின் என்பனவற்றின் பயன்பாடுகள் அதிகரிப்பதால் சமூக வளர்ச்சி பாதிப்படையும்.
3. இலங்கையின் புராதன கால பொக்கிஷங்களை உல்லாசப் பயணிகள் எடுத்துச் செல்வதால் அவை அற்றுபோகும்.
4. தீர்வை அற்ற சந்தை மூலம் கள்ளச் சந்தை கறுப்பு சந்தை ஏற்பட வாய்ப்பளித்தமை,

போன்றவை தீயவிளைவாக இருந்தாலும் அதன் தன்மை சிறந்தவாகவும், அதிகமானதாகவும் இருப்பதால் இலங்கை அரசாங்கம் உல்லாசப் பயணத் துறையை ஊக்குவிக்கின்றது. □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே. கே. அருள்வேல்,
முதுநிலை விரிவுரையாளர்,
வணிக முகாமைத்துவத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

# வாடகைக் கொள்வனவு
# HIRE PURCHASE

## 1.0 அறிமுகம்

ஒருவர் உடனடியாகக் காசு கொடுத்து ஒரு பொருளை வாங்க முடியாத சந்தர்ப்பத்தில் அதனைக் கொள்வனவு செய்வதற்குப் பல்வேறு வழிமுறைகள் காணப்படுகின்றன. அவ்வாறான வழிமுறைகளில் வாடகைக் கொள்வனவு முறையும் ஒன்றாகும். வாடகைக் கொள்வனவு முறையில் பொருட்களைக் கொள்வனவு செய்பவர் ஒரு குறிப்பிட்ட தொகையை வைப்புப்பணமாக (DEPOSIT) செலுத்தியவுடன் பொருளைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகின்றார். மிகுதிப்பணம் வட்டியுடன் சேர்த்து மாதாந்த அல்லது காலாண்டு அல்லது அரையாண்டு அல்லது வருடாந்த தவணைக் கட்டணங்களில் செலுத்தப்படல் வேண்டும். வட்டி பொதுவாக நிலுவையாகவுள்ள காசு விற்பனை விலையில் களிக்கப்படும்.

தவணைக்கட்டண முறையிலான கொள்வனவும் வாடகைக் கொள்வனவு முறையை ஒத்ததாகக் காணப்படினும், இவை இரண்டுக்குமிடையில் காணப்படும் முக்கிய வேறுபாடுயாதெனில் தவணைக் கட்டண முறையிலான கொள்வனவில் ஒப்பந்தம் செய்யப்படும் நேரந்திலேயே பொருட்களின் உரிமை கொள்வனவு செய்பவரைச் சென்றடைகின்றது. ஆனால் வாடகைக் கொள்வனவு முறையிலான கொள்வனவில் இறுதித் தவணைக் கட்டணம் செலுத்தப்பட்ட பின்பே உரிமையானது கொள்வனவு செய்பவரைச் சென்றடையும்.

(வாடகைக் கொள்வனவு முறை தவணைக் கட்டணமுறை ஆகிய இரண்டு முறைகளிலும் காணப்படும் முக்கிய அம்சங்களை தன்னகத்தே கொண்டதாக நிபந்தனை அடிப்படையிலான விற்பனை (Conditional Sales) என்ற ஒரு முறையும் காணப்படுகின்றது.)

இதனால் வாடகைக் கொள்வனவு முறையில் பொருட்களைக் கொள்வனவு செய்பவர் இறுதித் தவணைக்கட்டணம் செலுத்தப்படும் வரை அப்பொருட்களை வேறொருவருக்கு விற்பனை செய்யவோ, பரிமாற்றம் செய்யவோ, அழிக்கவோ, சேதமாக்கவோ முடியது.

வாடகைக் கொள்வனவு முறையிலான கொள்வனவானது இரண்டு வகைகளாக மேற்கொள்ளப்படுகின்றது,

1. நிறுவனங்கள் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்.
2. பொதுமக்கள் வீட்டுப் பாவனைப் பொருட்களைக் கொள்வனவு செய்தல்

நிறுவனங்கள் நிலையான சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய பொருட்களை அதாவது சரக்கிருப்பு போன்றவற்றை வாடகைக் கொள்வனவு அடிப்படையில் கொள்வனவு செய்வதில்லை. ஏனெனில் அவ்வாறு கொள்வனவு செய்தபொருட்களை ஒப்பந்த காலம் முடிவடையும் வரை விற்க முடியாமையே யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடகைக் கொள்வனவு முறையில் காணப்படும் முக்கிய நன்மைகளாவன:

1. வருமானம் குறைந்தவர்களும் விலை கூடிய பொருட்களை கொள்வனவு செய்ய முடியும், அதற்குரிய பணத்தை பகுதி பகுதியாக தமது வருமானத்துக் கேற்ற வகையில் தவணை அடிப்படை யில் செலுத்திக் கொள்ள முடியும்.

இம்முறை காணப்படாவிடில் ஒருவர் குறிப்பிட்ட பொருளுக்குரிய பணத் தினை சேமிப்பதன் மூலம் அல்லது கடன் பெறுவதன்மூலமே பொருளி னைக் கொள்வனவு செய்ய முடியும்.

2. விற்பனையாளரைப் பொறுத்தவரை விற்பனை அதிகரிக்கும்.

எனினும் வாடகைக் கொள்வனவு முறையில் பின்வரும் தீமைகளும் காணப் படுகின்றன எனலாம்.

1. விற்பனையாளரைப் பொறுத்தவரை விற்பனை அதிகரிக்குமாதலால் கூடிய ளவு மூலதனம் தேவைப்படும். ஏனெனில் இவர் பொருட்களின் விற் பனை மூலமான பணத்தினை உடனடி யாக அல்லாது பகுதிபகுதியாகவே பெற்றுக்கொள்ள முடியும்

2. வாடகைக் கொள்வனவு விற்பனை தொடர்பாக அதிகளவு புத்தகங்க ளைப் பேணவேண்டிய நிலைமை ஏற் படும். எனவே கூடியளவு ஆட்களை வேலைக்கமர்த்த வேண்டிய நிலைமை ஏற்படும். இதனால் செலவுகள் அதி கரிக்கும்.

3. வாடகைக் கொள்வனவு விளம்பரங் கள் மூலமும் சலுகைகள் மூலமும் கவ ரப்பட்ட பாவனையாளர்கள் பொருட் களைக் கொள்வனவு செய்தபின்பு, தொடர்ந்து தவணைக் கட்டணங்களை செலுத்த முடியாமல் கட்டிய பணத் தையும் இழந்து பொருளையும் திருப் பிக் கொடுத்து நட்டமடைய வேண் டிய நிலைமை ஏற்படலாம்.

மேலும் பாவனையாளர்கள் வாட கைக் கொள்வனவு அடிப்படையில் கொள்வனவு செய்யும் பொருட்களை கவலையீனமாகப் பாவிப்பதனால் விற் பனையாளரால் பறிமுதல் செய்யப் படும். பொருட்கள் மீண்டும் விற்பனை செய்யப்பட முடியாதவையாக அல்லது பெருமளவு திருத்தச் செலவுகளை மேற்கொண்ட பின்னரே விற்கப்படக் கூடியவையாக காணப்படுவதால் இது விற்பனையாளருக்கு அதிகளவு நட் டத்தை ஏற்படுத்துகின்றது.

## 2.0 கணக்கீட்டு முறைகள்

வாடகைக் கொள்வனவு விற்பனை நிபந்தனைகளின்படி இறுதித்தவணைக் கட் டணம் செலுத்தப்படும்வரை உரிமை கை மாறமாட்டாது. எனவே இறுதித் தவ ணைக் கட்டணம் செலுத்தப்படும்வரை வாடகைக் கொள்வனவுவிற்பனை, விற் பனையாகக் கருதப்பட முடியாது, எனவே அதுவரை விற்பனையாளர் எந்தவொரு இலாபத்தையும் கணக்குகளில் செலவு வைக்கக்கூடாது. அத்துடன் கொள்வனவு செய்பவர் சொத்தின் கிரயத்தை சொத் துக் கணக்கில் வரவு வைக்கக்கூடாது.

எனினும் கணக்கீட்டில் சட்ட வடி வத்தை விட சாராம்சமே (SUBSTANCE OVER FORM) நோக்கப்படுவதனால், கொள்வனவு செய்பவர் ஒப்பந்தத்தின் ஆரம்பத்திலேயே சொத்தின் கிரயத்தை புத்தகங்களில் பதிவு செய்கின்றார். அத்து டன் விற்பனையாளர் ஒப்பந்த காலத்தில் இலாபத்தைக் கணக்கிட்டு பதிவு செய்கின் றார்.

கொள்வனவு செய்பவரின் புத்தகங்க ளில் கணக்கீட்டுப்பதிவுகள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வனவு செய்பவரின் புத்தகங்களில் கணக்கீட்டுப் பதிவுகளை மேற் கொள்வதற்கு இரண்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

## 2.1 முறை ஒன்று

நாட் குறிப்புகள்:

அ) கொள்வனவு செய்பவர் ஒப்பந்தம் செய்யப்பட்டவுடன் அப் பொருளை நிலையான சொத்தாகக் கருதுவார். அதனால் அதன் காசு விற்பனை விலை

சொத்துக்கணக்கு வரவு

வாடகைக் கொள் வனவு விற்போன் செலவு

ஆ) ஒவ்வொரு தவணைக்கட்டணமும் நிலுவையாகும் போது அதிலடங்கியுள்ள வட்டி

வாடகைக் கொள்வனவு வட்டிக் கணக்கு வரவு

வாடகைக் கொள்வனவு விற்போர் வட்டித் தொங்கல் செலவு

இ) தவணைக்கட்டணம் செலுத்தப்படும் போது

வாடகைக்கொள்வனவு விற்போன் வரவு

வங்கி செலவு

ஈ) பெறுமானத்தேய்வானது சொத்தின் கிரயத்தில் அதாவது காசுவிலையில் கணிப்பிடப்படும், பெறுமானத் தேய்வு

பெறுமானத்தேய்வு கணக்கு வரவு

பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு செலவு

ஐந்தொகையில் சொத்தின் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு மீதி கழித்துக்காட்டப்படும்

விற்போன் கணக்கு மீதி கொடுக்குமதியாகவுள்ள காசு விலையைக்காட்டும். இது ஐந்தொகையில் ஒரு வருடத்துக்குள் செலுத்தப்பட வேண்டிய கடன் கொடுத்தோர், ஒருவருடத்துக்குப்பின் செலுத்தப்பட வேண்டிய கடன் கொடுத்தோர் என இரண்டாக வேறுபடுத்திக் காட்டப்படும்.

ஐந்தொகையில் சொத்தின் கிரயத்திலிருந்து வாடகைக் கொள்வனவு விற்போன் கணக்கு மீதியைக் கழித்துக் காட்டுவது முண்டு வட்டி இலாபநட்டக் கணக்கிற்கு மாற்றப்படும்.

## 2.2 முறை இரண்டு

முதலாவது முறையுடன் ஒப்பிடும் போது இம் முறையிலுள்ள வித்தியாசம் யாதெனில் ஒப்பந்தம் செய்யப்படும் போதே காசுவிற்பனை விலையையும் மொத்த வட்டியையும் பொறுப்பாககருதி விற்போன் கணக்கில் செலவுவைப்பதாகும். மேலும் மொத்த வட்டியை வாடகைக்கொள்வனவு வட்டித் தொங்கல் கணக்கு என்ற ஒரு கணக்கில் வரவு வைத்து ஒவ்வொரு தவணைக் கட்டணத்தின் போதும் அத்தவணைக் கட்டணத்தில் சேர்ந்துள்ள வட்டியை தொங்கல் கணக்கிலிருந்து வாடகைக்கொள்வனவு வட்டிக் கணக்கிற்கு மாற்றுவதாகும்.

நாட்குறிப்புக்கள்:

அ) ஒப்பந்தம் செய்யும் போது

சொத்துக்கணக்கு வரவு
(காசு விற்பனை விலை)

வாடகைக் கொள்வனவு வட்டிக் தொங்கல் கணக்கு வரவு
(மொத்த வட்டி)

வாடகைக் கொள்வனவு விற்போன் கணக்கு செலவு
(வாடகைக் கொள்வனவு விலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) ஒவ்வொரு தவணைக் கட்டணமும் கொடுக்குமதியாகும் போது அதிலடங்கியுள்ள வட்டி

| | |
|---|---|
| வாடகைக் கொள்வனவு வட்டிக் கணக்கு | வரவு |
| வாடகைக் கொள்வனவு வட்டித் தொங்கல் | செலவு |

இ) தவணைக் கட்டணம் செலுத்தும் போது

| | |
|---|---|
| வாடகைக் கொள்வனவு விற்போன் | வரவு |
| வங்கி | செலவு |

பெறுமானத் தேய்வு செய்வது தொடர்பாகவும், சொத்தினை ஐந்தொகையில் காட்டுவது தொடர்பாகவும் வட்டிக்கணக்கு மீதியை இலாபநட்டக் கணக்கிற்கு மாற்றுவது தொடர்பாகவும் முதலாவது இரண்டாவது முறைகளுக்கிடையில் வேறுபாடு எதுவுமில்லை.

ஐந்தொகையில் வாடகைக் கொள்வனவு விற்போன் கணக்கு மீதியிலிருந்து வட்டித் தொங்கல் கணக்கு மீதி கழித்துக் காட்டப்படும், ஏனெனில் காசு விற்பனை விலை மட்டுமே ஒரு குறிப்பிட்ட திகதியில் நிலுவையாகக் காட்டப்படல் வேண்டும். விற்போன் கணக்கு மீதியில் காசு விற்பனை விலையும் வட்டியும் உள்ளடக்கப்பட்டிருப்பதால் காசு விற்பனை விலையை அறிவதற்கு வட்டித் தொங்கல்கணக்கு மீதி கழிக்கப்படுகின்றது.

விற்போன் கணக்குமீதி ஒரு வருடத்துக்குள் செலுத்தப்பட வேண்டிய கடன் கொடுத்தோர், ஒரு வருடத்துக்குப்பின் செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் என இரண்டாகப்பிரித்துக் காட்டப்படும்.

உதாரணம்:-

குமார் லிமிட்டட் ராஜன் லிமிட்டட்டிடமிருந்து வாடகைக் கொள்வனவு அடிப்படையில் ஒரு இயந்திரத்தை 1-1-1990 இல் கொள்வனவு செய்தது இயந்திரத்தின் காசு விற்பனை விலை ரூபா 90,000/- வாடகைக் கொள்வனவு விலை ரூபா 129,150/-

வாடகைக் கொள்வனவு ஒப்பந்தப்படி இயந்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் போது வைப்புப்பணமாக ரூபா 30.000/- செலுத்த வேண்டும். பின்பு 31-12-1990, 31-12-1991, 31-12-1992 ஆகிய திகதிகளில் முறையே ரூபா 33.000/-, ரூபா 33,000/- ரூபா 33,150/- தவணைக் கட்டணங்களாகச் செலுத்துதல் வேண்டும் வட்டி வீதம் ஆண்டுக்கு 30%

குமார் லிமிட்டட் இயந்திரத்திற்கு நேர்கோட்டு முறையில் ஆண்டுக்கு 20% பெறுமானத் தேய்வு செய்கின்றது,

முறை ஒன்று

இயந்திரக் கணக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-1-1990 | ராஜன் லிமிட் | 90 000 | 31-12-1990 | மீதிகீ/கொ/செ | 90 000 |
| 1-1-1991 | மீதி கீ கொ வந் | 90 000 | 31-12-1991 | மீதி ,, | 90 000 |
| 1-1-1992 | ,, | 90 00 | 31-12-1992 | ,, | 90 000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜன் லிமிட்டட்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1- 1-1990 | வைப்பு-வங்கி | 30 000 | 1- 1-1990 | இயந்திரம் | 90 000 |
| 31-12-1990 | வங்கி-தவணைக் கட்டணம் | 33 000 | 31-12-1990 | வா. கொ.வட்டி (90 000-30 000) 30% | 18 000 |
| 31-12-1990 | மீதி கீ/கொ/செ | 45 000 | | | |
| | | 108 000 | | | 108 000 |
| 31-12-1991 | வங்கி-தவணைக் கட்டணம் | 33 000 | 1- 1-1991 | மீதி கீ/கொ/வந் | 45 000 |
| 31-12-1991 | மீதி கீ/கொ/செ | 25 500 | 31-12-1991 | வா.கொ.வட்டி 45 000 × 30% | 13 500 |
| | | 58 500 | | | 58 500 |
| 31-12-1992 | வங்கி-தவணைக் கட்டணம் | 33 150 | 1- 1-1992 | மீதி கீ/கொ/வந் | 25-500 |
| | | | 31-12-1992 | வா. கொ. வட்டி 25 500 × 30% | 7 650 |
| | | 33 150 | | | 33 150 |

## வாடகைக் கொள்வனவு வட்டிக் கணக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31-12-1990 | இராஜன் லிமிட்டட் | 18 000 | 31-12-1990 | இலாபநட்டக் ,, க/கு | 18 000 |
| 31-12-1991 | ,, | 13 500 | 31-12-1991 | ,, | 13 500 |
| 31-12-1992 | ,, | 7 650 | 31-12-1992 | ,, | 7 650 |

## இயந்திரப் பெறுமானத் தேய்வு ஏற்பாடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31-12-1990 | மீதி கீ/கொ/செ | 18 000 | 31-12-1990 | இய. பெறு. தேய்வு | 18 000 |
| 31-12-1991 | மீதி கீ/கொ/செ | 36 000 | 1- 1-1991 | மீதி கீ/கொ/வங் | 18 000 |
| | | | 31-12-1991 | இய. பெறு. தேய்வு | 18 000 |
| | | 36 000 | | | 36 000 |
| 31-12-1992 | மீதி கீ/கொ/சென் | 54 000 | 1- 1-1992 | மீதி கீ/கொ/வந் | 36 000 |
| | | | 31-12-1992 | இய. பெறு. தேய்வு | 18 000 |
| | | 54 000 | | | 54 000 |

## இயந்திரப் பெறுமானத் தேய்வு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31-12-1990 | இய. பெறுதே. ஏற்பாடு | 18 000 | 31-12-1990 | இலாபநட்டக் | 18 000 |
| 31-12-1991 | ,, | 18 000 | 31-12-1991 | ,, | 18 000 |
| 31-12-1992 | ,, | 18 000 | 51-12-1992 | ,, | 18 000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31-12-1990 இல் உள்ளபடியான ஐந்தொகை

நிலையான சொத்துக்கள்

| | | |
|---|---|---|
| இயந்திரம் | 90 000 | |
| (—) பெ. தே .ஏற்பாடு | 18 000 | 72 000 |

கடன் கொடுத்தோர்
ஒரு ஆண்டுக்குள் செலுத்தப்பட
வேண்டியவர்கள்
வாடகைக் கொள்வனவு
கடன் கொடுத்தோர்
( ராஜன் லிமிட்டட் )
( 33 000 — 13 500 ) 19 500 (1)

ஒரு வருடத்துக்குப்பின்
செலுத்தப்பட வேண்டியவர்கள்
வாடகைக் கொள்வனவு
கடன் கொடுத்தோர்
( ராஜன் லிமிட்டட் )
( 33 150 — 76 50 ) 25 500 (2)

முறை இரண்டு

ராஜன் லிமிட்டட்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-1-1990 | வங்கி வைப்பு | 30 000 | 1-1-1990 | இயந்திரம் | 90 000 |
| 31-12-1990 | வங்கித் தவணைக் கட்டணம் | 33 000 | 1-1-1990 | வா. கொ. வட்டி தொங்கல் | 39 150 |
| 31-12-1990 | மீதி. கீழ். கொ சென் | 66 150 | | | |
| | | 129 150 | | | 129 150 |
| 31-12-1991 | வங்கி த. கட்டணம் | 33 000 | 1-1-1991 | மீதி. கீ. கொ வ. | 66 150 |
| 31- 2-1991 | மீதி. கீ. கொ சென் | 33 150 | | | |
| | | 66 150 | | | 66 150 |
| 31-12-1992 | வங்கி த. கட்டணம் | 33 150 | 1-1-1992 | மீதி. கீ. கொ. வ. | 33 150 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாடகைக் கொள்வனவு வட்டித் தொங்கல் க/கு

| | | | |
|---|---|---|---|
| 1-1-1990 இராஜன் லிமிட்டட் | 39 150 | 31-12-1990 வா. கொ. வட்டி | 18 000 |
| | | 31-12-1990 மீதி. கீ. கொ. செ | 21 150 |
| | 39 150 | | 39 150 |
| 1-1-1991 மீதி. கீ. கொ- வந்தது | 21 150 | 31-12-1991 வா. கொ. வட்டி | 13 500 |
| | | 31-12-1991 மீதி. கீ. கொ. சென் | 7 650 |
| | 21 150 | | 21 150 |
| 1-1-1992 மீதி. கீ. கொ. வந்தது | 7 650 | 31-12-1992 வா. கொ. வட்டி | 7 650 |

ஏனைய பேரேட்டுக் கணக்குகளைப் பொறுத்தவரை இரண்டு முறைகளுக்கிடையில் வேறுபாடுகளில்லை.

### 31-12-1990 இல் உள்ளபடியான ஐந்தொகை

நிலையான சொத்துக்கள்

| | | |
|---|---|---|
| இயந்திரம் | 90 000 | |
| ஏற்பாடு | 18 000 | 72 000 |

கடன் கொடுத்தோர்
ஒரு வருடத்துக்குள் செலுத்தப்பட
வேண்டியவர்கள்
வாடகைக் கொள்வனவு கடன் கொடுத்தோர்
( ராஜன் லிமிட்டட் )
( 66 150 – 33 150 ) — 13 500   19 500

ஒரு வருடத்துக்குப்பின்
செலுத்தப்பட வேண்டியவர்கள்
வா. கொ. கடன் கொடுத்தோர்
ராஜன் லிமிட்டட்
33 150 – 7 650   25500

### 3.0 வாடகைக் கொள்வனவு வட்டி

வாடகைக் கொள்வனவு வட்டியானது மீதியாகவுள்ள காசு விற்பனை விலையில் ஒரு நிலையான வட்டி வீதத்தில் கணிக்கப்பட்டு சாட்டுதல் செய்யப்படுவதே பொருத்தமானதாகும். முன்னர் காட்டப்பட்டுள்ள உதாரணத்தில் 30 வீதம் எனத்தரப்பட்டுள்ளது. பொதுவாக பரீட்சை வினாக்களில் வட்டி வீதம் தரப்படுகின்றது. அவ்வாறு தரப்படாத சந்தர்ப்பங்களில் பின்வரும் இரண்டு முறைகளிலொன்றைத் தெரிவு செய்யலாம்.

### 3.1 ஆண்டிலக்க முறை
Sum of Digit's Method

இம்முறையில் வட்டியானது இலக்கங்களை அடிப்படையாகக் கொண்டு குறைந்து செல்லும் முறையில் கணக்காண்டு காலப் பகுதிகளுக்கிடையில் பதிவழிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக;

ஒரு கம்பனி வாடகைக் கொள்வனவு அடிப்படையில் ஒரு சொத்தைக் கொள்வனவுசெய்கின்றது. தவணைக்கட்டணங்களின் எண்ணிக்கை அரையாண்டுக் கொருமுறையாக நான்கு ஆண்டுகளுக்கு மொத்தம் எட்டாகும். மொத்தவட்டி ரூபா 63000 /- ஆகும்.

தவணைக் கட்டணங்கள் அரையாண்டின் இறுதியில் செலுத்தப்படுகின்றன எனக் கொள்வோம். வட்டிக்கணிப்பீடு பின்வருமாறு

| தவணைக்கட்டண இலக்கம்: | நிலுவையாகவுள்ள காலம்: (இலக்கம்) (5) | பின்னம் (3) | பதிவழிக்கப்படும் வட்டி (ரூபா) (4) |
|---|---|---|---|
| 1 | 8 | 8/36 | 14 000 |
| 2 | 7 | 7/36 | 12 250 |
| 3 | 6 | 6/36 | 10 500 |
| 4 | 5 | 5/36 | 8 750 |
| 5 | 4 | 4/36 | 7 000 |
| 6 | 3 | 3/36 | 5 250 |
| 7 | 2 | 2/36 | 3 500 |
| 8 | 1 | 1/36 | 1 750 |
| மொத்தம் | 36 | | 63 000 |

இதன்படி வட்டி பின்வருமாறு பதிவழிக்கப்படும்.

| ஆண்டு | வட்டி (ரூபா) (6) |
|---|---|
| 1 | 26 250 |
| 2 | 19 250 |
| 3 | 12 250 |
| 4 | 5 250 |
| மொத்தம் | 63 000 |

இவ்வுதாரணத்தில் தவணைக்கட்டணங்கள் அரையாண்டின் ஆரம்பத்தில் செலுத்தப்படுகின்றன எனக் கொண்டால் வட்டிக் கணிப்பீடு பின்வருமாறு அமையும்.

| தவணைக்கட்டண இலக்கம் | நிறுவையாகவுள்ள காலம் (இலக்கம்) | பின்னம் | பதிவழிக்கப்படும் வட்டி (ரூபா) |
|---|---|---|---|
| 1 | 7 | 7/28 | 15 750 |
| 2 | 6 | 6/28 | 13 500 |
| 3 | 5 | 5/28 | 11 250 |
| 4 | 4 | 4/28 | 9 000 |
| 5 | 3 | 3/28 | 6 750 |
| 6 | 2 | 2/28 | 4 500 |
| 7 | 1 | 1/28 | 2 250 |
| 8 | 0 | — | — |
| மொத்தம் | 28 | | 63 000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி வட்டி பின்வருமாறு பதிவழிக்கப்படும்

| ஆண்டு | வட்டி ( ரூபா ) |
|---|---|
| 1 | 29 250 |
| 2 | 20 250 |
| 3 | 11 250 |
| 4 | 2 250 |
| மொத்தம் | 63 000 |

## 3.2 சமதவணைக் கட்டண முறை அல்லது நேர்கோட்டு முறை (*Equal Instalment or Stright Line Method*)

இம் முறையில் வட்டியானது தவணைக் கட்டணங்களுக்கிடையில் சமமாகப் பகிரப் படும். முன்னர் குறிப்பிட்ட உதாரணத் தின்படி மொத்தவட்டியாகிய ரூபா 63000/- எட்டு தவணைக் கட்டணங்களுக்கு மிடை யில் சமமாக ரூபா 7875/ ( 63 000/8 ) என்ற அடிப்படையில் பகிரப்படும். எனவே ஒவ்வொரு வருடமும் ரூபா 15 750/ ( 7 875 X 2 ) வட்டியாகப் பதிவழிக்கப் படும்.

குறிப்புக்கள்

1. 1991 ஆம் ஆண்டில் செலுத்தப்படும் தவணைக்கட்டணத்திலிருந்து வட்டி கழிக்கப்பட்டுள்ளது.
2. 1992 ஆம் ஆண்டில் செலுத்தப்படும் தவணைக் கட்டணத்திலிருந்து வட்டி கழிக்கப்பட்டுள்ளது.
3. இலக்கங்களின் கூட்டுத்தொகையாகிய 36 க்கும் ஒவ்வொரு தவணைக் கட்ட ணங்களுக்குரிய இலக்கங்களுக்குமிடை யிலான பின்னம்
4. மொத்த வட்டி ரூபா 63 000/ இல் அவ் வாண்டின் பின்னத்துக்குரிய தொகை.
5. தவணைக் கட்டணங்கள் அரையாண் டின் இறுதியில் செலுத்தப்படின் முற லாவது தவணைக் கட்டணம் நிலு வையாகவுள்ள காலம் மொத்த தவ ணைக் கட்டணங்களின் எண்ணிக்கை யான 8 ஆகும். ஆரம்பத்தில் செலுத் தப்படின் ( 8 — 1 ) 7 ஆகும். பின்பு படிப்படியாக ஒன்றால் குறைவடையும்.
6. ஒவ்வொரு ஆண்டும் 2 தவணைக் கட் டணங்கள். எனவே இரண்டு தவணைக் கட்டணங்களுக்குரிய வட்டி ஓராண் டில் பதிவழிக்கப்படும். □

உசாத்துணை நூல்கள்:

1. Jennings A. R (1990), *Financial Accounting I* DP Publication, Hants.
2. Paul Gee (1991), *Book Keeping And Accounts*, Butterworths. London.
3. Frank Wood (1993), *Business Accounting 2* Pitman, London.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. ரகுராகவன்
ஆண்டு 13
வர்த்தகப் பிரிவு 93

# அடிப்படை கணக்கியல் எண்ணக் கருக்களும் முடிவுக் கணக்குகளில் அவை பயன்படுத்தப்படும் முறைகளும்

கணக்கீட்டு அறிக்கையை தயாரிக்கையில் பின்பற்ற வேண்டிய ஆரம்பநியதிகள், சட்டதிட்டங்கள், மரபுகள் என்பன கணக்கியல் எண்ணக் கருக்களாகும். கணக்கியலில் எண்ணக் கருக்களும் போதிய கருதுகோள் தொகுதிகளும் இல்லாவிடின் கணக்கீட்டு அறிக்கை தயாரிக்கப்படும்போது அவை தொடர்பாக பல்வேறு சிந்தனைகள் ஏற்படுவதற்கு இடம் ஏற்படும். இத்தகைய எண்ணக் கருக்களும் முடிவுகளும் பொருளாதார அலகொன்றை தயார் செய்யும் நிதி அறிக்கை பற்றிய வேறுபட்ட கொள்கைகளை தவிர்த்துக் கொள்ளவும். அதன் மூலம் ஒருமைத்தன்மையை பாதுகாத்துக் கொள்ளவும், தயாரித்து கொள்ளும் அறிக்கைகள் மூலம் காட்டப்படும் தகவல்களை உரியகட்சிக்காரர் இலகுவாக புரிந்து கொள்ளவும் அதில் இருந்து முடிவுகளைப் பெறவும் முக்கியமுடையதாக இருக்கின்றன.

சில சமயங்களில் கணக்கியல் எண்ணக் கருக்களும் முடிவுகளும் நிலையற்ற தன்மைக்கான காரணம் நிறுவனத்தின் இயல்பு, அதன் நோக்கம், கணக்காளரின் அனுபவங்கள் பரிச்சயங்கள் என்பவை தகவல்களை பெறும் கட்சியாளரின் தேவைகள், சட்டத் தேவைகள், பொருளாதார சமூக காரணிகள் என்பவற்றால் வேறுபடுவதனால் ஆகும். பொதுவாக கணக்கியல் எண்ணக்கரு கீழ் வரும் பண்புகளைக் கொண்டதாக காணப்பட வேண்டும்.

1. எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப் படுதல் வேண்டும்,
2. குறிப்பிட்ட ஒரு தொழில்பற்றி அறிய விரும்புவர்களுக்கு அது பொருள் கொடுக்கக்கூடியதாக அல்லது உபயோகமான தகவல்களை அளிப்பதாக அமைய வேண்டும்.
3. கோட்பாடானது தேவையற்ற சிக்கல்களையும் வீண் செலவுகளையும் தவிர்த்து நிறைவேற்றப்படக் கூடியதாய் இருத்தல் வேண்டும்.
4. குறித்த நோக்கத்தினை நிறைவேற்றக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
5. கோட்பாடானது ஒத்துப் பார்ப்பதற்குரிய தன்மைகள் கொண்டிருத்தல் வேண்டும்.

இன்று பல கணக்கியற் கோட்பாடுகள் கணக்கியல் நிபுணர்களினால் பின்பற்றப் படுகின்றன. எனினும் இக்கணக்கியல் கோட்பாடுகளுள் இலங்கை பட்டையக் கணக்கறிஞர் நிறுவனம் மூன்று எண்ணக் கருக்களை அங்கிகரித்துள்ளது. இவற்றை இலங்கை நியம இலக்கம் மூன்று ( SLas - 3 ) என்பர் SLas - 3 இல் உள்ள எண்ணக்கருக்களாவன

1. செயற்படும் வியாபார அமைப்பு பற்றிய எண்ணக்கரு
2. அட்டுறு எண்ணக்கரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கொள்கைமாறா எண்ணக்கரு

ஆனால் இங்கிலாந்தின் பட்டையக் கணக்கறிஞர் நிறுவனமும் ஏனைய கணக்கீட்டு தாபனங்களும் மேலே கூறப் பட்ட மூன்று வகையான எண்ணக் கருக்களோடு முன்எச்சரிக்கை பற்றிய எண்ணக் கருக்களையும் ( Prudence ) சேர்த்து இங்கிலாந்து நியமம் என்று கூறுகின்றன. இவற்றைதவிர மேலும் பல எண்ணக் கருக்கள் நடைமுறை யில் பின்பற்றப்படுகின்றன அவையா வன.

4. வியாபார அலகுசார் எண்ணக்கரு
5. வரலாற்று கிரய எண்ணக்கரு
6. கால எண்ணக்கரு
7. பண அளவு எண்ணக்கரு
8. வெளிப்படுத்தும் எண்ணக்கரு
9. தேறிய / கைக்கெட்டிய எண்ணக்கரு
10. பொருள் சார் எண்ணக்கரு
11. இரட்டைவிளைவு எண்ணக்கரு

என்பனவாகும். மேலே குறிப்பிட்ட பன்னிரண்டு எண்ணக் கருக்களின் விளக் கம் கீழ் விளக்கிக் காட்டப்படுகின்றது

## 1. செயற்படும் வியாபார அமைப்பு பற்றிய எண்ணக்கரு

நிறுவனம் ஒன்று தொழிற்பாடுகளை ஆரம்பிக்கும்போது அது தொடர்ச்சியாக இயங்கும் ஒருநிலையில் கணக்குகளைப் பேண இவ் எண்ணக்கரு உதவி புரிகின்றது. இவ் எண்ணக்கருவை ஏற்பதனால் நிறுவ னத்தின் கலைத்தலை கருத்தில் கொண்டு நிதிக்கூற்றுகள் தயாரிக்கப் படுவதில்லை. நிறுவனம் கலைக்கப்படும் என்ற நிலையில் முடிவுக் கணக்குகள் தயாரிக்கும் போது

1. முதலீட்டாளர் கடன் கொடுநர் முத லிட முன்வர மாட்டார்கள்
2. தேறிய சொத்து குறைவடையும்
3. சொத்துகள் புத்தக விலையிலும் குறித்த விலையிலும் விற்பனை செய்ய வேண்டிவரும்

மேற்குறித்த சிக்கல்களை தவிர்த்து முடிவுக் கணக்குகளை தயாரிப்பதற்கும் நிறு வனத்தின் ஐந்தொகை தயாரிப்பதற்கும் தொடர்ந்து இயங்கும் எண்ணக் கருவே துணை புரிகின்றது.

## 2. அட்டுறு எண்ணக் கரு / சேர்வுறள் எண்ணக்கரு

குறித்த நிதியாண்டுக்குரிய வருமானங் களும் செலவீனங்களும் பெறப்பட்டே இழக் கப்படுகின்றது என்ற அடிப்படையில் வரு மான கூற்றுகள் இவ் எண்ணக் கருவின்படி தயாரிக்கப்படுகின்றது. இதனால் குறித்த நிதியாண்டுக்குரிய பெறப்பட வேண்டிய வருமானங்கள் வருட வருமானமாகவும் செலுத்தப்படவேண்டிய செலவீனங்கள் வருட செலவீனமாகவும் கொள்ளப்படும். இவ் எண்ணக்கருக்களின் அடிப்படையில் காசு கணக்கியலும் ( Cash Accountancy ) நிதிக்கணக்கியலும் ( Financial Accountancy ) வேறுபடுகின்றது. ஏனெனில் காசுக் கணக்கியலில் அட்டுறு எண்ணக்கரு பயன் படுத்தப்படுவதில்லை. காசுக் கணக்கியலின் குறித்த நிதியாண்டில் பெற்றுக் கொண்ட காசும் கொடுப்பனவு செய்த காசும் மாத் திரம் பதியப்படும். ஆனால் நிதிக்கணக்கிய லில் (நிதிக்கூற்று) குறித்த ஆண்டுக்குரிய பெற்ற பெறவேண்டிய வருமானங்களும் கொடுத்த கொடுக்க வேண்டிய செலவீனங் களும் பதியப்படுகின்றன. எனவே கால எண்ணக்கரு இவ் எண்ணக்கருவில் கூடிய செல்வாக்கை செலுத்துகின்றது.

## 3. கொள்கை மாறா எண்ணக்கரு / பழமை பேணும் எண்ணக்கரு

நிறுவனம் ஒன்று ஆரம்பகாலம்தொட்டு மேற்கொண்ட கணக்கு வைப்பு முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து வரும் காலங்களுக்கும் தொடற்சியாக கடைப்பிடிக்கவேண்டும் என்பதனை இவ் எண்ணக்கரு கூறுகின்றது. எனினும் இவ் எண்ணக்கருவின்படி நடைமுறையில் உள்ள நிலமையை விடக் கூடிய தேறிய வருமானத்தையும் சிறந்த நிதி நிலைமையும் காட்டுவதாக இருந்தால் மாத்திரம் தற்போது பின்பற்றப்படும் கணக்கு முறையில் ஏதும் நுட்பமுறைகள் மாற்றி அதற்கு பிரதியீடு செய்யும் வேறோர் கணக்கு முறையை அறிமுகம் செய்யலாம். உதாரணமாக ஒரு நிறுவனம் சொத்துக்களின் தேய்மானத்தை கணிப்பதற்கு நேர்கோட்டு முறை ஒடுங்கு பாகுமுறை இருந்தபோதும் அந்நிறுவனமானது சொத்தின் தேய்வின் நேர்கோட்டு முறையில் கணிக்குமாயின் அது தொடர்ந்தும் இம் முறையிலேயே பின்பற்றி செல்ல வேண்டும் எனக் குறிப்பிடலாம். இந்த முறையை இடையில் மாற்ற வேண்டுமானால் நிறுவனம் ஏதாவது தகுந்த காரணத்தின் அடிப்படையில் மாற்றமுடியும்.

## 4. முன் எச்சரிக்கை எண்ணக்கரு

சம்பிரதாய முறைப்படி நிதிக் கூற்றுக்கள் மூலம் நிறுவனம் ஒன்றின் செயல்பாட்டு லாபமும் நிதித் தன்மையும் தெளிவுபடுத்தப்படுகையில் இக் கொள்கை முக்கியமானதாகும். இவ் எண்ணக் கருவின்படி போலியாக ஒரு நல்ல நிலையை உண்டாக்கும் நிலை தடைப்படும், இவ் எண்ணக் கருவை செயற்படுத்தினால் தேறப்படாத இலாப கணக்குகள் பதிவாவதை தவிர்ப்பதுடன் எதிர்காலத்தில் ஏற்பட கூடும் என எதிர்பார்க்கப்படும் நட்டங்களுக்காக ஒதுக்கலும் நிகழும். அதனால் இவ்எண்ணக் கருவின் உபயோகத்தின் போது இலாபத்தை குறைத்து காட்டும் வகையில் பதிவு செய்தல் நிகழும். ஐயக் கடனுக்காக ஏற்பாடு செய்தல், இருப்பு சரக்கை மதிப்பீடு செய்தல், கிரயம or தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்ததைப் பதிதல்போன்றன இவ் எண்ணக்கருவின்படி நிகழும். இவ்எண்ணக்கரு ஒதுக்கத்தை ஏற்படுத்தி நிறுவனம் தொடர்பான உண்மை நிலையை காட்டாது போகலாம் என்பதனால் இவ் வெண்ணக்கருவிற்கு கணக்காளர் சிலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

## 5. தொழில் முழுமை எண்ணக்கரு / தனிமனித எண்ணக்கரு

இவ் எண்ணக் கருவின்படி நிறுவனங்களின் கணக்குகள் அதன் உடமையாளர்களில் இருந்து வேறுபட்டதாக பராமரிக்கப்படுகிறது. அதாவது முயற்சியாளன் வேறு உடமையாளன் வேறு என்ற கருதுகோளைக் கொண்டு கணக்கு வைத்தல்நடவடிக்கைகள் பின் பற்றப்படுகிறது தனிவியாபாரம் பங்குடமை என்பன சட்டரீதியாக உரிமையாளரிடம் இருந்து வேறுபட்ட நிறுவனங்களாக இல்லாவிடினும் முடிவுக்கணக்குகளை தயாரிக்குகையில் உரிமையாளரிடம் இருந்து வேறுபட்ட நிறுவனங்களாகவே கருதப்படுகின்றன.

உதாரணமாக: இந்நிறுவனங்களில் மூலதனக்கணக்கு, எடுப்பனவுக்கணக்கு, நடைமுறைக்கணக்கு போன்ற கணக்குகள் பேணப்படுவதைக் குறிப்பிடலாம். கம்பனியைப் பொறுத்த வரையில் சட்டமே இந்த வேறுபாட்டினை ஏற்படுத்தி தனித் தன்மையை உண்டு பண்ணுகின்றது. தனிவியாபாரம், பங்குடமை என்பவற்றிக்கு சட்டப்படி தனிமனித அந்தஸ்து இல்லை. ஆனால் இவ் எண்ணக்கரு கணக்கியல் ரீதியில் தனிமனித அந்தஸ்தை வழங்குவதனால் இது சட்டத்தை புறக்கணிப்பதாக கூறப்படுகிறது.

## 6. கிரய எண்ணக்கரு / வரலாற்றுக் கிரய எண்ணக்கரு

நிறுவனம் ஒன்றின் நிலையான சொத்துக்கள் அவற்றின் கிரய பெறுமதியிலேயே ஐந்தொகையில் காட்டப்பட வேண்டும் என இவ் எண்ணக்கரு கருதுகின்றது. எனவே நிலையான சொத்துக்கள் ஐந்தொகையில் கிரயத்தில் இருந்து தேய்வு ஒதுக்கம் கழித்து தேறிய பெறுமதி காட்டப்படுதல் இவ் எண்ணக்கருவுக்கு முரணானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கால எண்ணக்கரு

தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவின் படி நிறுவனம் ஆனது பல காலத்துக்கு தொடர்ந்து இயங்க வேண்டி இருக்கின்றது. எனவே நிறுவனத்தில் பெறுபேற்றை அறிந்து கொள்வதற்காக நிறுவனம் எடுக்கப்படும் காலம்வரை பொறுத்திருக்க வேண்டும். ஆனால் பல்வேறு தேவைகளுக்கு நிறுவனத்தின் பெறுபேறு அறிய வேண்டி இருப்பதனால் நிறுவனத்தின் ஆயுட் காலததை பகுதி பகுதிகளாக பிரித்து அக்கால பகுதிக்கு ஏற்ப நிறுவனத்தின் பெறுபேற்றை அறிய வேண்டியுள்ளது. இதற்குக் கால எண்ணக்கரு அடிப்படையாக இருக்கின்றது. வழமையில் ஒரு வருடம் நிதியாண்டாக கொள்ளப்படுகின்றது. குறிப்பிட்ட நிதியாண்டிற்கு ஒருமுறை நிறுவனத்தின் இலாபநட்டத்தை அறிந்து கொள்வதற்கும் வருமான வரிகளைச் செலுத்துவதற்கும், நிதி அறிக்கைகளை வெளியிடுவதற்கும் முகாமைத்துவ முடிவுகளை மதிப்பீடு செய்வதற்கும் நிறுவனத்தின் எதிர்கால தீர்மானங்கள் முன் கூட்டியே மதிப்பிட்டுக் கொள்வதற்கும் இவ் எண்ணக்கரு துணைபுரிகின்றது.

8. பண அளவு எண்ணக்கரு

இதன்படி பொருளாதார அலகொண்றின் செயற்பாட்டினால் பணத்தினால் கணிக்கக்கூடிய வற்றை மாத்திரம் கணக்கீட்டுக்கு சேர்த்து கொள்ளப்படும். இவ்வாறு கணக்கியற் செயல்பாட்டிற்கு பண அளவு அலகை உபயோகிக்கையில் சில கருதுகோள்களை கவனத்தில் கொள்ள வேண்டும். அவையாவன.

1. பணத்தின் பெறுமதி மாறாது
2. பணத்தால் எல்லாவற்றையும் அளவிடலாம்
3. பணம் ஓர் மாற்று ஊடகம்

இதன்படி மாறும் தன்மை உடைய (பணவீக்க ஒடுக்க காலங்களில்) பணத்தின் பெறுமதி நிலையானதாகக் கொள்ளப்படுவதால் இவ் எண்ணக்கருவிற்கு ஏற்ப தயாரிக்கப்படும் நிதி அறிக்கைகள் நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றிய உண்மை நிலையை சில சமயங்களில் வெளிப்படுத்த மாட்டாது.

9. வெளிப்படுத்தும் எண்ணக்கரு

கணக்கீட்டு கூற்றுக்களை விமர்சிக்கையில் போதிய அளவு தகவல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும் என்பதை இது வலியுறுத்துகின்றது. இதன் அடிப்படையிலேயே ஐந்தொகையில் புறக்குறிப்புகள் இடம் பெறுகின்றன. இவ் எண்ணக்கரு காரணமாக நிதிக் கூற்றுக்களை பயன்படுத்தும் கட்சியாளர் அதில் உள்ள தகவல்களின் உண்மைத் தன்மையை விளக்கி தீர்மானங்களை எடுக்க முடியும்.

10. தேறிய கைகூடக் கூடிய எண்ணக்கரு

இவ் எண்ணக்கருவின் படி கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற, உடனேயே அவை யாவும் அவ் நிறுவனத்திற்குள் வந்துசேர்ந்து விட்டன என்ற தன்மையிலேயே இலாப நட்டம் கணக்கிடப்படுகிறது.

உதாரணமாக: கடன்விற்பனையின் பொழுது கடன்பட்டோன் கடனைதிருப்ப தரும்வரைக்கும் இலாபம் கணக்கிடப்படாமல் இருக்க முடியாது கடனுக்கு விற்ற உடனேயே அதனால் இலாபம் பெறப்பட்டது என்று கருதல் வேண்டும். ஆயினும் பண்டங்கள் கடனுக்கு விற்கப்பட்டு இருந்தால் கடன்பட்டோன் ஒரு பகுதி பொருட்களை காலம்தாழ்த்தி விற்பனை செய்தவனுக்கு திருப்பி அனுபலாம். எனினும் முழுவதும் விற்று இலாபம் பெறப்பட்டது என தீர்மானித்து கணக்குகள் தீர்மானிக்க இவ் எண்ணக்கரு உதவுகின்றது. இதனால் பண்டங்கள் திருப்பி அனுப்பும்போது இவ் எண்ணக்கருவின் மூலம் கணித்த லாபம் தவறுடையதாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. பொருள்சார் எண்ணக்கரு

கணக்குக் கூற்றுகளின் வருமானமும் செலவுகளும் அவற்றின் பொருள்சார் அடிப்படையில் வரையறுக்கப் படுகின்றன. இதனை வகைப்படுத்துகையில் காலத்தினதும் ஏற்படும் செலவினதும் அடிப்படையில் வருமானத்திற்கு அதிகமாக பாதிப்பை ஏற்படுத்துமாயின் அவ்வாறு வகைப்படுத்தாது கணக்கு கூற்றுகளை தயாரித்தல் ஆகும். என்று இவ் எண்ணக்கரு கூறுகிறது. இதன்படி ஒரு விடயத்தை வகைப்படுத்தும் போது கணக்காளர் விருப்பம்போல் பொருத்தமான வகையில் தீர்மானம் எடுக்கலாம். விடயம் ஒன்றை வகைப்படுத்துவதற்கு ஏற்படும் செலவும் காலமும் அவ்விடயத்தின் பெறுமானத்தைவிட அதிகமாயின் பொருத்தமான ஒரு தீர்மானம் எடுப்பதன் மூலம் நிதி கூறுகள் தயாரித்தலுக்கு சீராக்கம் செய்யலாம்.

## 12. இரட்டைவிளைவு எண்ணக்கரு

நிறுவனத்தில் நடைபெறுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் பூரண இரட்டை பதிவு அடிப்படையிலேயே ஏடுகளில் பதியப்பட வேண்டும் என்பதையே இது விளக்குகின்றது. அதாவது கொடுக்கல் வாங்கள்கள் இரட்டை தன்மை பொருந்தியதாக அமையும். இவ் எண்ணக்கருவின் அடிப்படையிலேயே கணக்கியல் சமன்பாடு (சொத்துகள் = பொறுப்புகள் + உரிமை) உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு இரட்டை தன்மையில் ஒருதன்மை சொத்துக்களாலும் மற்றைய தன்மை பொறுப்புகள் மூலதனம் ஆகியவற்றின் மொத்த கூட்டுத்தொகைக்கு சமன்ஆனதாயும் அமையும். பெறப்படும் பயன்கள் வரவாகவும் இழக்கப்படும் பயன்கள் செலவாகவும் கொண்டு பதியப்படுகின்றன. ஒரு நிறுவனத்தின் இலாபத்திற்கும் உள்ள வேறுபாடும் நட்டங்களும் செலவீனங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் அதன் மூலதனத்தை கூட்டும் அல்லது குறைக்கும். மொத்தசொத்துக்களில் இருந்து பொறுப்புகளை கழிக்கும்போது மூலதனம் பெறப்படுகின்றது.

கணக்கியல் எண்ணக்கருக்கள் நிதிக் கூற்றுக்களில் பயன்படுத்தப்படும் தன்மையை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கலாம்.

1. தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு :- 31.3-93 இல் உள்ளபடியான சுதா என்பவரின் ஐந்தொகைத் தலையங்கம் மூலம் விளக்கப்படுகின்றது.
2. அட்டுறு எண்ணக்கரு :- சம்பளநிலுவை வாடகை வருமதி என்பன காட்டப் பட்டுள்ளது.
3. கொள்கைமாறா எண்ணக்கரு :- பெறுமானத்தேய்வு, நேர்கோட்டு முறையில் காட்டப்பட்டுள்ளது.
4. வியாபார அலகுசார் எண்ணக்கரு:- இங்கு மூலதனக் கணக்கு எடுப்பனவுக் கணக்குகள் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் தனியாக முடிவுக் கணக்கும் தயாரிக்கப்பட்டுள்ளது.
5. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு :- நிலையான சொத்தின் கொள்விலை மூலம் விளக்கப்பட்டுள்ளது.
6. கால எண்ணக்கரு :- 31.03.93 திகதியில் உள்ளவாறாக ஐந்தொகையின் மூலமாகவும் விளக்கப்பட்டுள்ளது.
7. பண அளவீட்டு எண்ணக்கரு :- நிறுவனத்தின் சொத்துக்கள் பணப்பெறுமதியில் காட்டப்பட்டு இருப்பதன் மூலம் விளக்கப்பட்டுள்ளது.
8. வெளிப்படுத்தும் எண்ணக்கரு :- இதனைப்பயன் படுத்தும் கட்சியாளரான சுதா காணப்படுவதினால் அதன் உண்மைப் பெறுமதி தெளிவாக்கப்படுகின்றது.
9. தேறிய / கைக்கெட்டிய எண்ணக்கரு :- கடன் விற்பனை மூலம் பெற்ற இலாபம் முழுவதும் கணிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31.3.93 இல் உள்ளவாறான சுதா என்பவரின் ஐந்தொகை

| பொறுப்பு | தொகை | தொகை | சொத்து | கொள் விலை | பெறுமான தேர்வு | மீதி |
|---|---|---|---|---|---|---|
| மூலதனம் | 38700 | | நிலையான சொத்து | | | |
| தேறிய இலாபம் | 15900 | | காணிகட்டிடப் | 35000 | — | 35000 |
| | 54600 | | தளபாடம் | 12000 | 4000 | 8000 |
| பற்று | ( 2000 ) | 52600 | முதலீடு | | | 43 000 |
| நீண்டகாலக் கடன் | | | | | | |
| 5% வங்கி கடன் | | 20000 | நடைமுறைச்சொத்து | | | |
| குறுங்காலக்கடன் | | | இறுதி இருப்பு | | 12000 | |
| கடன்கொடுனர் | 28000 | | கடன்படுனர் | 30000 | | |
| அட்டுறு சம்பளம் | 1000 | | அறவிடமுடியாகடன் | ( 300 ) | 29700 | |
| சென்மதிஉண்டியல் | 1000 | | முற்பணவாடகை | | 400 | |
| வங்கிமேலதிக பற்று | 200 | 30200 | காசு | | 17 700 | 59800 |
| | | 102800 | | | | 102800 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. இரட்டை விளைவு எண்ணக்கரு :- இரட்டை விளைவு தத்துவத்தின்படி காணப்படுகின்றது. அதாவது ஐந் தொகையில் சொத்து = பொறுப்பு என் பவற்றின் மூலம் தெளிவாக்கப்படு கின்றது.

11. பாதுகாப்பு எண்ணக்கரு :- அறவிட முடியா கடன் ஒதுக்கம் செய்திருப்பதன் மூலம் விளக்கப்படுகின்றது.

## மேலதிக தகவல்

நிலையான சொத்துக்கள் நேர்கோட்டு முறையில் தேய்வு கணிக்கப்படுகிறது.

மேற்தரப்பட்ட ஐந்தொகையின் தெளி வான விளக்கம் 51 ஆம் பக்கத்தில் தரப்பட் டுள்ளது.

---

### அரபு லீக்
### Arab League

முதல் உலகப்போரின் ஆட்டோமான் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் அரேபிய மக்களிடையே எழுந்த விழிப்புணர்ச்சியால் இது ஏற்படுத்தப்பட்டது. ( 1945 மார்ச் 22 ) அரபு லீக் தன்னை ஐ.நா. சபையின் ஒரு பிரிவாகவே கருதுகின்றது. ஐ.நா. பொதுச் செய லாளர் இதன் பார்வையாளராகப் பங்கேற்கலாம். உறுப்பு நாடுக ளாக இருபது உள்ளன.

அவை: அல்ஜீரியா, பஹ்ரைன், குவைத், லெபனான், லிபியா, மாரிடோனியா, மொராக்கோ, ஓமான், பாலஸ்தீனம் (P.L.O.) கட்டார், சவுதிஅரேபியா, சோமாலியா, சூடான், சிரியா, டுன்சியா, ஐக்கிய அரபுக் குடியரசு, யேமன், ஆகியன.

பொதுச் செயலாளர் எஸ்மத் அப்துல்மெகுயிட்

தலைமையகம்: ஈராக்கின் குவைத் ( 1990 ) ஆக்கிரமிப்பிற்குப் பின் கெய்ரோவுக்கு மாற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராஜன் ஜெயராமன்,
B. Com (Hons) M. B. A. (Delhi) AMIPM, (Sri Lanka)
விரிவுரையாளர்,
வணிக முகாமைத்துவத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

# வியாபார மூலதனம்
# BUSINESS CAPITAL

## 0.1 அறிமுகம்

எந்த ஒரு நிறுவனத்தின் செயற்பாட்டிற்கும் மூலதனம் மிகவும் அவசியமானதாகும். எந்த ஒரு வியாபார அமைப்பினையும் ஆரம்பிக்கும் போது, முதலில் மூலதனம் தொடர்பான விடயத்திற்கு முக்கியத்துவமளித்தல் அவசியம். அதாவது மூலதனம் தொடர்பாக இரண்டு வினாக்களுக்கு விடைக்காணப்படுத்தல் அவசியமானதாகும்.

அ) எவ்வளவு மூலதனம் வேண்டப்படுகின்றது?

ஆ) அம் மூலதனத்தினை எங்கிருந்து பெறுவது?

அந்தவகையில் மூலதனம் முக்கிய பங்கினைக் கொண்டுள்ளது. வெவ்வேறு வகையான வியாபார அமைப்புக்களில் வெவ்வேறு முறைகளில் மூலதனம் திரட்டப்படுகின்றது.

உதாரணமாக

தனி வியாபாரத்தில் தனி ஒருவரினால் மூலதனம் இடப்படும் பங்குடமையில் பங்காளரின் மூலதனம் காணப்படும். கம்பனியினைப் பொறுத்து பங்குதாரர்களிடமிருந்து மூலதனம் திரட்டப்பட்டிருக்கும் நிறுவனங்களில் உடமையாளர்களின் மூலதனத்தை தவிர, கடன்மூலதனமும் காணப்படும். எனவே மூலதனமானது வெவ்வேறு வழிகளில் திரட்டப்படுவதுடன், வெவ்வேறு வகைகளாக வகைப்படுத்தப்படக் கூடியதுமாகும்.

இக் கட்டுரையானது நிறுவலத்தில் காணப்படும் வெவ்வேறு மூலதனவகைகளைப் பற்றி ஆராயவுள்ளது. "வியாபர மூலதனம்" என்றால் என்ன?

ஒரு வியாபாரத்தின் செயற்பாட்டிற்காக அவ் நிறுவனத்திலுள்ள பொருட்கள், கருவிகள், கட்டிடம், இருப்பு போன்றவற்றில் ஈடுபடுத்தப்பட்ட பணமே அவ் நிறுவனத்தின் வியாபார மூலதனமாகும். வியாபார மூலதனமானது வெவ்வேறு வழிகள் மூலம் திரட்டப்பட்டிருக்கும். "மூலதனக் கட்டமைப்பு" என்ற பதம்மூலம் இது வெளிக்கொணரப்படுகின்றது. "மூலதனக்கட்டமைப்பு" என்னும் போது நிறுவனம் வெவ்வேறு மூலகங்களிலிருந்து (Source) பெற்றுக் கொள்ளப்பட்ட, மூலதனத்தின் விகிதாசார அமைப்பினை எடுத்துக்காட்டுவது மூலதனக்கட்டமைப்பு ஆகும். மூலதனக் கட்டமைப்பு மூலம், நிறுவனத்தின் மூலதனத்தில் ஒவ்வொரு மூலங்கள் வழியாகவும் பெறப்பட்ட மூலதனத்தின் பங்கினை அறியமுடிகின்றது குறுங்காலத்திற்கான மூலதனம் நிதியீட்டம் செய்யப்பட்ட முறை "நிதிக்கட்டமைப்பு" என்ற பதம் கொண்டு அழைக்கப்படும்.

## 1.2 நிலையான மூலதனமும் சுழலும் மூலதனமும் (Fixed Capital and Circulating Capital)

நிறுவனம் ஒன்றில் நீண்டகால நோக்கம் கருதி நிலையான சொத்துக்களில் ஈடுப

டுத்தப்படும் மூலதனத்தை நிலையான மூல தனம் என வரையறை செய்யலாம். உதாரணமாக நிறுவனம் ஒன்றில் காணப்படும் இயந்திரங்கள், கட்டிடம், போன்ற சொத்துக்களில் ஈடுபடுத்தப்படும் மூலதனத்தை குறிப்பிடலாம். நிலையான மூலதனம் என வரையறை செய்யும் போது காலத்தினைக் கருத்தில் கொண்டே அவ் முடிவு எடுக்கப்படுகின்றது. அதாவது நீண்டகால நோக்கில் ஈடுபடுவதாகக் காணப்படும் மூலதனம் நிலையான மூலதனம் என அழைக்கப்படுகின்றது.

சுழலும் மூலதனம் என்னும் போது வியாபார நடவடிக்கையில் அடிக்கடி மாற்றமடைகின்ற மூலதனத்தினை சுழலும் மூலதனம் என வரையறை செய்யலாம். ஒரு உதாரணம் மூலம் இதனை எளிமையாக விளக்கமுடியும் ஒரு உற்பத்தி நிறுவனம் ஒன்றில் காணப்படும் மூலப் பொருட்களை எடுப்பின், அது உற்பத்தியின் போது முடிவுப் பொருளாக மாற்றப் படுகின்றது. பின்பு அது விற்பனை செய்யப்படுகின்றது, பணம் பெற்றுக் கொள்ளப் படுகின்றது. பின்பு அப்பணத்தினைக் கொண்டு உற்பத்திக்கான மூலப் பொருள் பெற்றுக் கொள்ளப்படுகின்றது இங்கு மூலதனம் அடிக்கடி மாற்றமடைகிறதனை அவதானிக்க முடிகிறது.

இங்கு மூலப் பொருள் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்படுகின்றது. உற்பத்தியைத் தொடர்ந்து இருப்பு அதிகரிக்கும். இருப்பு காசுக்கு விற்பனை செய்யப்படும் போது இருப்பானது குறைவடையும், காசு மீதி அதிகரிக்கும். மீண்டும் இருப்பானது கொள்வனவு செய்யப்படும் போது, இருப்பு அதிகரிக்கும். காசு குறைவடையும் இங்கு மூலதனமானது விரைவாக மாற்றமடைவதனைக் கண்டு கொள்ள முடிகின்றது. அத்துடன் மூலதனமானது ஒரு சுழற்சிக்கு உட்படுத்தப்படுவதனையும் அவதானிக்க முடிகிறது இதன் காரணத்தால் இம் மூல தனம் ''சுழலும் மூலதனம்'' எனப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.

நியைான மூலதனம் சுழலும் மூலதனம் என்பனவற்றிற்கு இடையே சில குறிப்பிடத் தக்க வேறுபாடுகளை அவதானிக்க முடியும். அவையாவன,

i) நிலையான மூலதனம் நீண்டகாலத்தில் மாற்றமடைவது. ஆனால் சுழலும் மூலதனம் குறுங்காலத்தில் மாற்றமடைவது. எனவே இவ் இரண்டு வகையான மூலதனங்களையும் வேறுபடுத்துவதில் ''காலம்'' (Time) மிக முக்கியமானதொன்றாகக் காணப் படுகின்றது.

ii) இவ் இரண்டு வகையான மூலதனங்களும் வெவ்வேறு கால அளவினைக் கொண்டுள்ளதனால், இவ் மூலதனங்கள் பெற்றுக் கொள்ளப்படும் வழி முறைகளும் வேறுபட்டவையாகக் காணப்படுகின்றது. உதாரணமாக ஒரு நிறுவனம் நிலையான சொத்து ஒன்றினைக் கொள்வனவு செய்யும் பொருட்டு பெற்றுக் கொள்ளப்படும் கடனும், இருப்பினைக் கொள்வனவு செய்யும் பொருட்டு பெற்றுக் கொள்ளப்படும் கடனும் வேறுபட்ட மூலங்களிலிருந்து (Source) பெறப்படுவதுடன், வேறுபட்ட கால அளவினையும் கொண்டதாகக் காணப் படும்.

iii) இவ் இருவகையான மூலதனங்களும் வேண்டப்படும் அளவு நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபடும். முயற்சியின் தன்மையைப் பொறுத்து இது வேறு படும். உதாரணமாக ஒரு உற்பத்தி நிறுவனத்தினைப் பொறுத்து கூடுதலான அளவு நிலையான மூலதனமும், ஒப்பீட்டு ரீதியில் குறைவான அளவு சுழலும் மூலதனமும் வேண்டப்படும். ஆனால் ஒரு சில்லறை வியாபாரியினைப் பொறுத்து கூடுதலான அளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழலும் மூலதனமும், குறைவான அளவு நிலையான மூலதனமும் வேண்டப்படும்.

நிலையான மூலதனம் சுழலும் மூலதனம் என வேறுபடுத்தும் போது, குறிப்பிட்ட ஒரு சொத்தானது என்ன நோக்கத்திற்கு பயன்படுத்தப்படுன்றது என்பதன் அடிப்படையிலும் அதனை வேறுபடுத்தலாம். உதாரணமாக உணவு விடுதி ஒன்றில் காணப்படும் தளபாடம் அவ்விடுதி உடமையாளரைப் பொறுத்து நிலையான மூலதனம். ஆனால் தளபாட விற்பனையாளனைப் பொறுத்து, விற்பனைக்காக வைத்திருக்கப்படும் தளபாடம் சுழலும் மூலதனமாகக் கருதப்படும். எனவே நிலையான மூலதனம், சுழலும் மூலதனம் எனப் பாகுபடுத்தும் போது சொத்துப் பயன்பாடு பற்றியும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

## 1.2 தொழிற்படும் மூலதனம் (Working Capital)

ஒரு நிறுவனம் தனது நாளாந்த செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு தேவைப்படும் மூலதனம் தொழிற்படும் மூலதனம் என வரையறை செய்யப்படும். நிறுவனத்தின் நாளாந்த செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படும் குறுங்கால சொத்துக்கள் தொழிற்படு மூலதனமாகக் கருதப்படும். இவை முக்கியமாக பணம், பணமாக மாற்றக் கூடிய ஆவணங்கள், வருமதியாளர்கள், இருப்பு என்பனவற்றினை உள்ளடக்கியதாகக் காணப்படும். தேறிய தொழிற்படும் மூலதனம் எனப்படுவது நிறுவனத்தின் நடைமுறைச் சொத்திற்கும் நடைமுறைப் பொறுப்பிற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தினைக் குறிக்கின்றது. கீழ்வரும் வாய்பாடு மூலம் இது எடுத்துக் காட்டப்படுகின்றது.

| |
|---|
| தேறிய தொழிற்படும் மூலதனம் = நடைமுறைச் சொத்து – நடைமுறை பொறுப்பு |
| Networking Capital = C A – CL |

நிறுவனத்தின் திரவத்தன்மையை அளவிட இவ் வாய்ப்பாடு பயன்படுத்தப்படுகின்றது. உயர்ந்த திரவத்தன்மையை கொண்ட நிறுவனம் தனது கொடுப்பனவினைக் கொடுத்து தீர்ப்பதற்குத் தேவையான பணத்தினை எல்லா நேரங்களிலும் கொண்டுள்ளது என்பது கருத்தாகும். நிறுவனத்திற்கு நிறுவனம் தேவைப்படும் தொழிற்படு மூலதனத்தின் அளவு வேறுபடும். ஒரு நிறுவனத்திற்கு எவ்வளவு தொழிற்படு மூலதனம் தேவை என்பது பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. அவற்றில் முக்கியமாக பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம்.

1. நிறுவனத்தின் அளவு
2. நிறுவனத்தின் செயற்பாடு
3. கிடைக்கின்ற கடன்வசதி

## 1.2. தொழிற்படு மூலதனவகைகள்

நிறுவனம் ஒன்றிற்கு தேவைப்படும் தொழிற்படு மூலதனம் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

1. நிலையான தொழிற்படு மூலதனம் (Permanent Working Capital)
2. மாறுகின்ற தொழிற்படும் மூலதனம் (Variable Working Capital)

நிலையான தொழிற்படும் மூலதனம் என்னும் போது, நிறுவனத்திற்கு தொடர்ச்சியாக வருடம் பூராகவும் தேவைப்படும் அதாவது தனது செயற்பாடுகளை மிகக் குறைந்த மட்டத்தில் மேற்கொள்ள தேவைப்படும் மூலதனத்தினைக் குறிக்கும்.

மாறுகின்ற தொழிற்படும் மூலதனம் என்னும் போது குறிப்பிட்ட வருடத்தில் சில சந்தர்ப்பங்களில் தேவைப்படும் மேலதிகமான தொழிற்படு மூலதனத்தினைக் குறிக்கின்றது. உதாரணமாக நெருக்கடியான காலங்களில் (Peak Time) அதிகரித்த விற்பனையைச் சமாளிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்டு கூடுதலான அளவு இருப்பினைக் கொள்வனவு செய்ய வேண்டியிருக்கும். அதிகரித்த செயற்பாடுகளின் காரணமாக கூடுதலான கொடுப்பனவினைச் செலுத்த வேண்டி இருக்கும். இவ் சந்தர்ப்பங்களில் மேலதிகமான தொழிற்படும் மூலதனம் தேவைப்படும்.

ஒரு நிறுவனமானது தடையின்றி தனது செயற்பாடுகளை மேற் கொள்ளவும், கொடுப்பனவினை ஒழுங்காகக் கொடுத்துத் தீர்க்கவும், தேவைக்கு ஏற்ப போதிய இருப்புக்களைக் கொள்வனவு செய்து வைக்கவும் தொழிற்படும் மூலதனம் மிகவும் முக்கியமானதாக வேண்டப்படுகின்றது.

*முடிவுரை:*

நிறுவனங்களில் வெவ்வேறு வழிகளில் மூலதனம் திரட்டப்படுகின்றது. அத்துடன் ஈடுபடுத்தப்படும் மூலதனமும் நிறுவனத்தில் வெவ்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப் படுகின்றது. நிறுவனத்திற்கு நிறுவனம் தேவைப்படும் மூலதன அளவு வேறுபடும். ஆனால் எல்லா நிறுவனங்களிற்கும் மூலதனம் அவசியமானதாகும். □

*உசாத்துணை நூல்கள்:*


1) Van - Horne C: *Fundamentals of Financial Management*

2) V. K. Bhalla: *Financial Management*



முக்குக்கண்ணாடிச் சட்டங்களை உற்பத்தி செய்யும் நிறுவனம்:

அலைபேர்ட எதிரிசிங்க - சொங்டோ ( தனி ) லிமிட்டட்

Albert Edrinsinghe Songdoh ( PVT ) Ltd.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அ.ஜெயதீபன்
ஆண்டு 13
வர்த்தகப் பிரிவு 94

# புதிய நிறுவனம் ஒன்று கைத்தொழிலுக்குள் நுழையும் போது எதிர்கொள்ளும் தடைகள்

நிறுவனம் ஒன்று கைத்தொழிலுக்குள் நுழையும்போது பலவிதமான தடைகளை எதிர்நோக்குகின்றது. இங்கு நிறுவனம் என்னும்போது குறிப்பிட்ட பொருளை உற்பத்திசெய்யும் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தைக் குறிக்கின்றது. ஆனால் கைத்தொழில் என்னும்போது ஒரு பரந்துபட்ட நோக்கில் நோக்கப்படுகிறது. அதாவது ஒரு குறிப்பிட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் பல நிறுவனங்களின் சேர்க்கையே கைத்தொழில் என்கின்றோம்.

உதாரணமாக:

Lanka Milk Foods ( CWE ) Ltd என்பது பால்மா உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனமாகும். ஆனால் [Lank Milk Foods Nestle Milco போன்ற பால்மா உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் ஒன்று சேர்ந்தே பால்மாக் கைத்தொழில் ( Milk Industries என அழைக்கப்படுகிறது. நிறுவனம் ஒன்று கைத்தொழிலுக்குள் நுழையும்போது எதிர் கொள்ளும் தடைகளை பின்வரும் வரை படம் காட்டுகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக புதிய நிறுவனம் ஒன்று ஏற்கனவேயுள்ள கைத்தொழிலுக்குள் நுழையும்போது பின்வரும் தடைகளை எதிர்நோக்குகின்றது.

1. மூலதனம்

ஒரு நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு அதிகரித்த மூலதனம் தேவையாயின் புதிய நிறுவனங்கள் பாரிய மூலதனத்தை திரட்ட முடியாமல் போய்விடும். இதனால் அதிகரித்த மூலதனத் தேவையானது புதிய நிறுவனங்கள் கைத் தொழிலுக்குள் நுழைவதற்கு தடையாக அமையும் அதே வேளையில் ஏற்கனவே அக்கைத் தொழிலிலுள்ள நிறுவனங்களுக்கு இது சாதகமாக அமைகின்றது.

2. சிக்கன அளவு

ஒரு பொருளை அதிகரித்த அளவில் உற்பத்தி செய்யும்போது அலகுக்கான செலவினைக் குறைக்கும் கைத்தொழிலில் உள்ள பழைய நிறுவனங்களே இச்சிக்கன அளவினை அதிகரிக்க முடியும். இதன் காரணமாக புதிய நிறுவனங்கள் கைத் தொழிலில் நுழைவது தடையாகக் காணப்படும்.

3. உற்பத்தி வேறுபடுத்தல்

ஏற்கனவே கைத் தொழிலிலுள்ள நிறுவனங்கள் வாடிக்கையாளரின் நம்பிக்கைத் தன்மை நன்மதிப்பு என்பவற்றைக் கொண்டுள்ளன. அதேவேளை புதிய நிறுவனங்களைப் பொறுத்தவரை இத்தகைய நம்பிக்கைத்தன்மையை ஏற்படுத்துவதற்கே பண்ட நன்மதிப்பை ஏற்படுத்துவதற்கோ நீண்டகாலம் செல்லலாம். அது மட்டுமன்றி புதிய பொருட்களை அறிமுகப்படுத்தவும் அப்பொருட்கள் மீது நம்பிக்கைத் தன்மையை ஏற்படுத்தவும் பண்ட நன்மதிப்பினை ஏற்படுத்தவும் நீண்டகாலம் ஏற்படுவதுடன் அதிகரித்த செலவுகளும் ஏற்படும். இது புதிய நிறுவனங்களுக்குத் தடையாகக் காணப்படும்.

4. பங்கீட்டுப் பிரச்சனை

புதிய நிறுவனங்களைப் பொறுத்தவரையில் தமது பொருட்கள் சேவைகளை வினியோகிப்பதில் ஏற்படும் தடைகளும் கைத் தொழிலில் நுழைவதற்கு தடையாக அமையும்.

5. அரசின் கொள்கை

ஒரு குறிப்பிட்ட கைத்தொழில் தொடர்பாக அரசின் கொள்கை, அனுமதிப்பத்திரம் கொடுத்தல் என்பண புதிய நிறவணங்கள் சந்தைக்குள் நுழைவதற்கு தடையாக அமையலால். குறிப்பிட்ட உற்பத்தியில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதில் கட்டுப்பாடுகளை விதிப்பின் அக் கட்டுப்பாடானது புதிய நிறுவனங்கள் கைத்தொழிலுக்குள் நுழைவதற்கு தடையாக அமையலாம்.

உதாரணமாக :-

இலங்கையில் சிகரெட் உற்பத்தியில் இலங்கை புகையிலைக் கம்பனிக்கே அரசு அனுமதிப்பத்திரம் வழங்கியுள்ளது மற்றைய நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அரசு மறுப்பதால் புதிய நிறுவனங்கள் இக் கைத் தொழிலுக்குள் நுழைவதற்கு தடையாகக் காணப்படுகிறது.

6. பிரதியீட்டுப் பொருட்களின் தடை

ஒரு பொருளுக்கு மிக நெருங்கிய பிரதியீட்டுப் பொருள் காணப்படுமாயின் அப்பொருள் உற்பத்திக் கைத் தொழிலுக்குள் புதிய நிறுவனங்கள் நுழைவதற்கு தடையாக அமையும்.

உதாரணமாக :-

சீனிக்குப்பதிலாக கோர்ன் சிறப் ( Corn SyruP ) பாதுகாப்பு ஊழியர்களுக்குப் பதிலாக எலக்றோனிக் எலாம் சிஸ்ரம் (Electronic Alarm System )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. செலவு அனுகூலங்கள் :-

ஏற்கனவே கைத்தொழிலுக்குள் உள்ள நிறுவனங்கள் செலவு அனுகூலங்களைக் கொண்டிருப்பது புதிய நிறுவனங்கள் கைத் தொழிலுக்குள் நுழைவது தடையாக இருக் கும். பொதுவாக பின் வரும் காரணங்களால் ஒரு நிறுவனத்துக்கு செலவு அனுகூலம் ஏற்படும்.

1. தொழில் நுட்பம்.
2. நல்ல இடவமைவு.
3. அரசினுடைய மானியம்.
4. குறைந்த விலையில் தரமானமூலப் பொருட்களைப் பெறுவதற் கான வாய்ப்பு,
5. அனுபவ வளை கோடு.

8. வினியோகஸ்தரின் பேரம் பேசும் ஆற்றல்;

வினியோகஸ்தர் பேரம் பேசும் ஆற் றலைக் கொண்டிருப்பின் கைத் தொழிலுக் குள் நிறுவனம் நுழைவது கடினம் கொள் வனவாளர்கள் பலமாகக் காணப்படும் போது அவர்கள் வழங்கும் பொருட்களின் அல்லது சேவைகளின் தரத்தினை நிர்ணயிக் கலாம் அல்லது அது தொடர்பாக பேரம் பேசலாம். இதனால் புதிய நிறுவனங்கள் கைத்தொழிலுக்குள் நுழைவதற்கு பெரிதும் தடையாக அமையும்.

9. குடித் தொகை ரீதியான கார ணிகள் :-

சனத்தொகையின் வயதமைப்பில் ஏற் படும் மாற்றங்களும் வருமானப் பங்கீட்டில் ஏற்படும் சமமின்மையும் புதிய நிறுவனங் களின் கைத்தொழில் நுழைவினைப் பாதிக்கும்.

மேலே நாம் கண்ட தடைகளை ஒவ் வொரு நிறுவனமும் ஆராய்ந்து அதற்கேற்ப தங்களது தந்திரோபாயத் திட்டமிடலை மேற் கொண்டால் புதிய நிறுவனங்கள் தடைகளை ஓரளவிற்கேனும் வெற்றி கொண்டு கைத் தொழிலுக்குள் நுழைய முடியும் என்று எதிர்பாக்கலாம். □

---

மக்கள் வியாபார வங்கியிலிருந்து விலகிய நிறுவனத்தின் பெயர்;
கின்னஸ் மஹோரான் அன் கம்பனி லிமிட்டட்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. வின்சர்ஜோன்,
ஆண்டு 11,
வர்த்தகப்பிரிவு 94

# இலங்கை ஏற்றுமதியின் அண்மைக்காலப் போக்குகள்

## 1.0 அறிமுகம்

ஏற்றுமதி என்பது ஒரு நாடு தனக்கு மிகையான பண்டங்களை வேற்று நாடுகளுக்கு விற்பனை செய்வதனைக் குறிக்கும் இவ்வேற்றுமதியானது நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படும். இலங்கையைப் பெறுத்தவரையில் ஐரோப்பியர் வருகையோடு பொருந்தோட்ட பயிர்ச்செய்கையான தேயிலை, றப்பர், தெங்கு போன்ற விவசாயப் பொருட்களே ஏற்றுமதியில் முன்னனி வகுத்து வந்தது. இந் நிலைமை அறுபதுகள் வரையே நிலைத்திருந்தது. 1966ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஏற்றுமதி பன்முகப்படுத்தல் என்பதோடு இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. ஏற்றுமதியில் புதிதாக புகுத்தப்பட்ட தைத்தாடை, இரத்தினக்கல், வாசனைத்திரவியம் என்பவற்றை பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள் என்பார். இப் பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளே அறுபதுகளில் புகுத்தப்பட்ட பன்முகப்படுத்தலினால் கொண்டுவரப்பட்டதாகும். ஆதலால் இன்றைய ஏற்றுமதியில் பாரம்பரியமுள்ள பெருந்தோட்ட உற்பதிகளும். பாரம்பரியமற்ற கைத்தொழில் பொருட்களும் இணைந்துள்ளன எனக் கூறலாம்.

## 2.0 ஏற்றுமதி அபிவிருத்தியின் நோக்கம்

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திகளிலே குறிப்பிடத்தக்கது ஏற்றுமதி அபிவிருத்தியாகும். இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய அந்நிய செலாவணி வளத்தை பெறுவதற்கான பிரதான ஊடகமாக வணிகப் பொருள் ஏற்றுமதி அமைகிறது. இதனையே கட்புலனாகும் ஏற்மதிறு என்பர். இவ்வகையில் ஏற்றுமதியின் மேம்பாடு முக்கியம் பெறுகிறது உலக சந்தைகளுக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்வதனூடே அந்நிய செலாவணி உழைப்பதுடன் உற்பத்தியை பெருக்குவதற்கும் வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கும் வாய்ப்பாக அமைகிறது. ஏற்றுமதி அபிவிருத்தி அடையும் போது அரசவருமானங்கள் (அரசிறை) அதிகரித்துச் செல்லும். அதாவது ஏற்றுமதி தீர்வைகளால் மட்டுமன்றி இத்துறையில் பெரும் நிறுவனங்களின் வருமானங்கள் சார்ந்தும், விற்பனைகள் சார்ந்தும், அதிக வரிகளை பெற்றுக் கொள்ள முடிகிறது. அத்துடன் ஏற்றுமதி விரிவடையும்போது அதனடிப்படையில் பொருளாதர கட்டமைப்பு வளர்ச்சி அடையும். அதாவது வங்கி, போக்குவரத்து நீர்விநியோகம் மின்சாரவிநியோகம் பணச்சந்தை நடவடிக்கை என்பனவும் நன்கு வளர்ச்சி அடையும். இவை நீண்டகால வளர்ச்சிக்கு உதவும் ஏற்றுமதிகள் அதிகரிக்கும் போது உற்பத்தி திகரிக்க அது தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்கப்படுத்தும். இதன் மூலம் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்பதான பல நோக்கங்களைக் கொண்டதாக ஏற்றுமதி அபிவிருத்தி காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பல நோக்கம் கொண்ட ஏற்றுமதி அபிவிருத்தி ஆனது 1966 இல் கொண்டுவரப்பட்ட ஏற்றுமதி பன்முகப்ப டுத்தலினால் மேலும் சிறப்புற வளர்ச்சி கண்டது. பன்முகப்படுத்தலானது எழுபது களின் மேலும் வளர்ச்சியடைந்து எண்பது களின் இறுதியில் ஏற்றுமதிக் கட்டமைப்பி லேயே மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. அதாவது 1980 ஆம் ஆண்டு விவசாய பொருட்களின் ஏற்றுமதியானது 62% ஆக காணப்பட்ட மரவுரீதியற்ற பொருட்களான கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதி 33% ஆக காணப்பட்டது. ஆனால் இவை 1987 இல் விவசாயப்பொருள் 46% என்றும் கைத்தொழில்பொருள் 49% என்றும், 1990 இல் விவசாயப்பொருள் 36% எனறும் கைத்தொழில் பொருள் 52% என்றும் மாற் றியமைக்கப்பட்டது. இதற்குமுக்கிய கார ணம் மரபுரீதியற்ற ஏற்றுமதிகளில் காணப் பட்டதைத் தடை உற்பத்திகள் வேகமாக அதிகரித்தமையாகும்.

## 3.0 ஏற்றுமதிக்கு உதவும் நிறுவனங்கள்

ஏற்றுமதியை அபிவிருத்தி செய்ய பல வகையான அமைப்புக்கள் இலங்கையில் காணப்படுகின்றன. இவை தனியார் அமைப் புகளாகவும், அரச அமைப்புகளாகவும் உருப் பெற்றுள்ளவையாகும். இவற்றில் குறிப்பாக கூறக்கூடியவை.

1) ஏற்றுமதி உற்பத்தி கிராமியக் கம்பனி

2) சுதந்திர வர்த்தக வலயம் (Free Trade Zone)

3. இலங்கையின் உலக வர்த்தக நிலையம்

என்பனவாகும். இவை இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்திக்கு வேண்டிய பாரிய பல பணிகளை மேற் கொண்டு வருவதால் வர்த்தக மாணவர்களாகிய நாம் இந் நிறு வனங்களைப்பற்றி தெரிந்துவைத்திருப்பது அவசியமாகின்றது.

## 3.1 கிராமிய உற்பத்திக் கம்பனி

கிராமத்துறையைச் சேர்ந்த (வேளாண்மைசார் மற்றும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட குடிசைக்கைத் தொழில் உற்பத்திகள் என்பனவற்றை உள் ளடக்கிய) ஏற்றுமதி நோக்கிலான உற்பத் திப் பொருட்களை அதிகளவில் போட்டி நிலவும் சர்வதேச சந்தைக்கு எடுத்துச் செல்வதனை அறிமுகப்படுத்துவதற்கான உற்பத்தியாளர்களின் அடிமட்ட வர்த்தக நிலையம் ஒன்று என்றவகையிலே ஏற்றுமதி உற்பத்திக்கிராமியக் கருதுகோள் உருவாக் கப்பட்டது.

இத்தகைய 1 வது உற்பத்தியாளர் வர்த்தக நிலையம் குருநாகல் மாவட்டத் தில் தம்பதெனியா தேர்தல் தொகுதியில் ஸ்தாபிக்கப்பட்டது. இது தம்பெனிய வரை யறுக்கப்பட்ட ஏற்றுமதி உற்பத்தி அபிவி ருத்திக்கம்பனி என்ற பெயரில் அழைக்கப் பட்டு வருகிறது. அத்துடன் கம்பனிகள் சட்டத்தின்கீழ் 1981 இல் கம்பனிப்பதிவா ளரிடம் மக்கள் கம்பனியாக பதிவு செய்யப் பட்டது. ஏற்றுமதிக்கான கேள்வியை நிறைவு செய்வதே ஏற்றுமதி உற்பத்திக் கிராமத்தின் முக்கிய பணியாக இருந்தது. நாட்டின் ஏற்றுமதி ஸ்தாபனங்களுக்கு உற் பத்திப் பொருட்களை வழங்குவதே இதன் செயற்பாடாக இருந்தது. இந்தவகையில் ஏ. உ. கி. திட்டம் இலங்கையில் ஏற்றுமதி முயற்கிகளில் கிராமத்துறையின் சுறுசுறுப் பான பங்களிப்பினை நேரடியாகப் பெற முயன்றுவருவதுடன், அதன்மூலம் கிராமிய சமூகத்தின் கூட்டுமொத்த சமூக பொருளா தார நிலைமைகளை விருத்தி செய்யவும் முயன்றுவருகிறது. இந்த செய்தி திட்டம் பரஸ்பரம் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட ஒரு தொகுதிக் குறிக்கோளை நிறைவு செய்வதனை நோக்கமாகக் கொண்டு நிறு வப்பட்டது. ஏற்றுமதியினைப் பன்முகப் படுத்தல், பண்ணைமிகைகளை அதிகரித் தல், சந்தையை விருத்திசெய்தல் தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம், கிராமிய அபிவிருத்தியை மேம்படுத்தல் என்பன இக் குறிக்கோள்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கம்பனிகள் 50 or அதற்கு மேற்பட்ட பங்குதாரர்களை கொண்டிருக்க வேண்டு மென எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பணிப்பாளர்கள் 3 பேருக்கும் 10 பேருக்கும் இடைப்பட்டவர்கள் (பங்குதாரர்களால்) கிராம மக்களால் தெரிவு செய்யப்பட வேண் டியிருந்ததுடன் நான்குக்கு மேற்படாத பணிப்பாளர்கள் மட்டுமே இலங்கை ஏற்று மதி அபிவிருத்திச்சபையால் அப்பிரதேசங் களில் பணிபுரியும் அரச அதிகாரிகளிடம் இருந்து நியமனம் செய்யப்பட வேண்டிய வர்களாக இருந்தனர். அங்கீகரிக்கப்பட்ட மொத்த பங்குமூலதனம் (10/- பெறுமதி யான 100,000 பங்குகளைக் கொண்ட) பத்து லட்சம் ரூபாவாக இருக்க வேண்டு மென நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மேலும் வெளியிடப்பட்ட பங்குகளில் நபர் ஒருவர் 10% க்கும் அதிக பங்குகளை கொள்வனவு செய்ய முடியாது என்றும் தெரிவிக்கப்பட் டது. இக்கம்பனியின் பங்குதாரர் (ஏனைய ஏ. உ. கி. கம்பனிகள் தவிர்ந்த) மற்றைய கம்பனிகளில் பங்குகளை வைத்திருப்பதில் இருந்தும் தடைசெய்யப்பட்டுள்ளது.

வர்த்தக கப்பல்துறை அமைச்சு 1981 இல் மாதிரி ஏற்றுமதி உற்பத்திக் கிராமம் ஒன்றை அமைப்பதற்கான செய்திட்டம் ஒன்றை தொடக்குமாறு இலங்கை ஏற்று மதி அபிவிருந்திச்சபையை பணித்தது. கிராம மட்டத்தில் பொருட்களை ஏற்றுமதி நோக்கில் உற்பத்தி செய்வதற்குள்ள உள் ளார்ந்த ஆற்றலை வெளிப்படுத்துவதே இதன் நோக்கமாக இருந்தது. இப்பணிப்பு ரைக்கு இணங்க குருநாகல் மாவட்டத்தில் ஒரு தொகுதிக் கிராமங்கள் (பரணகம, விருந்தபாணகல, எபலாதனிய) 1 ஆவது ஏ. உ. கிராமிய செய்திட்டத்திற்கென இனங்காணப்பட்டன.

## 3.2 சுதந்திர வர்த்தக வலயம் (*Free trade Zone*)

ஏற்றுமதி நோக்குள்ள கைத்தொழில் களை உருவாக்கும் பொருட்டு வெளிநாட்டு முதலீடுகளை அதிகளவில் பெறுவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பே சு. வ. வலய மாகும். இப்பகுதியில் ஏற்றுமதி செய்வ தற்கோ இறக்குமதி செய்வதற்கோ கட் டுப்பாடுகள் ஒன்றுமில்லை. வரிவிதிப்பதி லும் சலுகை வழங்கப்படும். அத்துடன் இவ்வலயத்தில் முதலீடுகளை மேற் கொள்ளும் நிறுவனங்களுக்கு அரசியல் அமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்படும் அதாவது முதலீடுகளைச் செய்யும் நாடுக ளின் முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் இலங்கை அரசியல் அமைப்பில் 157 ஆம் உறுப்புரிமையின் கீழ் உத்தரவாதம் அளிக் கப்படும். முன்னர் சுதந்திரவர்த்தக வல யத்தை பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு (G.C.E.C) என்ற அமைப் பும் இவ்வலயத்திற்கு வெளியேயான அந்நிய முதலீடுகளை நிர்வகிப்பதற்கு "அந்நிய முதலீட்டு ஆலோசனைக்குழு" (F.I.A.C.) என்ற அமைப்பும் கட்டுப்படுத்தி வந்தன ஆனாலும் வெளிநாட்டவர் முதலீடுகளுக்கு அனுமதியளிக்க ஒரு அமைப்பே போதும் எனக்கருதியமையால் இலங்கை முதலீட்டுச் சபை (BOI) என்ற ஒன்று நடைமுறைக்கு வந்தது. (F. T. Z) 1978 இல் அறிமுகப் படுத்தப்பட்டபின் பல முதலீட்டு ஊக்கு விப்பு வலயங்கள் நடைமுறைக்கு வந்தன.

அவையாவன:-

| | |
|---|---|
| கட்டுநாயக்கா | (1978) |
| பியகம | (1986) |
| கொக்கல | (1991) |

என்பனவாகும். ஆனாலும் இப்பொழுது பெருமளவு முதலீடுகள் இடம்பெறும் வல யமாக கொக்வல காணபபடுகிறது இதற்கு காரணம் ஏனைய வலயங்களில் இல்லாத பல சலுகைகள் இதற்குள்ளது என்பதாகும் குறிப்பாக

1. 15 ஆண்டு வரிவிடுத்தலை
2. 15 ஆண்டு வரிச்சலுகை
3. உற்பத்தியின் 20%ஐ உள்நாட்டில் விற்க அனுமதி என்ற 3 சலுகைகளையும் இவ் வலயம் மேலதிகமாக கொண்டிருக் கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B.O.I அமைப்பானது இலங்கையில் அந்நிய முதலீட்டை அதிகரிப்பதற்குப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது குறிப்பாக

1. தூதராலயங்கள் மூலமாக, முதலீடுகளை மேற்கொள்ள வெளிநாட்டு முதலீட்டாளரைத் தூண்டுதல்.

2. காலதாமதம் இன்றி தேவையான அனுமதிப் பத்திரங்களை முதலீட்டாளர்களுக்கு பெற்றுக்கொடுத்தல்.

3. கைத் தொழில்களை ஆரம்பிப்பதற்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல்.

4. தேவைப்படுகின்ற ஊழியர்களை திரட்டிக் கொடுத்தல்.

5. வரிவிடுதலையையும் வரிச்சலுகையையும் பெற்றுக் கொடுத்தல்.

6. விசேட வங்கிச் சேவையை அறிமுகம் செய்திருத்தல். என்பதான பல சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தலினூடாக அதிகமான வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவழைத்துக் கொள்ள BOI உதவுகிறது.

ஏற்றுமதி அபிவிருத்தி நோக்கில் கொண்டு வரப்பட்ட இலங்கையின் உலக வர்த்தக நிலையம் எனும் அமைப்பு இலங்கையின் ஏற்றுமதி மேம்படுத்தலுக்காக மேற்கொள்ளும் பங்கினை ஆராய்வோமானால்,

### 3.3 உலக வர்த்தக நிலையம்

உலக வர்த்தக நிலையம் என்பது சர்வதேச வர்த்தகத்தை முன்னேற்றுவதற்கு உருவாக்கப்பட்ட ஒரு வசதியே ஆகும். இவ்வமைப்பானது ஏற்றுமதித் தகவல்கள் இறக்குமதி மூலங்கள், சந்தை வாய்ப்புகள் ஏற்றுமதிக்கான கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற மேலதிக சேவைகளையும் வழங்குகிறது. இது சேவை நோக்குடைய ஒரு நிறுவனமாகும். சர்வதேச வியாபார நடவடிக்கைகளை தூண்டுவதும். கடல் கடந்த கொடுக்கல் வாங்கல்களை செய்வதற்கு வசதிகளை வழங்குவதும். நாட்டின் சர்வதேச வர்த்தகத்தினை விருத்தி செய்வதற்காக அரசாங்க முகவர்களினதும் தனியார் சேவை நிறுவனங்களினதும் வர்த்தக ஆதார நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுவுமே இதன் நோக்கமாகும் ஒவ்வொரு உலக வர்த்தக நிலையங்களும் தமது நாட்டின் தனித்துவமான சேவையை நிவர்த்தி செய்கின்றமையால் அவற்றுக் கிடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுகிறது. ஒரு சில கல்வி நோக்கம் கொண்டவையாக இருக்கின்றன. ஒரு சில வர்த்தக. தொடர்பு முறைகளில் கவனம் செலுத்துகின்றன, ஒரு சில அரசாங்க உத்தரவாதந்தின் கீழ் இயங்குகின்றன. ஒரு சில முற்றிலுமாகவே தனியார் துறையால் நிர்வகிக்கப்படுகின்றன. ஒவ்வொன்றினதும் பொதுவான தொழிற்பாடு யாதெனில் சர்வதேசரீதியில் கொள்வனவாளர் விற்பனையாளர் ஆகியோருக்கிடையிலும். உற்பத்தியாளர் உபயோகிப்பவர் ஆகியோருக் கிடையிலும் ஒரு திறமையுள்ள வர்த்தக தொடர் பாளராக செயற்ப்படுவது என்பதாகும் இவ்வாறு பொதுவான குறிக்கோள்களை மேற் கொண்டுள்ள மக்கள்ஒரிடத்தில் சந்தித்து தங்கள் வியாபாரத்தை திறமையாகவும் இலாபகரமாகவும் நடத்தும் இடங்களுக்கு உதாரணமாக நியூயோர்க், டோக்கியோ, பரீஸ், லண்டன் சரக்குசெலாவணி, சிக்காக்கோ வர்த்தகசபை என்பவற்றைக் குறிப்பிடலாம் பொதுவாக 6 கண்டங்களிலும் 60 க்கும் மேற்பட்ட நாடுகளில் 200 க்கும் அதிகமான உலகவர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் உலக வர்த்தக நிலையம் ஆனது அதன் தலைமைக் காரியாலயம் இலகுவில் கண்டு கொள்ளக்கூடிய ஒரு இடத்திலும், வாகனங்களை நிறுத்தி வைக்கக் கூடிய வசதி கொண்டதாகவும் முக்கிய வியாபார நடவடிக்கைகள் நடைபெறுகின்ற

இடங்களுக்கும் ஹோட்டல் களுக்கும் அண்மையிலுள்ளதாகவுமுள்ள ஓரிடத்தில் ( புறக்கோட்டையில் ''டிரான்ஸ் பேக்கவுஸ்'' ) வழங்கப் படுகின்ற பலதரப்பட்ட வர்த்தக செயல் முறைத் திட்டங்களூடாக இதன் செயல் பாட்டு குறிக்கோள்களை அமையக்கூடியதாகவுள்ளது. இந்நிலைமையானது திடமான ஒரு உள்ளக கட்டமைப்புக்கு வழிவகுப்பதுடன் பின்வருவனவற்றை வழங்கக்கூடியதாகவும் காணப்படுகிறது.

*. வெளிநாடுகளுக்கும், வெளிநாட்டில் இருந்து வருகின்ற வர்த்தக தூதுக் குழுக்களுக்கும், இலங்கையின் வர்த்தகர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோருக்கும் இடையில் நேரடியான வியாபராத் தொடர்பை ஏற்படுத்துதல்.

*. இலங்கையின் கைத்தொழிலுக்கு வேண்டிய சர்வதேச வாணிபவியல் தன்மை விருத்தி செய்வதற்காக சர்வதேச அரசாங்கம் வர்த்தக முன்னணிப் பிரமுகர்களைக் கொண்ட மாநாடுகளை நடாத்துதல்.

*. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ( EDB ) பட்டப் படிப்பின் முகாமைத்துவ நிறுவனம் ( PIM )' தேசிய வணிக முகாமைத்துவ நிறுவனம், NIBM SALIDA போன்ற அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் கல்வித் திட்டமானது உலகம் பூராவுமுள்ள சந்தைகளில் இலங்கைக் கம்பனிகள் வெற்றியுடன் போட்டியிடுவதற்கு வேண்டிய புலமைத் திறமையை வழங்கும்.

*. ஏற்றுமதிப் பொருட்களைப் பார்வையிட காட்சியறைகளையமைத்து அவற்றிற்கென தொடர்பாடலின் வகைப் பின்னலை ( Communication net work ) ஏற்படுத்தியிருத்தல்.

*. கடல் கடந்த கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதிகளைச் செய்தல் போன்ற ஏற்றுமதி மேம்படுத்தல்களை இலங்கையின் உலகவர்த்தக நிலையம் ஆற்றி வருகிறது.

இவையனைத்தையும் விட

## 4.0 ஏற்றுமதியை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்ட மேலதிக நடவடிக்கைகள்

* ஏற்றுமதியில் அரசிற்கு இருந்த ஏகபோகம் அகற்றப்பட வேண்டுமென்பதில் அரசு அக்கறைகாட்டியது. இவ்வகையில் தனியாரை ஊக்குவிக்கும் முயற்சியில் பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொள்ளவென E. D. B அமைப்பு உருவாக்கப்பட்டது.

* அரசாங்கம் ஏற்றுமதியைத் தூண்டும் வகையில் வரிக்கொள்கைகளில் மாற்றங்களைக் கொண்டுவந்தது. சந்தை நிலைமைக் கேற்ப ஏற்றுமதித் தீர்வைகள் அடிக்கடி மாற்றியமைக்கப்பட்டன. இவ்வாறே தீர்வைகளை மீளளிக்கும் திட்டமும் பின்பற்றப்பட்டது.

* அரசாங்கம் ஏற்றுமதி ஊக்குவிப்புத் தொடர்பாக ஒத்துழைப்பை அதிகரிப்பதிலும் அக்கறை காட்டியது. பல்வேறு பொது ஒப்பந்தங்களைச் செய்வதில் கவனம் செலுத்தியது. உங்டாட் ( UNTAD) அமைப்பில் இலங்கை பங்கு கொள்வதன்மூலம் ஏற்றுமதிகளுக்கான பதுகாப்பைப் பெற்றது.

* ஏற்றுமதி அபிவிருத்திக்கு உதவும் வகையில் நாட்டின் பொருளாதார கட்டமைப்புகளான போக்குவரத்து தொடர்பால், வங்கி, துறைமுகம், போன்ற பல்வேறு துறைகளிலும் அரசு வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

* மூலதன பற்றாக்குறையைக் கொண்டிருந்தோருக்கு நீண்டகால, குறுங்கால கடன்களைப் பெற்றுக்கொடுக்க வர்த்தக வங்கிகளையும் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி என்பவற்றையும் உருவாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஏற்றுமதி அபிவிருத்திச்சபை திறமை யாக ஏற்றுமதி செய்வோருக்கு வருடா வருடம் பரிசளிக்கும் திட்டமான ஜனாதிபதி விருது வழங்கும் திட்டத்தை 1982 இல் அறிமுகம் செய்தது.

* ஏற்றுமதியாளர்கள் வெளிநாட்டுச் சந்தை ஆராய்ச்சி வெளிநாட்டு விளம்பரம் போன்ற வற்றை மேற்கொள்ளும் போது ஏற்படும் செலவின் 75% ஐ அரசு பொறுப் பேற்கிறது

* புதியபுதிய பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வகைசெய்யும் வணிக விழாக்களிலும், பொருட்காட்சிகளிலும் ஏற்றுமதியாளரை பங்கு கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

* கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதியினைத் தூண்டும் நோக்குடன் ஏற்றுமதி நோக்கிய கைத்தொழிலாக்கம் எனும் கொள்கையைப் பின்பற்றுவதுடன் ஏற்றுமதி தசாப்ததிட்டமாக 1991 — 2001 வரையுள்ள காலப்பகுதியை அறிமுகப்படுத்தியமை என்பன ஏற்றுமதியைத் தூண்டுவதாக அமைகிறது.

## 5.0 முடிவுரை

உலகின் சர்வதேச வர்த்தகத்தின் போக்குவரத்துப்பாதையின் கேந்திர முக்கியத்துவம் பெற்றதாக காணப்படும் இலங்கையில் ஏற்றுமதி அபிவிருத்திக்காக பல நடவடிக்கைகள் எடுத்தபோதிலும் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகள் கோட்டா முறைகளை விதிப்பதனாலும், உள்ளூர் குழப்பங்களினாலும், ஏற்றுமதியாளர் எதிர்நோக்கும் பலவித பிரச்சனைகளிலும் அரசு எதிர்நோக்கும் அளவிற்கு ஏற்றுமதி வர்த்தகம் இலங்கையில் வளர்ச்சியடையவில்லை. எனக்கூறினால் அது மிகையாகாது ஏனெனில் இலங்கையின் சென்மதி நிலுவை மீதியானது அண்மைக்காலமாக பாதகமாக காட்டி வருகிறது என்பதனாலாகும் எனினும் இலங்கையின் கைத் தொழில் கொள்கைகள் சர்வதேச வர்த்தகத்திற்கு முன்னுரிமை கொடுத்து அதற்கேற்றபடி கைத் தொழில் கொள்கைகளை வகுப்பதன் மூலம் கைத் தொழிலில் முன்னேற இடமுண்டு. அதாவது அதிகரித்து வருகின்ற சனத்தொகைக் கேற்ப நாட்டின் ஊழியப் படையும் அதிகரித்து வருவதால் அதற்கேற்றபடி வேலைவாய்ப்புகளை வழங்கும் வகையிலும். அதிகரித்து வரும் வருமான சமமின்மையை கட்டுப்படுத்தும் வகையிலும் கைத் தொழில் கொள்கைகளை வகுப்பதால் சர்வதேச வர்த்தகத்தில் முன்னேற இடமுண்டு எனலாம். □

---

### உசாத்துணை நூல்கள்

மத்தியவங்கி ஆண்டறிக்கை 1992

பொருளியல் நோக்கு 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. றொபேட்
விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# பிரித்தானியாவின் இரும்பு உருக்குக் கைத்தொழிலின் இட அமைவு, உற்பத்திகளில் ஏற்பட்ட மாற்றங்களும், அண்மைய போக்கும்

## அறிமுகம்:

கைத்தொழில் இட அமைவுகளில் பல்வேறு வகையான காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவற்றுள் மூலப் பொருள், வலு, தொழிலாளர், சந்தை போன்றன முக்கியத்துவம் பெறுவதுடன் இவை ஒரு கைத்தொழில் உற்பத்தியில் சமமான எடையினையும் கொண்டுள்ளன. இவ்வாறிருந்த போதிலும் இக்காரணிகளின் முக்கியத்துவத்தில் ஒரு காரணியின் முக்கியத்துவம் கூடுதலாக ஏற்படுகின்ற பொழுது குறித்த கைத்தொழில் குறித்த காரணியைச் சார்ந்து அமைவதாக இருக்கும். உதாரணமாக மூலப்பொருளின் முக்கியத்துவம் கூடுதலாக இருக்கும்பட்சத்தில் அது மூலப் பொருளைச் சார்ந்து அமைகின்ற கைத்தொழிலாக இருக்கும். ஆனாலும் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியானது கைத்தொழில்களின் இட அமைவுகளிலும் அமைப்பிலும், உற்பத்தியிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக போக்குவரத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் கைத்தொழில் இட அமைவுகளில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் தொழில்நுட்ப மாற்றத்தினால் உற்பத்தியிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வகையில், இக்கட்டுரையில் பிரித்தானியாவினது இரும்புருக்குக் கைத்தொழிலின் பிரதான வளர்ச்சிக் காலகட்டங்களும், இக் காலகட்டங்களில் இதன் இட அமைவுகளில் ஏற்பட்ட மாற்றங்களும், இக் கைத்தொழில் மீதான அரசின் தலையீடுகளும், சீராக்கங்களும், அமைப்பு, உற்பத்திகளில் ஏற்பட்ட மாற்றங்களும், அண்மைய காலப்போக்கும் ஆராயப்படுகின்றது.

## உருக்குக் கைத்தொழிலின் முக்கியத்துவம்

ஒரு குறித்த நாட்டினது பொருளாதாரச் செழிப்பினையும், அபிவிருத்தி நிலையினையும் காட்டுகின்ற ஒரு முக்கிய குறிகாட்டியாக இரும்புருக்குக் கைத்தொழில் காணப்படுகின்றது. பாரம்பரியமாகவே இக் கைத்தொழில் அதிகளவு வேலைவாய்ப்பினை வழங்குகின்ற கைத்தொழிலாகவும், அதிகளவு மூலதனத்தினை வேண்டி நிற்பதாகவும் உள்ளது. உருக்கானது அநேகமாக கைத்தொழிலின் ஒவ்வொரு பகுதியிலும் பயன்படுத்தப்படும் மூலப்பொருளாகவுள்ளது. குறிப்பாக எல்லா வகையான போக்குவரத்துச் சாதன உற்பத்திகளிலும், கட்டடநிர்மாணம், பொறியியல் போன்ற பார, மென்ரகக் கைத்தொழில்களிலும் பயன்படுத்தப்படுகிறது. எனவே நவீன கைத்தொழில்களின் சிக்கலான வடிவத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் பெருமளவு தொடர்பினை இது கொண்டுள்ளது எனலாம்.

## ஐக்கிய இராச்சியத்தின் உருக்குக் கைத்தொழிலின் பிரதான வளர்ச்சி நிலைகள்

ஐக்கிய இராச்சியத்தின் உருக்கிக் கைத்தொழிலின் வளர்ச்சி நிலைகளைப் பிரதானமாக பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

1. 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதி
2. 1870 களுக்கும் 1930 களுக்கும் இடைப்பட்ட காலம்
3. 1945 இற்குப் பிற்பட்ட காலம்.

மேற்படி காலத்தில் ஏற்பட்ட உருக்குக் கைத்தொழில் வளர்ச்சி நிலைகளை நோக்குதல் இங்கு பொருத்தமுடையதாகும்.

## 1. 19. ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலம்

கைத்தொழிற் புரட்சிக் காலத்திட்டத்தில் நிலக்கரியானது கைத்தொழில் இட அமைவைத் தீர்மானிப்பதில் முக்கிய காரணியாக இருந்தது. கோக் நிலக்கரி, இரும்புத்தாது, சுண்ணக்கல் போன்றவற்றைச் சூழவரக் கொண்டுள்ள நிலக்கரி வயல்கள் அபிவிருத்தியடைந்தன. இம் மூலப்பொருட்கள் பாரமானவையாக இருந்ததுடன் தூர இடங்களுக்குக் கொண்டு செல்வது மிக்க செலவுடையதாகக் காணப்படுகின்றது. அத்துடன் ஆரம்பகால இரும்புருக்குத் தொழில் நுட்பமானது வினைத்திறன் குன்றியதாகக் காணப்பட்டது. ஏனெனில் இரும்புத்தாதிலும் பார்க்க நிலக்கரி கூடுதலாகத் தேவைப்பட்டது. அதே சமயத்தில் இக்காலத்தில் காணப்பட்ட போக்குவரத்து வசதிகளும் இந்நிலையினைச் சமாளிக்கக்கூடிய நிலையில் காணப்படவில்லை. இதன் காரணமாக தென்வேல்ஸ், டறம், மேற்கு மிதுலாந்தின் கரும் பிரதேசம் ஆகியன இரும்புருக்கு உற்பத்தியில் நிகரற்ற கைத்தொழில் நிலையங்களாக அமைந்திருந்தன.

## 2. 1970 களுக்கும் 1930 களுக்கும் இடைப்பட்ட காலம்:

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிற்பாடுள்ள காலப்பகுதியில் இரும்புருக்குத் தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றம் குறைந்தளவு நிலக்கரியினைப் பயன்படுத்தி கூடியளவு பயனை அடையக்கூடியதாக இருந்தது. இந்நிலை குறைந்த எரிபொருட் செலவினையும் ஏற்படுத்தியது. இதன் காரணமாக உருக்கு உற்பத்தி ஆலைகள் நிலக்கரி வயல்களுடன் இணைந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இரண்டு புதிய உருக்கு மாற்றற் கலங்களின் செயல் முறைகள் மேற்கூறிய நிலைக்கு சாதகமாக அமைந்தது. பெஷமருடைய இரும்பினைத் தாதாக மாற்றுகின்ற மாற்றி (Bessemer's Converter) 1850 களில் தோமஸ் என்பவரினால் மாற்றியமைக்கப்பட்டது. இதனால் உயரளவான பொஸ்பரசினைக் கொண்ட இரும்புத்தாதிகினைக் கூடப் பயன்படுத்த முடிந்தது. இந்நிலை நோதாமடன், லிங்கன் ஷயர், கிளிவ்லாந்தின் யுராசிக்தாதின் ஏராளமான பயன்பாட்டினை அதிகரிக்க அனுமதித்தது. 1873 களில் திறந்த உலைகள் பயன்படுத்தப்பட்டமை உருக்கு உற்பத்தியின் அளவினை அதிகரித்தன. இந்நிலை 1930 கள் வரை நீடித்தது. அக்காலம் தொட்டு இம்முறை ஒரு முக்கியமானதாக இருந்ததுடன் கழிவிரும்பினை மீள உருக்கவும் பயனுடையதாக இருந்தது. இதனால் இரும்புத்தாது வயல்கள் இக்காலப் பகுதியில் புதிய உருக்கு.மையங்களாக வரத் தொடங்கின. இதற்கு உதாரணமாக 1935 இல் உருவாக்கப்பட்ட கோர்பியினைக் குறிப்பிடலாம். 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கோர்பி, ஸ்ஹர்ன்தேர்ப் ஆகிய நகரங்கள் பிரதான இரும்பு, உருக்கு பரும்படியாக்க வலயங்களாக வரத்தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதியில் மூலப்பொருட்களின் வழங்கலில் ஏற்பட்ட மாற்றங்கள் கைத்தொழில் இட அமைவுகளின் சிக்கல் தன்மையினை மேலும் சிக்கலாக்கின. சுவீடன், கனடா, ஸ்பெயின், வட ஆபிரிக்கா போன்ற நாடுகளிடம் இருந்து தான் இரும்புத்தாது இறக்குமதிகள் துரித மாக அதிகரித்தன. இரும்புத்தாதினை ஏற்றி வரக்கூடிய பாரிய கப்பல்கள் இருந்தமையும் அவற்றின் கொள்ளவு அதிகமாக இருந்த மையும் காரணமாக மேற்கூறிய நாடுகளிடம் இருந்துதான் இறக்குமதி அதிகரித்துக்காணப் பட்டது. இவ்விறக்குமதிகள் நோதாம்ட னில் காணப்பட்ட இரும்புத்தாதினை விட 2 அல்லது 3 மடங்கு அதிகமாகும். இதன் காரணமாக இரும்புருக்கு வேலைகள் துறை முகங்களிலும், கழிமுகங்களிலும் அதிகளவில் அமைவதற்கான ஒரு சாதக சூழ்நிலைகள் இக்காலப்பகுதியில் ஏற்பட்டன. இத்தகைய ஒரு இயற்கையான ஒரு வளர்ச்சியானது காடிவ் இற்கும் சுவான் கடலிற்கும் இடை யிலான தென்வேல்ஸ் கரைகளில் ஏற்படத் தொடங்கியது. ரீஸ்மவுத், டீ கழிமுகம் மான்ஷெஸ்ரர் கப்பற் கால்வாய்ப் பகுதி களையும் குறிப்பிட முடியும். தற்பொழு துள்ள நிலக்கரி வயல்களுக்கு அருகாமையி லுள்ள கரையோர உருக்கு மையங்கள் தேவையான பொருட்களை குறைந்த செல வில் ஒன்று சேர்க்கத்தக்க வகையில் சிறந்த இட அமைவுகளைக் கொண்டுள்ளன. இதற்கு உதாரணமாக ரீஸ்மவுத்தினைக் குறிப்பிடலாம். இவ்வுருக்கு மையத்திற்கு கிளீவ்லாந்து மலையிலிருந்து இரும்புத்தா தினையும், 40 கி. மீ தென்மேற்கேயுள்ள டறம் பகுதியிலிருந்து கோக் நிலக்கரியும், வியர்டேலில் இருந்து சுண்ணக்கல்லும் பெறப்படுகின்றன. சமதரையான கழிமுக நிலப்பரப்பு பெரியளவிலான கைத்தொழிற் சாலையை அமைப்பதற்கு சாதகமாக இருந் தது. இவற்றிற்கு மேலாக மிகமுக்கிய கார ணியாக ஸ்பெயின், சுவீடனில் இருந்து தர மான இரும்புத்தாதினை இறக்குமதி செய் வதற்கு இக்கழிமுகப் பகுதி வசதியாகவும் காணப்பட்டது. முன்பு முக்கிய தளமாகக் காணப்பட்ட ஆலைகள் இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டன. 1930 களில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி காரணமாக இந்நிலை மேலும் சிக்கலடைந் தது. ஏற்கனவே நிலக்கரி வலயங்களில் அமைந்திருந்த உருக்கு ஆலைகளில் உற்பத்தி கள் நடைபெறவில்லை. பொருளாதார ரீதியில் நீண்ட காலத்தில் அவற்றின் இயங் கும் திறன் மிகவும் தாழ்வாகவே காணப் பட்டது. சிறிய நெருக்கமான வேலைத் தளங்கள் இருந்தன. அப்பகுதியில் இரும் புத்தாதும் காணப்படவில்லை. நிலக்கரியா னது பொருளாதார ரீதியாக சிக்கனம் அற்றதாகக் காணப்பட்டதுடன் தேவை யான இறக்குமதிகளும் உயர் போக்குவரத்து செலவுடையதாக இருந்தது. எப்வேல் உருக்கு வேலை இதற்கு உதாரணமாகும். இவ்வாலை 1930 களில் மூடப்பட்டு 1938 களில் மீண்டும் திறக்கப்பட்டது. தென் வேல்சில் உள்ள சுரங்கங்களில் வேலையின் மையானது ஒரு நீண்ட காலப் பிரச்சனை யாக இருந்தது. எனவே வேலையின்மை நிலையை நீக்குவதற்காகவே மீண்டும் அவ் வாலை இயக்கப்பட்டது. இவ்வாறான அமைப்பு ரீதியான பிரச்சினைகளினால் புதிய வளர்ச்சி மையங்களை அபிவிருத்தி செய்வதும் சமூக நோக்கில் கைத்தொழில் கள் செயலிழந்து போகும் பகுதிகளில் வேலைவாய்ப்புக்களை பேணுவதும் தற் காலத்தில் புதிய உருக்கு கைத்தொழில் களை பாதிக்கத் தொடங்கியது.

### 3. 1945 ற்கு பிற்பட்ட காலம்!

1945 களில் ஐக்கிய இராச்சியமானது அதன் உருக்குக் கைத்தொழிலின் வளர்ச்சி யில் இரண்டாவது கட்டத்தைப் பூர்த்தி செய்திருந்தது. ஏழு பாரம்பரியப் பிரதேசங் களில் ஒரு வலைப்பின்னல் அமைப்பில் பெரி யளவான கைத்தொழிற்சாலைகள் அமைந் திருந்தன அவை ஒழுங்காக ஒருங்கிணைக் கப்படாத அமைப்பினையும் உற்பத்தியில் நிகர் ஒத்ததான தன்மையினையும் கொண் டிருந்தன. (தென்வேல்ஸ், வடகிழக்கு லிங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன் ஷயர், ஷெவ்பீல்ட், ஸ்கொட்லாந்து, வடமேற்கு, மேற்குஇங்கிலாந்து). அநேக மான தனியார் கம்பனிகள் இதனைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரத்தைக் கொண்டிருந்தன. சிறிய கைத்தொழிற்சாலைகளும் காணப்பட்டன. மூலதனப் பற்றாற்குறை காணப்பட்டதுடன் பழைய அருகிச் செல்கின்ற உபகரணங்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன. 1930 களில் இம்மாற்றச் செயல் முறைகள் துரிதப்படுத்தப்பட்டதுடன் தொடர்ந்தும் இருந்தன. அவை,

1. கைத்தொழில்களின் இட அமைவுகள் கரையை நோக்கி அசைந்தமை.

2. தொழில்நுட்ப மாற்றம்.

3. பாரிய கைத்தொழிற்சாலைகள் ஒன்றாக இணைந்தமையினால் ஏற்பட்ட சாதகமான வாய்ப்புக்களும் அதிகரித்தன. உருக்கு வேலைகள் காணப்பட்ட எஞ்சிய பகுதிகள் தமது நிலையினை மாற்றாது இருக்க அரசாங்கத்தின் தலையீடுகள் அதிகரித்தன. இதற்கு உதாரணமாக ரல்பொட் துறைமுக ஆலையினைத் குறிப்பிடலாம். இவை சமநிலங்களில் அமைக்கப்பட்ட பாரிய ஒருங்கிணைக்கப்பட்ட உருக்கு உற்பத்தி நிலையங்களாக காணப்பட்டன. அத்துடன் காரையோரமாகக் காணப்பட்டதனால். இறக்குமதிச் செலவுகள் குறைவாக இருந்தது. இலாபமின்றி இயங்கி மூடப்பட வேண்டிய நிலையில் காணப்பட்ட கைத்தொழில்களில் சமூகக்காரணிகளுக்காக அரசாங்கத்தின் தயீடுகள் நிறுத்தப்பட்டமையினால் பல பழைய உருக்கு உற்பத்திப்பகுதிகளில் ஒரு முரண்பாட்டை தோற்றுவித்தமை பொருளாதார ரீதியாக இவ் உள்நாட்டு உருக்குக் கைத்தொழில்கள் நலிவுற்றமைக்குக் காரணமாகும். எப்வேல், கொன்செற், வேக்கிங்ரன் ஆகிய மூன்று இடங்களும் பொருளாதார ரீதியான வாய்ப்புக்களை எதிர் காலத்தில் அடையும் என்ற நிலையில் இல்லாவிடினும் குறைந்தளவான உற்பத்திச் செலவினாலும் உற்பத்தி குறைவடைந்து செல்லும் பகுதிகளுக்கான அரசின் சமூக ஆதரவுக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும் பகுதியாக உள்ளதனாலும் இவை தொடர்ந்தும் அங்கு நிலை கொண்டுள்ளன. இதற்கு மாறாகச் சில பிரதேசங்கள் தமது பழைய வாய்ப்புக்களை எடுத்து புதிய நடைமுறைக்கு ஏற்ற வகையில் மாற்றி அமைத்துள்ளன. கரும் பிரதேசமானது ( Black Country) அதன் முன்னைய உருக்கு உற்பத்தியின் இயல் அளவில் ஒரு பகுதியை இன்னும் கொண்டுள்ளது. இதற்கான காரணம் மேற்கு மிதுலாந்தின் பொறியியல் மோட்டார் வாகனச் சந்தைக்கு அண்மையில் உள்ளமையினாலும் கழிவு இரும்பானது உள்நாட்டில் இருந்து கிடைக்கப் பெறுகின்றமையுமாகும்.

## புதிய செயல் முறைகள்

இரும்புருக்குத் தொழிலிலான தொழில்நுட்ப முன்னேற்றமானது இரண்டு புதிய காரணிகளுடன் தொடர்ந்து நடைபெற்றது. அவை மூல ஒட்சிசன் செயல் முறையும் மின்சார வில் உலையின் பயன்பாடும் ஆகும். பெருமளவு ஒருங்கிணைக்கப்பட்ட தொழிற்சாலைகளில் இரும்புருவாக்கம், உருக்கு உருவாக்கம், முடிவுப்பொருட்களின் உருவாக்கம், என்பவற்றின் வெவ்வேறான செயல் முறைகள் அதிகரித்திருந்தன. இதனால் உற்பத்தியின் உள்ளகச் செலவுகள் குறைவாகக் காணப்பட்டதுடன் பொருளாதார ரீதியில் இலாபமுடையனவாகவும் கூடிய திறனைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன. திறந்த உலைகளுக்குப் பதிலாக மூல ஒட்சிசன் மாற்றி கொண்டு வரப்பட்டது. இது பிரதானமாக மூன்று தன்மைகளைக் கொண்டிருந்தது.

1. பெஷ்மரின் மாற்றியைப் போன்ற துரிதத்தன்மை.
2) திறந்த உலைகளைப் போன்று கூடுதலாக எரிக்கும் இயல்பு.
3. பெருமளவு உற்பத்தியினை மேற்கொள்வதற்கான வசதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான இரும்பினைத்தாதாக மாற்ற உதவும் மாற்றிகள் மூலம் ஒரு வருடத்திற்கு 4 மில்லியன் தொன்கள் உருக்கினை உற்பத்தி செய்ய முடியும். ஏழு உருக்கு உற்பத்தித் தளங்களிலும் 14 மாற்றிகள் மூலம் முழு ஐக்கிய இராச்சியத்திலும் ஏறத்தாழ 26 மில்லியன் தொன் உருக்கினைப் பெறமுடிந்தது.

தொடர்ந்து வருகின்ற காலங்களில் இத்தகைய முறை மூலம் குறைவான ஆலைகள் இருப்பினும் பெருமளவு அலகு உற்பத்தியினை மேற் கொள்ள முடியும். 1969 களில் திறந்த உலைகள் மூலம் 54% மான உற்பத்திகளும் மூல ஒட்சிசன் மாற்றி மூலம் 80% வீதமான உருக்கு உற்பத்தி செய்யப்பட்டது. மிகுதியான உற்பத்திகள் மின்சார வில் உலைகள் மூலமே உற்பத்தி செய்யப்பட்டன. மின்சார வில் உலைகள் மிகவுயர்ந்த தரத்தினை உடையதும் கலப்புலோக உருக்கினை உற்பத்தி செய்வதற்குமான ஒரு விஷேட செயல் முறையாகும்.

### தேசியமயமாக்கல்

உற்பத்தி நடவடிக்கையில் இறுதி மூலமாக அரசாங்கத்தின் தலையீடுகள் காணப்படுகின்றன. ஐக்கிய இராச்சியத்தில் 13 பிரதான உருக்கு உற்பத்திக் கம்பனிகள் உள்ளன. வேல்ஸ் இல் உள்ளது போன்ற உருக்கு உற்பத்திக் கம்பனி மிகவும் பாரியதாகும். ஆனால் நிகர் ஒத்த உற்பத்திகள் அதிகளவில் உள்ளன. இத்தகைய உள்ளகப் போட்டி மூலப் பொருட்களின் பயன்பாட்டினை விரயமாக்குவதாக உள்ளது. இதே வேளை சர்வதேச போட்டிகளைச் சமாளிக்கக் கூடியதாகக் காணப்படவில்லை. 1967 களில் இருந்து 90 வீதமான உருக்குக் கைத்தொழில்கள் பிரித்தானியா உருக்கு கூட்டுத்தாபனத்தினால் தேசியமயமாக்கப் பட்டுள்ளன. ஆனாலும் சில தனியார் துறைக்கம்பனிகள் கலப்புலோக உற்பத்தியிலும், விஷேட வகையான உருக்கு உற்பத்தியிலும் கவனத்தைக் கொண்டுள்ளன. எனவே இக்கைத்தொழில்கள் ஏற்பட்ட பிரதான மாற்றங்களைப் பின்வருமாறு நோக்க முடியும்.

1. உற்பத்தி அடிப்படையில் உருக்கு கைத்தொழிற்சாலைகளை மீளமைத்தல் உயர்ந்தளவான வினைத்திறனுடன் குறித்த வகையான உற்பத்தியில் சிறப்புத் தன்மையை உருவாக்குதல். உருக்கின் பிரதான வகைகளாக; பொதுவான பாரமான உருக்கு குழாய்கள், தகட்டுருக்கு, துண்டு, கம்பி உருக்கு, விஷேட வகையான கலப்புலோக உருக்கு என்பன உள்ளன. வேல்ஸ் உருக்கு ஆலைகள் பராம்பரியத் தகட்டு உருக்கினையே உற்பத்தி செய்து வருகின்றன. கோர்பி குழாய் உருக்கின் பிரதான தளமாக உள்ளது. தென்ரீஸ் பகுதி பொதுவான வகையான உருக்கினை உற்பத்தி செய்கின்றது ஷெபீல்ட் கலப்புலோக விஷேட வகையான உருக்கினை உற்பத்தி செய்கின்றது.

2. ஐக்கிய இராச்சியத்தின் புதிய முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின்படி 1980-81 காலப்பகுதியில் பிரித்தானிய உருக்கு கூட்டுத்தாபனத்திற்கு 33 மில்லியன் தொன் வரையிலான உற்பத்தி இயலளவு தேவைப்பட்டது என மதிப்பிடப்பட்டுள்ளது.

3. பெரியளவிலான கடற் போக்குவரத்தின் மூலம் பொருளாதாரச் சிக்கனத்தைப் பெறுவதற்கு இரும்புத்தாதினை ஏற்றி இறக்கும் புதிய பாரிய கப்பல்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. ரல்பொட் துறைமுகம் 150 000 தொன் கொள்ளளவினையும் இம்மிங்ஹாம் 100 000 தொன்கள் றெட்கார் 200 000 தொன்கள், ஹன்ரேஸ்ரன் 350 000 தொன்கள் கொள்ளளவையும் கொண்ட துறைமுகங்களாக இந் நோக்கத்திற்காக விருத்தி செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இரும்பு உருக்கிலான நவீனமயமாக்கற். சீராக்கற் கொள்கைகள் ஐந்து பிரதான பாரம்பரியமான உருக்கு உற்பத்திப் பகுதிகளில் விஸ்தரிப்பைஏற்படுத்தியது. ஸ்கொட்லாந்திலுள்ள ராவென்ஸ்கிரெயக் 3.2 மில்லியன் தொன்கள் இயலளவிற்கு அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கோலசைட் பகுதியில் மின்சார உலை ஆலையொன்று நிறுவப்பட்டது. கிளைட்ஸ் டேல் இலுள்ள குழாய் உருக்கு உற்பத்திகளின் நவீனமயமாக்கத்தினால் அதன் இயலளவு 4.5 மி. தொன்களாக அதிகரித்தது. வேல்ஸ் இலுள்ள ரல்பொட் இன் கொள்ளளவு 6 மி. தொன்களாக அதிகரித்தது. இங்கிலாந்தில் 3 உருக்கு உற்பத்திப் பகுதிகள் காணப்பட்டன. வடகிழக்கு லக்கென்பி விரிவாக்கப்பட்டதுடன், ரீஸின் தென்கரையிலுள்ள ரெட் கார் பகுதியும் விரிவாக்கப்பட்டது. இவற்றின் இணைந்த இயலளவு பன்னிரண்டு மில்லியன் தொன்களுக்கு மேற்பட்டதாகும். கம்பேர்சைட்டிற்கு அண்மையில் ஸ்கார்ன் தோப்பில் ஏற்படுத்தப்பட்ட துறைமுக அபிவிருத்தியினால் 5 மில்லியன் தொன்களாக அதன் உற்பத்தியை அதிகரித்தது. ஷென்பீல்ட், றொதெகாம் பகுதியில் துருப்பிடிக்காத உருக்கு உற்பத்திகள் விரிவுபடுத்தப்பட்டன. இது ஒரு விஷேட சந்தையாகவும், ஆனால் உற்பத்தியானது ஏறத்தாழ 2 மில்லியன் தொன்னாகும். எதிர்காலத்தில் ஒரு சில பெரிய ஒருங்கிணைக்கப்பட்ட கரையோர உருக்கு கைத்தொழில்களினால் 6 மில்லியன் தொன் உற்பத்தி இடம்பெறக் கூடியதாக இருக்கும் எனப்படுகிறது. மின்சாரவில் உலைகளப் பயன்படுத்தி கலப்பு உலோக உருக்கினை உற்பத்தி செய்கின்ற சிறியளவிலான ஆலைகளும் தோன்ற இடமுண்டு.

5. இவ்வாறாக உருக்கு ஆலைகளின் நவீனமயமாக்கத்தோடு தொழிலாளர் தொகையினை குறைக்க வேண்டிய நிலையும் ஏற்பட வேண்டியிருந்தது. 1981 களில் 180 000 தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். இந்நிலையினை நோக்கின் 1967 களில் 257000 ஆகவும் 1973 களில் 2,30,000 ஆகவும் 1975 களில் 208 000 ஆகவும் 1981 இல் 180 000 ஆகவும் தொழிலளார் தொகை குறைவடைந்து வந்துள்ளது. 1981 களுக்கு பிற்பட்ட காலங்களில் மேற்கொண்ட கணிப்பின் படி நிலையான தாழ்வான உற்பத்திச் செலவுகளும் வினைத்திறன் உடையதான கைத்தொழில்களும் இக் கைத்தொழிலுக்கான தொழிலாளர் தேவையினை மேலும் குறைவடையச்செய்யும் என்பதனையே காட்டுகின்றது.

6. உருக்குத் தொழிற்சாலைகளின் இடப்பெயர்வும், நவீனமயமாக்கலும், மீள் அமைவும் சில பகுதிகளைப் பாதித்தது எனலாம். இந்நிலை 1930 களில் ஏற்பட்டது போன்ற பிரச்சனைகளை மேலும் நீடிக்க வைத்தது. ஷொட்டன் ஒன்-டி, ஈஸ்ற், மூர்ஸ் (காடிவ்) கொன்ஸ்செற், எப்வேல், ஷாற்றில்பூல் ஆகியன மிகவும் பழைமை வாய்ந்தனவாகவும் இத்தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டிய நிலையிலும் காணப்பட்டன. ஷொட்டன் தொழிற்சாலை இதற்கு நல்லதொரு உதாரணமாகும். இத் தொழிற்சாலை அமைவு பெற்றிருந்த முழுப்பிரதேசமும் முழுமையாக இத் தொழிற்சாலையிலேயே தங்கியிருந்தது. வடகிழக்குப் பிளின்ற் ஷயரின் 80% மான மக்களும் இத் தொழிற்சாலையிலேயே வேலைவாய்ப்புக்காக தங்கியிருந்தனர். கோர்பி தொழிற்சாலை தனது வேலைப்படையில் 49% மாணவர்களை உருக்கு தொழில்அமர்த்தியிருந்தது. இவையாவும் மூடப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டன. மேற்கு மிதுலாந்தும் வடமேற்குப் பகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியில் உருக்குக்கைத்தொழிலில் இருந்து படிப்படியாக வெளியேற வேண்டிய நிலையில் காணப்பட்டன.

7. பிரித்தானிய உருக்கு கூட்டுத்தாபனத்திற்கு புதிய தொழில் நுட்பத்திற்காகவும் உயரளவான உற்பத்தியினை பெறுவதற்கும் நவீன பெரியளவான ஆலைகளை நிறுவ வேண்டிய தேவை காணப்பட்டது. இவ்வாறான விஸ்தரிப்பினால் சாதகமற்ற இடங்களில் அமைந்த பழைய உருக்கு கைத்தொழில்கள் தமதுஉற்பத்தியில் இருந்து விலக வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தகைய மாற்றங்கள் வர்த்தக ரீதியாகத் தேவைப்பட்டபொழுதிலும் இம் மாற்றங்கள் ஏற்படுத்துகின்ற தொழிலாளர் பிரச்சனையையும் சமாளிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

## அண்மைக்காலப் போக்குகள்

இரும்புருக்கு கைத்தொழிலில் அநேகமான ஆரம்ப கால அபிவிருத்தி நடவடிக்கைகள் பிரித்தானியாவில் தோன்றியிருந்த போதிலும் உலக உருக்கு உற்பத்தியில் தற்பொழுது பிரித்தானியா ஒன்பதாவது இடத்தினை வகிக்கின்றது. 1967 களில் பொதுக் கூட்டுத் தாபனமாக உருவாக்கப்பட்ட பிரித்தானிய உருக்கு கம்பனி அண்மைக்கால கணிப்பீட்டின்படி அந்நாட்டின் பதனிடா உருக்கு உற்பத்தியில் 82-85 % மான பகுதியை வழங்கியது எனப்படுகிறது. அத்துடன் மேற்குலகில் பிரித்தானிய உருக்கு கம்பனி நாலாவது பெரிய கம்பனியாகவும் உள்ளது.

1960, 70 களில் இக்கம்பனி தனது உற்பத்தியினை நவீனமயப் படுத்துவதற்காக அதிகளவு முதலீடுகளை மேற்கொண்டிருந்தது. மூல ஒட்சிசன் செய்முறை பெருந்தொகையான உருக்கு உற்பத்திக்கு பயன்படுகின்றது. மிகவும் விஷேடமான செயல்முறைகளுக்காக மின்சார வில்லுலை செயன்முறை பயன்படுத்தப் படுகின்றது. ஆனால் 1980 களில் திறந்த உலைகளின் பயன்பாடு அற்றுப் போயிற்று. உலகாளாவிய ரீதியில் உருக்கினை வழங்க வேண்டியிருந்தமையால் இக் கூட்டுத்தாபனம் தனது பழைய உருக்கு ஆலைகளை மூடவும் ஏனைய உற்பத்திகளின் இயலளவினை குறைக்கவும் வேண்டிய நிலையில் இருந்தது பிரித்தானிய உருக்கு கூட்டுத்தாபனத்திற்கும் தனியார் துறைக்கும் இடையிலான பொருட்களது உடைமைகளது பரிமாற்றங்களுடன் இக் கைத்தொழிலிலான சீராக்கங்கள் தொடர்பு பட்டு காணப்பட்டமையினால் இவ்விரு பகுதியினரிடமும் காணப்பட்ட லாபகரமற்ற ஆலைகள் மூடப்பட்டன. இதன் நிமித்தமாக உற்பத்தியானது 1981-85 ற்கும் இடையில் இருமடங்காக அதிகரித்தது. இதனால் உலகில் சிறந்த கைத்தொழில் கூட்டுத்தாபனமாக விளங்குகின்றது.

1988 களில் பிரித்தானிய உருக்கு உற்பத்தியாளர்கள் 16.7 மில்லியன் தொன்கள் உருக்கினை உற்பத்தி செய்தனர். இதில் 65% உள்நாட்டு சந்தைக்கு வழங்கப்பட்டது. மிகுதி ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்நிலை 1985 ல் 12.9 தொன்னாகவும் இதில் 69% உள்நாட்டு கைத்தொழில்களுக்காகவும் ஏனையவை ஏற்றுமதியும் செய்யப்பட்டன. 1988 களில் உற்பத்தி நிலை பிரித்தானியாவில் பதனிடப்படாத உருக்கு உற்பத்தியின் 78% மாகும் பிரித்தானியாவின் உருக்கு வெளியீடுகளாக தட்டையான உற்பத்திகள், தகடு பாரமான பொருட்கள் குழாய்கள் துருப்பிடிக்காத பொருட்கள் என்பன உள்ளன. ஏனைய உருக்கு நிறுவனங்களில் பொறியியல் பரும்படியாக்கம் ஏனைய விஷேட உருக்கு வயர், வயர்கம்பி கூட்டுமான கைத்தொழிலுக்கு ஆதரமான பொருட்கள் ஏனைய விஷேடித்த உற்பத்திகளும் உள்ளன. பிரித்தானியாவின் பிரதான உருக்கு உற்பத்திப் பிரதேசங்களாக வேல்ஸ். ஸ்கொட்லாந்து, வட இங்கிலாந்து என்பன காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. றொபேட்

ஐரோப்பிய இரும்புருக்குச் சமூகத்தில் பிரித்தானியா ஒரு அங்கத்துவ நாடாக உள்ளமையினால் இது ஏனைய அங்கத்துவ நாடுகளுடன் கூட்டுறவு நடவடிக்கைகளை பேணுவதுடன் உருக்குக் கைத்தொழில் அமைப்பையும் அதன் இலாபகரமான தன்மையினையும் முன்னேற்றுவதற்கு நடவடிக்கைளை மேற்கொள்கின்றது. 1986 களில் அங்கத்துவ நாடுகளின் உருக்கு கைத்தொழிலுக்கு அரசாங்கத்தினால் நேரடியாகக் கிடைக்கின்ற மானியங்ளைக் கட்டுப்படுத்தி சில நாடுகளில் வலு, போக்குவரத்து, தொழிலாளர் செலவு என்பவற்றுக்கு மறைமுகமாக நிதியுதவிகளை வழங்குவதன் மூலம் இந்நிலையைப் பேணியது.

முடிவுரை:-

அண்மைக் காலத்தில் இக் கைத்தொழில் உற்பத்தித் திறனில் முனைப்பான முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. கைத்தொழிற் சீராக்கங்களின் விரிவான செயல் திட்டத்தின் விளைவாக இம்முன்னேற்றம் ஏற்பட்டது. 1978 – 79 களில் ஒரு தொன் மென் உருக்கினை உற்பத்தி செய்ய 14. 3 மனித மணித்தியாலங்கள் தேவைப்பட்டன. 1990 களில் இதற்கு 4.5 மனித மணித்தியாலங்கள் தேவைப்பட்டது இன்று அநேகமாக நிறுவனங்கள் இலாபகரமான நிலையினைக் காட்டுகின்றன.

மேற்கூறிய வகையில் இக் கைத்தொழிலில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே இனிவரும் காலத்தில் இக் கைத்தொழிலின் போக்கு எந்நிலையில் காணப்படும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். □

---

**இலங்கையிலுள்ள உல்லாசப் பயணத்துறை விடுதிகளில் முதன்மையாக உள்ளவை:**

1. ஹொட்டல் சிலோன் இன்றர் கொன்ரினண்டல் ( Hotel Ceylon Inter Continental )
2. லங்கா ஒபரோய் ( Lanka Oberoi )
2. ஹோட்டல் தப்ரபேன் ( Hotel Taprobane )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. சிவதாசன்
ஆண்டு 13
வர்த்தகப் பிரிவு 94

# யாழ்ப்பாண மாவட்ட மீன்பிடி

## அறிமுகம்

இன்று உலக ரீதியாக பார்க்கும் போது சனத்தொகை எல்லா நாடுகளிலும் அதிகரித்து கொண்டு செல்கின்றது. இந்த அதிகரித்த சனத்தொகைக்கு தேவையான உணவு பற்றாக்குறையாக உள்ளது. பற்றாக் குறையாக இருப்பது மட்டுமன்றி போசாக் கான உணவு கிடையாமையும் ஒரு பின் விளைவைக் கொண்டு வந்துள்ளது. இத் தேவையை நில வளத்தையும், கடல் வளத் தையும் அதிகரிப்பதன் மூலம் வழங்கமுடியும்.

மனிதனுக்கு தேவைப்படுகின்ற உண வில் கடல்வள உற்பத்தியில் மீன் வளத்தை எடுத்து நோக்கின் வைத்திய சிபார்சின் படி 23g மீன் ஒரு வருடத்தில் இடம் பெறுதல் வேண்டும். இதில் பதப்படுத்தப்படாத மீன் 8.39kg. ஆனால் இலங்கையில் வருட நுகர் வில் 15kg மீன் மட்டுமே கிடைக்கின்றது. பதப்படுத்தப்படாத மீனில் நாளாந்தம் 4g புரதம், 1g கொழுப்பு என்பன கிடைக்கின் றன. இவற்றில் இருந்து 35 கிலோ கலோரி சக்தி கிடைக்கப் பெறுகின்றது. இவ்வாறு மனித உணவில் மீன்வளம் முக்கிய இடம் பெறுவதனால் யாழ் மாவட்டத்தில் எடுத்து நோக்குவது சிறப்பாக அமையும். இந்த வகையில் இக்கட்டுரை யாழ் மாவட்ட மீன் பிடியை மையமாக கொண்டு அமைகின்றது.

## 1. பௌதீக வாய்ப்பு

உயிருள்ள சேதனப் பொருட்களை உற் பத்தி செய்யும் தொழிற்சாலையாக கடல் காணப்படுகின்றது. இவ் மீன் வளமானது செழித்து விளங்க பௌதீக தன்மைகள் சிறப்பாக அமைய வேண்டும். யாழ் மாவட் டத்தை பொறுத்த வரை 244km நீளத் தையும் 20-40km வரையிலான அகலத் தையும் கொண்டதாக உள்ளது. இதில் வடகரையோரம் 60km நீளமான கற் பாறைத் தன்மை உடையதாகவும், கிழக்கு கரையோரம் 70km நீளமான மணல் பகு தியாகவும், தெற்கு தென் மேற்கு கரை ஓரம் 114km நீளமான சேற்று தன்மை உடைய பகுதியாக இருப்பதுடன் கிழக்கு கரையோரம் மிக நீண்ட கடற் பிரதேச மாகும். அத்துடன் ஆழம் குறைந்த பரவை கடலாய் இருப்பதனால் சூரிய ஒளி ஊடுரு விச்செல்லும் இதனால் பிளான்ரன் என்ற மீன் உணவு ஏராளமாக இருப்பதனால் ஏராளமாக இனப்பெருக்கம் செய்கின்றன பருவக் காற்றுகாலங்களில் கண்ட மேடைக் களில் அடியில் உள்ள மீன் உணவுகளை நீர்ச் சுழிகள் மேற்பரப்பிற்கு கொண்டு வரு வதனால் மீன்கள் கூடுதலாக காணப்படு கின்றன மிகச் சிறந்த கண்ட மேடைப்பகுதி வடகரையில் 1600 சkm பரப்பான பீட்று கண்டமேடை ஆகும். மற்றும் கரையோர வலையங்களை பகுப்பதாயிம் ஆழியவளை, தளவாடி, பருத்தித்துறை, காங்கேசன்துறை கிழக்கு மேற்குக் கரை, சண்டிலிப்பாய். சுழிபுரம், யாழ்ப்பாண கிழக்கு, மேற்கு கரை வேலணை, சாவகச்சேரி போன்றவற்யைக் குறிப்பிடலாம். மிகச்சிறந்த துறை முகங்க ளாக மயிலிட்டி, நாகர் கோயில், காங்கே சன்துறை, பருத்தித்துறை என்பவற்றையும் வளர்ச்சி அடைந்து வருகின்ற துறை முகங் குளாக பாசையூர் குருநகர் பகுதியையும் கறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. சிவதாசன்

## 2. மீனவக் குடித்தொகை

இப்பிரதேச மனித உழைப்பினை நோக்கினால் மொத்த கடற்றொழிலாளர் 1989ஆம் ஆண்டு அறிக்கையின்படி 101 100 பேரும், இதில் கடற்றொழிலில் ஈடுபடுவோர் 26000 பேராாவும், கடற்றொழிலிலீடுபடாதோர் 23 600 பேராகவும், மொத்த கிராமங்கள் 83 ஆகவும் காணப்படுகின்றது. யாழ் மாவட்ட மொத்த மக்கள் ஏறத்தாழ 8லட்சம் ஆகும். இதில் மொத்த மீனவர்கள் ஏறத்தாள 1 லட்சம் ஆகும். மொத்த மக்களில் மீனவர்கள் 12.5% ஆகும்.

## 3. உற்பத்தி முறைகளும் போக்குகளும்

### 1. உற்பத்தி முறைகள்

இப்பிரதேச மீன்பிடி முறையை பாரம்பரிய முறை என்றும் நவீன முறை என்றும் இரண்டாக பாகுபடுத்தலாம். இதில் பாரம்பாரிய முறையானது குறைந்த மூலதனத்துடனும், அதிக தொழிளாளருடனும உள்ளூர் மூலப்பொருட்களை பயன்படுத்தியும் ஆதிகாலம் தொட்டு பயன்படுத்தப்பட்டு வருவதனால் இம் முறையில் அனுபவம் மிக்க தொழிளாளர் காணப்படுவதை அவதானிக்கலாம். இதில் சிறகுவலை, வீச்சுவலை, கரைவலை, தூண்டில் இடல், என்பவற்றை குறிப்பிடலாம். சிறகு வலை முறையானது குருநகர், பாசையூர்: போன்ற ஏரிப்பகுதியில் சிறப்பாக கையாளப்படுகின்றன. 64% மீனவர்கள் இம் முறையில் ஈடுபட்டுள்ளனர். குறைந்த மூலதனத்துடனும் ஆபத்து குறைவுடனும் மேற்கொள்ளலாம். இதற்கு மொத்த மூலதனச் செலவாக 7000 ரூபாவும் இதற்கான வருடாந்த வருமானமாக 60000 ரூபாவும் ஆகும். இட்ட மூலதனத்தை 3 மாதங்களில் பெறகூடியதாய் உள்ளது. கரைவலை முறையானது கிழக்கு கரையில் நீண்ட கடல் பரப்பில் சிறப்பாக கையாளப்படுகின்றன. இதற்கான ஆரம்ப மூலதனச் செலவு 7000 ரூபா, மற்றும் 18 அல்லது 20 உதவியாளர் வேண்டப்படுகின்றனர். இது வருடம் முழுவதும் மேற்கொள்ளபட கூடியதாய் உள்ளதால் வருடாந்த மொத்த வருமானம் 360 000 ரூபா இட்ட மூலதனத்தை 1 வருடத்தில் பெறக்கூடியதாய் உள்ளது.

நவீன முறையில் ரோலர், படுப்புவலை டிஸ்கோ (முப்புரிவலை), மிதப்புவலை, பல கொழுக்கி கொண்ட தூண்டில் என்பவற்றைக் குறிப்பிடலாம். இதில் ரோலர் முறையானது கூடிய மூலதனத்துடனும் இயந்திர படகுகளை கொண்டும் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மூலதனச் செலவாக 120 000 ரூபவாம், மொத்த பிற செலவாக 180 000 ரூபாவும், ஏற்படுகின்றது. இத்தொழிலின் மூலம் நிகத் லாபமாக ஏறத்தாள 240 000 போவரும் இம்முறையில் முதலீடு செய்த தொகையினை 6½ மாதத்தில் பெற்றுக் கொள்ள முடியும் மற்றும் இறால் பிடித்தொழிலை எடுத்து நோக்குவோமாயின் இதுவும் ரோலர் மீன்பிடி தொழிலை ஒத்ததாக உள்ளது. இது யாழ்ப்பாண ஏரிப்பகுதியில் அண்மையில் கையாளப்படும் ஒரு முறையாகும். இதற்கான மூலதனச் செலவு 4000 ரூபா ஆகும். நிகர வருட லாபம் 31 700 ரூபா இதில் இட்ட மூலதனத்தை 2 மாதங்களில் பெறக்கூடியதாய் உள்ளது யாழ் மாவட்டத்தில் பயன்படுத்தப்படும் படகுகள் 2 750 மோட்டார் பூட்டி பயன்படுத்தப்படும் படகுகள் 1375 ஆகும்.

### 2. உற்பத்திப் போக்கு

இப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் மீன் இனங்களாக ஏரிப்பகுதியில் ஒட்டி ஒரா, இறால், நண்டு, கணவாய் கடல்பகுதியில் பிடிக்கப்படும் மீன் இனங்களாக கடலட்டை, இறால் நண்டு, கணவாய், பாரை என்பனவும் பிடிக்கப்படுகின்றன. இவற்றின் உற்பத்தி அளவினை நோக்குவோமாயின்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | இலங்கை | யாழ்ப்பாணம் | வீதம் |
|---|---|---|---|
| 1981 | 185503 | 42000 | 21% |
| 1983 | 184036 | 49725 | 28% |
| 1985 | 140266 | 23775 | 17% |
| 1990 | 134132 | 22000 | 14% |

மேற்காட்டிய அட்டவணையை பார்க்குமிடத்து 1983 ஆம் ஆண்டிற்கும் 1985 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட குறுகிய கால இடைவெளியில் உற்பத்திகள் பெருமளவால் குறைவடைந்துள்ளது, இக்காலப் பகுதியியே இனக்கலவரங்கள் ஏற்பட்ட காலப்பகுதியாகும். இக் காலப்பகுதியின் பின்னர் படிப்படியாக பொருளாதாரத் தடை, கடலில் இராணுவ நடவடிக்கையினால் உற்பத்தி அளவுகள் குறைவடைந்து வருவதை அவதானிக்கலாம்.

3. ஏற்றுமதி வாய்ப்பு

இங்கு உற்பத்தி ஆகும் சுறா, கொயாம்பு என்பன கிட்டத்தட்ட 30 அடி நீளம் வளரக்கூடியவை. இதன் செட்டை மிகப்பயனுடையது. இதனை வேளா இழுப்பா என அழைப்பர். சுறாச் செட்டைவால் என்பன உலரவைக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. 1 அடி நீளமான செட்டை உலாத்தியபின் 1kg ஆயின் 800 ரூபா வரை விற்பனை செய்யப்படக்கூடியது இதற்கு தாய்லாந்து, சிங்கப்பூர், போன்ற நாடுகளில் நல்லகேள்வி உண்டு. மற்றும் கொம்பு மீனில் இருந்து பெறப்படும் எண்ணைக்கு பிரித்தானியா தாய்லாந்து போன்ற நாடுகளில் நல்ல கேள்வி உண்டு. பரவைக் கடலில் பிடிக்கப்படும் சிங்கறால் இன்று உணவாகப் பயன்படுத்தப்படுவது மட்டுமின்றி வர்ணங்கள் தீட்டப்பட்டு அழகுசாதனப் பொருளாக பயன்படுத்தப்படுவதனால் இவை ஏற்றுமதியில் முக்கியம் பெறுகின்றது. இதனை அமெரிக்கா, பிரித்தானியா என்பன பெருமளவாகக் கொள்வனவு செய்கின்றன, மற்றும் கடலட்டை. சங்கு என்பன பிரித்தானிய மக்களின் விருந்தினர் உணவாக காணப்படுவதனால் இங்கிருந்து கூடுதலாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

4. எதிர் நோக்கும் பிரச்சனைகள்

இத் தொழிலில் ஈடுபடுவோர் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சனை மூலதனமின்மையாகும். அதாவது கடன் பெற்று தொழிலில் இறங்குவதனால் அவர்களின் கடனுக்கான வட்டியிலும் கூடிய வருமானம் கிடைப்பதில்லை. மீண்டும் மீண்டும் இதனால் மீளாக்கடனில் அமிழ்த்தப்படுவர். மற்றும் இறங்கு துறைகள் நவீனமயமின்மையும் ஆழ்கடலில் சென்று கூடிய மீன்களைப் பிடித்துப் பதப்படுத்தி கரையோரத் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்கேற்ற நவீன வசதி கொண்ட கப்பல்கள் காணப்படாமையும் மீன்களைப் பதனிட்டு வைப்பதற்கான உபகரணங்கள் விலை கூடியதாக இருப்பதும் மேலும் பிடிக்கப்படும் மீன்களை உடனடியாக சந்தைக்கு எடுத்து சென்று விற்பனை செய்யக் கூடிய வாய்ப்புகள் இன்மையும் இதனால் கரையோரப் பகுதியில் நிரம்பல் கூடுதலாகவும் விலை குறைவாகவும் இருப்பதனால் மீனவர்களின் வருமானம் குறைவடைந்து வாழ்க்கைத் தரம் குறைவடைவதும் மேலும் சிறு வயதில் இருந்தே இத் தொழிலில் மீனவர்கள் ஈடுபடுவதனால் நவீன இயந்திரங்களை இயக்குவதற்கோ அல்லது திருத்துவதற்கோ ஏற்ற தேர்ச்சி பெற்ற தொழிளாளர் இன்மையும்,

மற்றும் இப் பிரதேசத்தில் தாம் போதிகள் பொருத்தமற்ற இடங்களில் அமைப்பதனால் பாரிய விளைவுகளை விளைவிக்கின்றது. இது ஒரு செயல்திட்டத்தைப் பாதித்து இன்னோர் செயல் திட்டமாக மாற்றுகின்றது. உதாரணமாக பொன்னாலை பண்ணைத் தாம்போதி உள்ளடங்கிய பிரதேசம் ஆழ மற்ற மூடப்பட்டு வரும் கடல்ப் பிரதேசமாக மாற்றப்பட்டு வருகின்

றது. தங்கு தடையான தாம்போதி அமைப்பும் மீன் பிடியைப்பாதிக்கின்றது. இதனால் மீன்பிடியில் ஈடுபடுவோர் பெரும் பாதிப்பிற்குள்ளாகின்றனர்.

## 5. பிரச்சனைக்கான தீர்வுகள்

இக் குறைபாடுகளை நீக்க யுத்த நிலைமையைத் தாங்கி நிற்கும் மீனவர்கள் இங்குள்ள மூலப்பொருட்களை பயன்படுத்தி தமது தொழிலை மேன்மேலும் சிறப்புற அமைந்து வருகின்றனர். உதாரணமாக படகு, வள்ளம் அமைப்பதற்கு இங்குள்ள மரங்களை பயன்படுத்துவதுடன் வலைகள் கயிறுகள் என்பவற்றை அமைக்க தாளம் நார், பனைநார் போன்றவற்றை செயற்கையை வெல்லும் அளவிற்கு மாற்றி அமைத்துள்ளனர். கூடை பின்னலை எடுத்தால் பனைநார், பனைஓலை என்பன பயன்படுத்தப்படுகின்றன. மின்சார குளிரூட்டல் வசதிகள் இன்மை, காரணமாக அதனை வெல்ல உப்பிட்டு பயன்படுத்தி ஏற்றுமதி செய்யும் அளவிற்கு விருத்தி அடைந்துள்ளன. பிளாஸ்ரிக், தகரம் போன்ற பெறுமதி கூடிய பொருட்களில் மீன் பதப்படுத்தலை மேற்கொள்ள முடியாத போது கற்பகத்தரு பனை மரத்தில் இருந்து பெறப்படும் பனை ஓலையைப் பயன்படுத்துகின்றது. கூடிய மூலதனம் கொண்ட நவீன இயந்திரம் கொண்ட கப்பலை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள போது கட்டுமரம், துடுப்பு, பாய் மூலம் பிடிக்கப்படுகின்றது. மற்றும் இத்தடையை வெல்ல எதிர்காலத்தில் எழுச்சித் திட்டங்களை மேற்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படும் மீனவ குடியேற்ற திட்டங்களாக ஊரியான், கொம்படி பகுதிகளையும், பனிக்கட்டி ஆலை ஆரம்பிப்பதற்கு குருநகர், அரியாலை பருத்தித்துறை ஆகிய இடங்களும் படகு கட்டும் ஆலைகளாக பருத்தித்துறை குருநாகர் பகுதிகளையும் கடற்றொழில் தொடர்பாடல் பகுதிகளாக பருத்தித்துறையும், கடல் அலை தடுப்பு நடவடிக்கை காங்கேசன்துறையில் அமைப்பதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றது. மற்றும் திட்டமிட்டு அமைக்கப்பட்டமையினால் ஒரு செயல்திட்டத்தை இன்னோர் செயல்திட்டமாக மாற்றுவதனால் வெற்றி பெற முடிந்துள்ளது. உதாரணமாக மாதகல் இறால் வளர்ப்புத்திட்டத்தைக் குறிப்பிடலாம். மற்றும் பொருளாதார தடையைத் வெல்ல இங்கு காணப்படும் குருநாகர் சீனோர் நைலோன் தொழிற்சாலையில் கூடியளவு வலைகளை உற்பத்தி செய்து குறைந்த விலைக்கு யாழ் மாவட்ட மீனவர்களுக்கு வழங்க கூடியதாய் அமையும்.

## முடிவுரை:

இங்கு இத்தகைய வாய்ப்புகளும் வசதிகளும் மீன்பிடி தொழில் அபிவிருத்திக்கு சாதகமாக அமையும் போது இத்தொழிலை விருத்தி அடையச் செய்வது உணவில் தன்னிறைவு நிலையை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம். மக்கள் மனப்பாங்கு மாற்றமும் பூரண ஒத்துழைப்பும் கிடைக்கும் பொழுது எத்தகைய செயற்கை தடைகள் காணப்பட்டாலும் அவற்றை உடைத்தெறிந்து இந்த இலங்கை அடைய முடியும். □

உல்லாசப் பயணிகளுக்குத்தேவையான தகவல்களை வெளியிடும் சஞ்சிகை:

எக்ஸ்பிளோரர் ஸ்ரீலங்கா ( Explore Sri Lanka )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாச்சியார் செல்வநாயகம், எம். ஏ.
முதுநிலை விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

# அத்வைத, விசிட்டாத்துவைத, துவைத தத்துவக் கொள்கைகள்

## சமயமும் தத்துவமும்

மனிதனது ஆத்மீக அனுபவத்திற் தோன்றியவையே சமயங்கள். எனவே கீழைத்தேய மேலைத்தேய சமயங்கள் அனைத்தும் மனித ஆத்மீக உணர்வின் வெளிப்பாடுகள் என்பது தெளிவு. இத்தகைய ஆத்மீக அனுபூதிகளை உள்ளடக்கியாதான சமயங்களில் அவ்வச் சமயத்தின் உள்ளீடான தத்துவக் கொள்கைகள் இடம் பெற்றுள்ளன. இந்த வகையில் வேத வழி வந்த அனுபூதிமான்களால் உணரப்பட்டுப் பின் உலகநாடுகள் பலவற்றிலும் பரவிய இந்து மதத்தில் பலவகைப்பட்ட ஆத்மீக அனுபவங்களைக் கொண்ட வழிபாட்டு முறைகளும், அதற்கான தத்துவக் கொள்கைகளும் காணப்படுகின்றன. இத்தகைய பின்னணியில் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் என அறுவகை மதங்கள் பிரபல்யம் வாய்ந்தவையாகவும், அவற்றில் ஒவ்வொன்றிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பல தத்துவக் கொள்கைகள் காணப்படுவதையும் இந்து தத்துவக் கொள்கைகள் பற்றி ஆராய்பவர்களுக்குப் புலனாகும். இவற்றிற் தற்காலத்திற் பிரசித்தி வாய்ந்த வேதாந்த தத்துவங்களாகச் செயல்படும் அத்வைத, விசிட்டாத்துவைததுவைத தத்துவக் கொள்கைகள் பற்றிய கருத்துக்கள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## சங்கர வேதாந்தம்

வேதாந்தம் என்ற சொற்றொடர் வேத முடிவு என்ற கருத்தில் வேதங்களின் உட்பொருளை விளக்கி நிற்கும் உபநிடத உண்மைகளையே சுட்டி நிற்கின்றன. தகுதியுள்ள ஆசிரியருடன் தகுதி வாய்ந்த மாணவன் உரையாடி ஆத்மீக விடயங்களை உள்ளடக்கிய தொகுப்பே உபநிடதங்களாகும். உபநிடதங்கள் முழுமையும் ஒரு ஆசிரியராலே ஒரு மாணவனுக்கு உரைக்கப்பட்டதன்று, பல்வேறு வகைப்பட்ட தரத்திலுள்ள மாணவர்களுக்குப் பல ஆசிரியர்கள் எடுத்துக் கூறிய அனுபூதி விடயங்களே உபநிடதங்கள் என்றால் மிகையாகாது. எனவே உண்மைப் பொருட்கள் பற்றிய கருத்தில் மாணவனின் பக்குவத்திற்கேற்ப ஒன்று என்ற கருத்தும் ஒன்றுக்கு மேற்பட்டவை என்ற கருத்தும், பல என்ற கருத்தும் பல இடங்களிற் காணக்கூடியதாக உள்ளது. எனவே பரந்தும் விரிந்தும் வெளிநோக்கில் முரண்பட்டும் கிடந்த உபநிடதக் கருத்துக்களை சுருக்கமான முறையில் விளக்க வேண்டிய ஒரு சமூகத் தேவைக்கான முயற்சியின் வெளிப்பாடாக எழுந்ததே பாதராயணரின் வேதாந்த சூத்திரமாகும். உபநிடதம், அதன் வழிவந்த பிரமசூத்திரம், பகவத்கீதை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையே மேலே கூறப்பட்ட தத்துவங்கள். இவற்றுடன் வைணவபுராணங்களையும், ஆகமங்களையும் ஆழ்வாரகளின் நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களையும் இராமனுஜரும் மத்துவரும் தமது கோட்பாட்டிற்கு ஆதாரமாகக்கொண்டுள்ளனர்.

எனவே உடநிடதங்கூறும் இறைவன் உலகம், உயிர் ஆகிய முப்பொருட்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவ அடிப்படைகளாகக் கொண்டு அவற்றை விளக்கும் வகையில் எழுந்தவையே வேதாந்த தத்துவங்கள். ஆனால் அந்த மூன்று பொருட்களுக்கும் கொடுக்கும் விளக்கத்திலேயே அவை முரண்பட்டு வேறுபடுகின்றன. ஒரு பொருள் உண்மையென்பதை நிரூபிக்கப் பொதுவாக மூன்று வழிகள் கூறப்படுகின்றன. அவற்றைப்பிரமாணங்கள் என்பர். பிரத்தியட்சம், அனுமனம், ஆப்தவாக்கியம் என்பனவே அவை பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு செவி என்பனவற்றால் நேரடியாகப் பெறும் அறிவு பிரத்தியட்சம் (காட்சி) எனப்படும் தூரத்திலே ஓரிடத்திற் புகை தெரிகிறது. அங்கு நெருப்பு இருப்பது நமது கண்ணுக்குத் தெரியவில்லை. ஆயினும் அங்கு நெருப்பு இருக்கின்றது என்பதை நெருப்புடன் நீங்காத உறவுடைய புகையைக் கொண்டு ஊகிக்கின்றோம். ஏனெனில் நெருப்பையும் புகையையும் ஒருங்கே கண்டுள்ளோம். நெருப்பிலிருந்துதான் புகை எழுகின்றதென்பதைப் பலமுறையும் பிரத்தியட்சமாகக் கண்டுள்ளோம், எனவே புகையைக் கண்டு நெருப்பு அங்குளது என்று திடம் பண்ணுகின்றோம். இதுவே அனுமான அறிவாகும். இவையிரண்டினாலும் பெறமுடியாத அறிவை ஆப்தவாக்கியம் எனப்படும் உரை மூலம் அறிகின்றோம் ஒரு பொருளை அனுபவத்தால் அறிந்து அறிஞரின் வாய்மொழி உரைப் பிரமாணத்திலடங்குகின்றது.

பிரபஞ்ச உள்பொருட்களாக மூன்று பொருட்களைப் பற்றிப் பேசும் மூவகை வேதாந்திகளும் மூவகை பிரமாணங்களையும் தமது தத்துவ விளக்கத்திற்குப் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கதாகும்.

அத்வைதம், கேவலாத்வைதம், சங்கர வேதாந்தம் எனப் பெயர் பெறும். அத்வைதத்தின் முதல் ஆசிரியராக கௌடபாதர் என்பவர் குறிப்பிடப்படுகின்றார். இவர் மாண்டூக்கிய உபநிடதத்திற்கு மாண்டூக்கிய காரிகை என ஒரு விளக்கநூல் எழுதியுள்ளார். இதுவே பின் சங்கரரின் விளக்கத்திற்கு அடிப்படையாக அமைந்ததென்றால் மிகையாகாது. இவருக்குப் பின் அத்வைத வேதாந்தக் கருத்துக்ளை வழங்கியதில் சிறப்பித்துச் சொல்லப்படுமளவிற்கு இக்கோட்பாட்டிற் பிரபல்யம் பெற்றவராக இவர் விளங்குகின்றார்.

சங்கரருக்குப் பின் வந்த தத்துவ ஆசிரியர்கள் அனைவரும் சங்கரருக்குக் கடமைப் பட்டுள்ளார்கள். அனைத்துத்தத்துவங்களும் அவரின் அத்வைத் சிந்தனையை விமர்சிக்கும் நோக்கில் எழுந்தனவே. எனவே இந்து தத்துவ வரலாற்றின் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியவர் சங்கரர் எனக் குறிப்பிடப்படுகின்றார்.

கேரளத்தில், காலடி என்னும் இடத்தில் கி. பி. எட்டாம் நூறாண்டில் சங்கரர் தோன்றினார் என்பர். 32 ஆண்டுகள் வாழ்ந்த 'சங்கர பகவத்பாதர்' எனப் போற்றப்படும் சங்கராச்சாரியார் சிருங்கேரி, துவாரகை, பூரி, காஞ்சி ஆகிய இடங்களிலே நான்கு மடங்களை தாபித்தித்துத் தமது வேதாந்த நெறியினை வளர்ப்பதில் ஆர்வங்காட்டியதோடு, ஷண்மதங்களாகிய சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம். காணாபத்தியம், சௌரம் என்பவற்றை ஒழுங்குபடுத்தி பிரதித்தாபனம் செய்த பெருமைக்கும் உரியவர். பிரமசூத்திரத்திற்கு மாபாடியம் உபநிடதங்கள் பத்திற்கு உரை, சௌந்தர்யலகரி சிவானந்தலகரி கனக்தாரா முதலாம் தோத்திர நூல்களையும் உருவாக்கித் தந்தவர். உபநிடதங்களில் கூறப்படும் உண்மைப்பொருள் ஒன்று என்ற கருத்துக்கு அணி செய்யும் வகையில் அமைந்ததே சங்கர வேதாந்தக் கொள்கை.

சங்கரவேதாந்தத்தில் உள்ள பொருள் ஒன்றுதான் எனக் குறிப்பிடுவது பிரமத்தையே, அது பூரணமான அறிவுடையது. (ஞான சொரூபம்) ஞானமே உருவான பொருள் அது. அது குணங்கள் அற்றது

(நிர்க்குணம்) அதற்கு விசேட குணங்கள் எதுவும் இல்லை (நிர்விசேட) ஆன்மா என்னும் பிரமம் என்றும் கட்டப்படுவது எதுவே அதுவே உள்பொருள். இத்தகைய பிரமம் மாயையாகிய சக்தியோடு இணைந்துள்ளது. நிர்க்குணமாகிய பிரமம் மாயை காரணமாகக் குணங்கள் உடையதாகச்சகுணப்பிரமமாகத் தோன்றுகின்றது. இந்நிலையில் பிரமம், சகுணப்பிரமம், அபரப்பிரமம் ஈசுவரன் என்ற பெயர்களால் வழங்கப்படுகின்றது. எனவே வேதாந்தம் பேசும் நிலையானஒருபொருள் பிரமம் என்பது விளங்கும்.

ஆனால் ஏனைய உலகுயிர்கள் மாற்றத்திற்குட்படுவதால் அவற்றை நிலையான உள்பொருளாக வேதாந்தம் கணிக்கவில்லை. எனவே ஏனைய யாவும் பிரமத்தின் நிலையிற் கருதப்பட்டு விளக்கப்படவில்லை. பிரமத்துடன் இணைய வேண்டியவை ஆன்மாக்கள் இணைந்த அந்நிலையில் பிரமமாகின்றன என்பதைத் தமது தத்துவ அடிப்படையாகக் கொண்டமையினாற்றான் அத்வைதம் அ - துவைதம் இரண்டல்ல. ஒன்று என்று சங்கரவேதாந்தம் குறிப்பிடுகின்றது. ஜீவன்கள் பிரமமாக வேண்டியவை என்ற கருத்தை வலியுறுத்தும் நோக்கில் பிரமத்தைப் பரமாத்மாவென்றும் சீவன்களை சீவாத்மா என்றும் வேதாந்தம் சுட்டுவது குறிப்பிடத்தக்கது. பிரமத்தையும் ஆன்மாவையும் விளக்க வேதாந்திகள் ஒரு உவமையைக் கையாளுக்கின்றனர். ஒரு வெண்ணிறப் பூவை ஒரு செந்நிறக் கண்ணாடி வழியாகப் பார்க்கும்போது அப்பூவும் செந்நிறப் பூவாகவே காட்சி அளிக்கின்றது. செந்நிறக் கண்ணாடியை எடுத்ததும் வெண்ணிறப் பூவாக அறியப்படுகின்றது. உயிர்களின் அவித்தை (அறியாமை) காரணமாக அவை சீவாத்மாக்களாகக் காணப்படுகின்றன. அவித்தை நீங்கியதும் பிரமமாகின்றது. எனவே ஆன்மா பூரண அறிவினாற் பிரமமாகின்றது. அந்நிலையில் சீவன் என்ற பேச்சுக்கு இடமில்லை. எனவே பிரமம் என்பது தான் உண்மைநிலை, இலட்சிய நிலை என்பது அத்வைத வேதாந்தம்.

உயிர்கள் பற்றிய கருத்தில் எவ்வாறு அவித்தை முக்கிய இடம் பெறுகின்றதோ அதேபோன்று உலகுபற்றிய கருத்தில் மாயை முக்கிய இடம் பெறுகின்றது. எனவேதான் இவ்வேதாந்தத்திற்கு மாயாவாதம் என்ற பெயரும் சுட்டப்படுகின்றது. சைவசித்தாந்தத்தில் மாயை தெளிவாக விளங்கிக்கொள்ளக்கூடியது. உலக உற்பத்திக்கான மூலச் சடப்பொருள் மாயை. வேதாந்தம் பேசும் மாயை இலகுவில் விளங்கிக் கொள்ளக்கூடியதல்ல. மாறுதலடையும் இவ்வுலகம் மாறுதலடையாத ஒரு பொருளிலிருந்து தோன்றுகிறது. நிலையில்லாத இவ் உலகம் நிலையான ஒரு பொருளிலிருந்து தோற்றம் பெறுகின்றது. இயங்குகின்ற இவ்வுலகம் இயங்காத ஒரு பொருளிலிருந்து தோற்றம் பெறுகின்றது. அதுதான் பிரமம்.

மரத்திலிருந்து கிளை தோன்றும்போது மரத்திலே சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. மண்ணிலிருந்து பானை உற்பத்தியாகும் போது மண் பாதிக்கப்படுகின்றது. ஆனால் பிரமத்திலிருந்து உலகம் உற்பத்தியாகும் போது பிரமம் எள்ளளவும் பாதிக்கப்படுவதில்லை. பிரமத்துக்கும் உலகுக்குமுள்ள இந்த ஆச்சரியமான உறவுமுறை நமது சிற்றறிவுக்கு எட்டாதது என்பதே சங்கர வேதாந்திகள் கொள்கை. அதை விளக்கவே மாயை என்ற கோட்பாட்டை அத்வைதம் முன்வைக்கின்றது. வார்த்தைகளால் விளக்க முடியாத ஒரு பொருள் எனவேதான் அதனை அநிர்வசனீயம் எனச் சுட்டுகின்றனர். அது உள்ளதும் அன்று, இல்லாதும் அன்று, உள்ளதும் இல்லாததுமாகிய இரண்டியல்பும் கொண்டதுமன்று.

1. மாயை உள்பொருளன்று ஏனெனில் உள்பொருள் பிரமம் மட்டும்
2. அது இல்பொருளுமன்று. ஏனெனில் பிரமம் உலகாகத் தோற்றுவதற்குப் பொறுப்பாய் உள்ளது அதுவே
3. அது உள்ளது, அது இல்லாதது என்று கூறுவதும் தவறே. ஏனெனில் அந்தக் கூற்று முரண்னுடையதாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே அது உள்ளது இல்லாததாகிய இரு இயல்புகளுக்கு அப்பாலான சதசத் விலட்சணத்தை உடையதாகும். மாயை பொய்யானது என்பதால் மித்யா (மித்தை) எனவும் கூறப்படுகின்றது. ஆனால் அது குதிரைக்கொம்பு போன்று இல்பொருள் எனக் கொள்ளல் தவறானது. சிப்பியில் ஒளிவிடும் வெண்மை உண்மையற்றதாயி னும் உண்மையாகத் தோன்றுதல் போல் மாயையும் தோற்றும் இயல்புடையது. இங்கு உள்ளதை இல்லாதநாகக் காட்டும் விஷேச இயல்பு இல்லாததை உள்ளதாக காட்டும் ஆபரண இயல்பு என இரு இயல் புகள் மாயைக்குரியதாகச் சொல்லப்படுகின் றது. உண்மை ஞானம் தோன்றுகையில் மாயைஇல்லாதொழியும் சிப்பியில்வெண்மை வேறாக அடையாளம் காணப்படவோ பிரித்துணரவோ கூடாதது போல மாயையும் உலகிலிருந்து பிரித்தடையாளாம் காணவோ பிரித்துணரவோ முடியாத நிலையில் உள் ளது. இத்தொடர்பு தாதாத்மியம் எனப் படும். பிரமத்தை ஆதாரமாகக் கொண்டு மாயையினூடாகத் தோன்றுகின்ற உலக மானது மாயையும் அவித்தையும் அழிந்து பூரண ஞானம் வெளிப்படுகையில் இல்லாது ஒழியும் என்பது சங்கர வேதாந்திகள் கருத்து.

சங்கரரைப் பொறுத்தவரையில் உலகம் உண்மையானதே. அது மாயம் அன்று. கனவுநிலையிலிருந்து எவ்வாறு விழிப்பு நிலை வேறுபடுகின்றதோ, கனவு நிகழ்ச்சி நடந்து முடியும் வரையில் பொய்யான தன்று. விழித்த பின்னர்தான் அந்நிகழ்ச் சியின் பொய்மையை நாம் உணரமுடிகின் றது. இதுபோன்று உண்மை ஞானம் ஏற் படும் வரை இவ்வுலகம் உண்மையானது. அதில் நிகழும் நிகழ்ச்சிகளும், உயிர்களின் இயக்கங்களும் உண்மையாகும். கனவு நிலையில் நனவுநிலை தெரிவதில்லை. நனவு நிலையில் கனவுநிலை தெரிவதில்லை. இதேபோன்று பூரண ஞானநிலையில் (பார பார்த்திக நிலை) கனவு, நனவு நிலைகள் இல்லாதொழிகின்றது. எனவே அந்நிலை யில் உலகம் பற்றிய பேச்சுக்கே இடமில்லை.

சகுணப்பிரமம் ஈசுவரன் எனக்சுட்டப் படுகின்றது. நிர்குணப் பிரமம் மாயை காரணமாகச் சகுணப்பிரமமாகும் நிலையே ஈசுவரன் எனப்படுகின்றது. இந்த மாயை ஈசுவரனை மறைப்பதில்லை. மாயையின் தலைவனாக இருப்பது பிரமம். பிரமத் தின் சக்தியாக இருப்பது மாயை. முடிவி லாற்றலோடு நிற்கும் பிரமம் உலகாகத் தோற்றும் நிலையிலும் அதனைக் கடந்த வனாகவும் அதே நேரம் படைத்தல் முத லிய தொழில்களுக்கு அதிகாரியாகவும் ஒழுக்க நெறியினை வழிப்படுத்துபவனாக வும் உள்ளான். ஒரு பொருளே பூரண மான உண்மை அதுதான் பிரமம் என்பது அத்வைதம். உலகம் பற்றிக் குறிப்பிடும் போது மாயை பற்றிய கருத்தினாலும் இது வலியுறுத்தப்படுகின்றது.

அத்தகைய பூரணத்தை ஞானத்தின் மூலமே அறியலாம். சீவாத்மாக்களின் அறி யாமை ஒழிய ஞானம் ஒன்றே உதவக்கூடி யது. சீவாத்மாவின் பரிபக்குவ நிலையிற் தோன்றுவதே ஞானமாகும். அது உதித்த உடனேயே அறியாமையிருளானது ஆன் மாவைவிட்டு நீங்கிவிடுகின்றது. இந்நிலை யிற் பிரமத்தை அறிந்தவன் பிரமா ஆகி விடுகின்றான். அறியாமை அகற்றப்பட்ட அக்கணமே ஆன்மா என்றுமுள்ள இயல்பான தன்மையைப் பெறுதலில் அதனை அடைவ தற்கு ஒருவன் உடலைச் சாவானது கொள் ளும்வரை காத்திருக்க வேண்டிய அவசிய மில்லை. பூரண ஞானம் பெற்றவுடன் உட லில் உயிர் இருக்கும்போதே விடுதலை பெறு கின்றான். அதாவது பிரமமாகின்றான். அப்படிப்பட்ட ஒருவனை ஜீவன்முக்தன் என வேதாந்தம் காட்டுகின்றது. இருமை யற்ற அத்வைத அனுபவித்தின் மூலம் வாழ்க்கையின் இலட்சியம் அடையப் பெறு கின்றது என்பது சங்கரவேதாந்தம்.

## இராமானுச வேதாந்தம்

விசிட்டாத்துவைதம் என்ற தத்துவக் கொள்கையை நிறுவியவர் இராமானுசரா கும். சங்கரரது அத்வைதத்தைக் கொள்கை யாகிய பிரமம் ஒன்றே பூரணமான உள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் என்ற கொள்கையைக் கண்டித்து பிரமம் சகுணம் என்ற கொள்கையைக் கொண்டு விளக்கம் செய்தவர் இராமானுசர். இவர் கி. பி. 1017 – 1137 வரை வாழ்ந்தவர் என்று அறியப்படுகின்றது. பிரமசூத்திரத்திற்கு இவர் எழுதிய உரை ஸ்ரீபாசியம் என வழங்கப்படுகின்றது. இத்துடன் கீதைக்கும் இவர் பாசியம் செய்துள்ளார். வேதாந்தசாரம் வேதாந்ததீபம் சத்தியத் திரவியம் வேதாந்த சங்கிசசம் ஆகிய நூல்களையும் இவர் இயற்றியதாக அறியப்படுகின்றது. சங்கரர் வேதாந்த மடங்களை நிறுவியமை போன்று இவர் பல விஷ்ணு ஆலயங்களை நிறுவியதாக அறியப்படுகின்றது.

இராமானுசரின் கருத்துப்படி உள்பொருள் என்பது இருமையற்ற பரம்பொருளே. பிரமம் பல்வேறு குணங்களையுடைய ஒரு பொருள் இவ்வாறு குணங்களைப் பெற்ற காரணத்தால் பிரமம் வசிட்டம் (விசேடணங்களோடு கூடியது) அது நிர்விசே சைதன்னியம் (விசேடணமில்லாத அறிவுநிலை) அன்று. இராமானுசர் கொள்கைப்படி. உலகம், உயிர், இறைவன் ஆகிய மூன்றும் உண்மைப்பொருள்கள். எனினும் இறைவனே உயிர்கள் அனைத்துக்கும் உலகுக்கும் அந்தாயாமியாய் அதாவது உள் நின்று அவையனைத்தையும் இயங்குகின்றான். எனவே ஆன்மாக்கள் பலவாயினும் அவ்வானமாக்கள் அனைத்தையும் தனக்கு உடலாகக் கொண்டு ஆன்மாக்களுக்கெல்லாம் ஆன்மாவாய் நிற்கும் பரமான்மா ஒன்றுதான். இறைவன் உயிருக்கு உயிராய் நிற்கும் காரணத்தால் இறைவன் வேறு உயிர் வேறல்ல. இரண்டும் ஒன்று தான் என்பது பெறப்படுகின்றது. இதுவே இராமானுசர் பேசும் அத்வைதம். சங்கரர் பூரணமான பொருள் ஒன்று என்றும் அதுதான் பிரம்மம் என்று கூற, இராமானுசர் உலகையும், உயிர்களையும் விசேடணங்களாகக் கொண்ட விசே ஷியம் பிரம்மம் எனக் குறிப்பிடுகிறார். எனவே விசேடணங்களுடன் கூடிய விசே ஷியம்த்திற்கு முக்கியம் கொடுப்பதால் இவரது அத்வைதம் 'விசிட்டாத்வைதம் என்ற பெயர் பெறலாயிற்று. உலகங்களையும் உயிர்களையும் சரீரமாகக் கொண்ட சரீரியாகவே இராமானுசர் இறைவனை சித்திரிக்கின்றார். உயிரை இறைவனது உடலாக்கி இறைவனை அவ்வுடலுக்குரிய உயிராக்குகின்றார் இராமானுசர் இறைவனுக்கும் உயிர்க்குமுள்ள இந்தச் சரீர சரீரி சம்பந்தம் இராமானுசரது கொள்கையில் குறிப்பிடத்தக்க மிக முக்கியமானதோர் அம்சமாகும்.

உலகு, உயிர் ஆகியவற்றிற்கும் அவற்றைத் தனது உறுப்புகளாகவுடைய இறைவனுக்குமிடையேயுள்ள தொடர்பு மிக நெருங்கியது. இதனை விளக்க அப்பிரதச் சித்தி என்ற தொடரை இராமானுசர் உபயோகிக்கின்றார். ஒரு கத்தியிலிருந்து அதன் பிடியை பிரிக்கலாம். ஆனால் ஒரு பழத்திலிருந்து அதன் சுவையைப் பிரிக்க இயலாது. சுவை நிலைப்பதற்கு பழம் இன்றியமையாதது. இதைப்போலவே உயிர்க்கும் உலகும் நிலைக்க இறைவன் இன்றியமையாதவன். உலகம், உயிர் ஆகியவற்றை அங்கி ஆக்குவதில் உலகுக்கும் உயிர்களுக்கும் உள்ள குறைபாடுகள் இறைவனைப் பாதித்து இறைவனது பரிபூரணத்திற்கு பங்கம் ஏற்படலாம் என்ற வினாவுக்கு இறைவனைப் பாதிப்பதில்லை என்கிறார் இராமானுசர். இராமானுசர் ஒரு எடுத்துக் காட்டு மூலம் இதை விளக்குகிறார். அரசன் கட்டளையை நிறைவேற்றும் போது பிரசைகள் அனுபவிக்கும் இன்பதுன்பம் எதுவும் அரசனை அணுகுவதில்லை. அது போலவே சடப்பொருளாகிய உலகம் அடையும் மாற்றங்களுக்கும் சித்தாகிய உயிர்கள் அடையும் இன்பதுன்பங்களுக்கும் ஆள்பவனாகிய ஆண்டவனை அணுகுவதில்லை எனச் சொல்கிறார்.

ஆன்மாக்கள் பல எனக்கூறும் இராமானுசர் அவை நித்தியமானவை என்றும் அறிவை இயல்பாகவுடையவை என்றும் கூறுவதுடன் மூன்றுவகையான ஆன்மாக்கள் பற்றியும் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. எப்போதும் முத்திநிலையில் உள்ளவை.

2. பெத்தநிலையிலிருந்து பின் முத்தியை அடைந்தவை.

3. பெத்தநிலையில் உள்ளவை.

வித்தாந்திகளும் அநாதிமலமுத்தர், முத்தர், பெத்தர் எனக் குறிப்பிடுவதும் ஒன்றுபடுத்திப் பார்க்கக்கூடியவையாகும்.

ஆன்மாக்கள் இயல்பிலே அறிவுடையனவாக விளங்கினாலும் அது பூரணஞானமன்று. சித்தாந்திகள் ஆன்ம அறிவுக்கு அந்தக்கரணங்கள் முதலியவை உதவுவதை ஏற்பது போன்று இராமானுசரும் ஏற்றுக்கொள்கிறார். ஆன்மாக்கள் பிறந்திறந்து அல்லற்படுவதற்கு அதன் அறிவுக்குறைவும் அதனால் ஏற்படும் வினைப்பயனும் காரணம் என்பர்.

பிறவித்துன்பத்திலிருந்து நீக்கி ஸ்ரீமத்நாராயணன் வீற்றிருக்கும் ஸ்ரீ வைகுண்டத்தை அடைவதே வீடுபேறாகும் என இராமானுசர் குறிப்பிடுகின்றார்.

வீடுபேற்றிற்குரிய வழிகளாக கர்மம், பக்தி, ஞானம் ஆகிய மூன்றும் துணை செய்யும் என்பர் இராமானுசர். சைவசித்தாந்தத்திற் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்கள் படிமுறைகளாகக் கூறப்பட்டிருப்பது போன்று கர்மம் பக்தி, ஞானம் ஆகிய மூன்றும் உதவுவதாக இங்கு கூறப்படுகின்றது. சங்கரர் ஞானத்தையே விடுதலைக்குரிய வழியாகக் குறிப்பிடுகின்றார். மூவகை மார்க்கங்கள் பற்றிக் கூறினாலும் இறைவனது வல்லமையிலும் அருளிலும் பூரண நம்பிக்கை வைத்துத் தன்னை முற்றாக அவனிடம் ஒப்படைக்கும் ‘ பிரபக்தி ’ என்ற’ பக்திமார்க்கம் இராமானுச வேதாந்திகளிடம் சிறப்புப்பெற்றதொரு மார்க்கமாகக் காணப்படுகிறது. பக்தி மார்க்கத்தில் மனிதனும் முயலவேண்டும் என்பது விசிட்டாத்துவித துணிபாகும். உபநிடதங்களை அடிப்படையாகக்கொண்டு விசிட்டாத்துவைதம் தோற்றம் பெற்றாலும் அக்கருத்துக்களுக்கு வைணவபுராணங்களும், நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களும் அணி செய்தமையினால், பக்திமார்க்கம் இங்கு சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

## மத்துவ வேதாந்தம்

மாதவாச்சாரியார், ஆனந்ததீர்த்தர், பூரணப்பிரஜ்ன் எனவும் அழைக்கப்படும். மத்துவர் 1198 ஆம் ஆண்டு உடுப்பி என்ற இடத்தில் தோன்றியவராக கூறப்படுகின்றது. வைணவ உலகம் இவரை வாயுவின் அவதாரமாகப் போற்றி வருகின்றது. பிரமசூத்திரத்துக்கு மத்துவர் எழுதிய பாடியம் ‘ மத்துவ ’ பாடியம் எனப்படும். இவரால் பகவத்கீதைக்குப் பாடியமும் வேறு முப்பத்தைந்து நூல்களும் எழுதப்பட்டதாக அறியப் படுகின்றது. இவருடைய தத்துவக் கோட்பாடு துவதம் அல்லது துவைதம் என வழங்கப்படுகின்றது. சங்கரர் பிரமம் ஒன்றே பூரண உள்பொருள் ஏனைய உலகு உயிர் என்பன ஸ்ரீமத்தின் தோற்றங்கள் என்று நிறுவி பிரம்மம் அவத்தையினாற் சீவாத்மாக்களாகக் காட்சியளிக்கின்றது. ஞானத்தினால் சீவாத்மா பரமாத்மாவாகின்றது. அதாவது பிரம்மமாகின்றது எனக் குறிப்பிடுகின்றார். ஆனால் மத்துவர் உயிரும், இறைவனும் ஒருபோதும் ஒன்றாவதில்லை இரண்டும் எக்காலத்தும் வேறானவை என எடுத்துக் கூறுவதனால் அவருடைய தத்துவக் கொள்கை, துவிதம், இருமைக்கொள்கை எனக் கூறப்படுகின்றது. மத்துவரின் துவைதக் கொள்கை தெளிவான பன்மைக்கொள்கையாகும். அத்துவிதம் என்றால் இரண்டல்ல ஒன்று என்பது பொருளாகும். துவிதம் என்றால் ஒன்றல்ல இரண்டு என்பது ஆன்மாவும் இறைவனும் ஆகிய இரண்டும் இரண்டாக இருத்தல் என்பதாகும்.

இறைவன், ஆன்மா உலகம் என்ற மூன்று பொருட்களையும் இனம் காணுவதற்கு அடிப்படையாக இருக்கும் வேறுபட்ட தன்மைகள் பற்றிய கருத்துக்கு இவர் முக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியம் கொடுப்பதனால் மேதவாதி என அழைக்கப்படுபவர் இவர்.

மூன்று பொருட்களுக்கிடையில் ஐந்து வகையான பேதங்கள் உள்ளன எனக் குறிப்பிடுகின்றார். அவையாவன:

1. சீவன்களுக்கும் சீவன்களுக்கும் இடையிற் காணப்படும் பேதம் சீவ பரஸ்பர பேதம்.

2. சீவன்களுக்கும் ஈசுவரனுக்கும் இடையிலுள்ள பேதம் சீவேசுவரபேதம்.

3. சீவன்களுக்கும் சடப்பொருள்களுக்கும் இடையிலுள்ள பேதம். சீவ கடபேதமாம்.

4. ஒரு சடத்துக்கும் இன்னொரு சடத்துக்குமிடையே உள்ள பேதம் சடபரஸ்பரபேதம்.

5. சடத்துக்கும், ஈசுவரனுக்குமிடையே காணப்படும் பேதம் சடஈசுவரபேதம்.

துவைதக்கொள்கைக்கு அடிப்படையாக அமைந்திருப்பதே பொருட்களுக்கிடையிலான வேற்றுமை என்பது தெளிவு. பொருள்கள் பல என்பதை நாம் அறிவதற்கு அவற்றிற்கு இடையே உள்ள வேற்றுமையே காரனமாகும். வேற்றுமை என ஒன்றில்லையானால் பொருள்கள் பல என்பதும் இல்லையாகும்.

கடவுள் ஆன்மாக்கள் உலகம் ஆகிய மூன்று பொருட்களும் என்றுமுள்ளவையெனினும் இறைவன் மட்டுமே சார்பற்றவன் அவனே மிக உயர்ந்த உள்பொருள் (சர்வோந்தமன்) எல்லாக் குணங்களும் பூரணமாய் அமையப்பெற்றவன் (குணபூர்ணன்) அறியப்படவேண்டிய மிக உயர்ந்த பொருள் அவனே. அவன் சார்பற்றவன், உலகத்தோற்றத்திற்கு இயக்க காரணன் அவனே. எனவே பிரபஞ்சத்தைப் படைப்பவன், காப்பவன். அழிப்பவன், அவனே. காலம் கருமம், சடப்பொருள் எல்லாம் ஆன்மாக்கள் யாவும் அவனருளாலே இருக்கின்றன. இறைவன் ஆன்மாக்களுக்கு அருள்வதற்காக பல்வேறு வடிவங்களில் தன்னை வெளிப்படுத்துகிறான். அவ்வப்போது தர்மத்தை நிலைநாட்டுவதற்காக அவதாரங்கள் எடுக்கின்றான். வேதத்திருநூல்கள், வழியிலேயே தான் அவனை அறியலாம். அவன் அழிவற்றதற்கும் அழிவதற்கும் அப்பாற்பட்டவன், குறைகளவற்றவன் விஷ்ணுவின் படைக்கும் ஆற்றல் இலட்சுமி என அழைக்கப்படுகின்றது. சமுசாரசாகரத்தினின்றும் நிலையான விடுதலை பெற்றவரே இலட்சுமி. இறைவன் உயாந்த சார்பற்ற பொருளாக இருந்துகொண்டு இலட்சுமியாகிய முதன்மையான சார்புப்பொருளின் உதவியுடன் படைப்புத் தொழில் நடைபெறுகின்றது. உலகு ஒரு பொய்த் தோற்றமல்ல அது சத்துவம், ராகதம், தாமசம் ஆகிய முக்குணங்களையுடைய பிரகிருதியினின்றும் தோற்றம் பெறுகின்றது. எனவே பிரகிருதியே உலக முதற் காரணம். காரணநிலையாகிய பிரகிருதியிலிருந்து காரிய நிலையாகிய உலகம் இலட்சுமியாகி சக்தியின் மூலம் இறைவன் தோற்றம் பெறச் செய்கின்றான். ஆன்மாக்கள் தங்கள் இறுதி இலட்சியமாகிய வைகுந்தத்தை அடைவதற்கு வேண்டிய வழிவகைகளைக் கொடுப்பவை பிரகிருதியினின்றும் தோன்றும் உலகப்பொருட்களே.

உயிர்கள் ஒன்று அல்ல, பல என்று கூறும் மத்துவர் உலகம் ஆன்மாக்களால் நிறைந்திருக்கின்றதெனவும் ஆன்மாக்கள் அணுவடிவமானவை, அவற்றின் அறிவுக்கேற்ப அவை உடலைப் பெறுகின்றன என்றும், ஒரு ஆன்மா இன்னொரு ஆன்மாவைப் போன்று இருக்கமாட்டாதென்றும் குறிப்பிடுகின்றார். இத்தகைய ஆன்மாக்களை மூன்று வகையாகப் பிரிக்கின்றனர்.

1. நித்திய சுதந்திரமாய் இருப்பவை, நித்தியமுத்தர்.
2. சமுசாரத்தினையினின்று விடுதலை பெற்றவை முத்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தளைப்பட்ட ஆன்மாக்கள் பந்த (ஸத்தர்)

மூன்றாம் வகை ஆன்மாக்களிலும் இரு வகையுண்டு,

1. வீடு பேறடைவதற்கு தகுதியுடையவை

2. தகுதி பெறாதவை

தகுதி பெறாதவர்கள் இருவகையுண்டு:

1. என்றும் சமுசாரத்தினால் தளையாக்கப்பட்டவை.

2. காரிருள் நிரம்பிய இடமான நகரத்தில் இருக்கும்படி விதிக்கப்பட்டவை.

உயிரானது தான் இறைவனைச் சார்ந்தது. இறைவனது கட்டுப்பாட்டுக்குள் இருப்பது என்று அறிகின்ற பொழுது அதற்கு இறைவன் மேல் அன்பு ஏற்படுகின்றது. இத்தகைய அன்பே மோட்சத்துக்குரிய வழி என மத்துவர் எடுத்துரைக்கின்றார். இறைவனின் மேன்மை பற்றிய அறிவால் கிடைப்பதும் உறுதியானதும் மற்றைய பற்றுக்களையெல்லாம் விஞ்சி நிற்பதுமான அந்த அன்பையே பக்தி என்கிறோம் என மத்துவர் சொல்கிறார்.

தூய அன்பு நிலைப்பாடாகிய பக்தியினாலன்றி ஞானமோ வேறு வழிவகைகளோ வீடுபேறடைவதற்கு வழி செய்யா. அதுமாத்திரமல்லாமல் இறைவனுடைய புத்திரனாகிய வாயுவின் மூலமே ஆன்மாக்கள் இறைவனை அணுக முடியும் எனக் குறிப்பிடுகின்றார். விடுதலை பெற்ற ஆன்மாக்கள் கூட சமமானவை அல்ல. அவற்றிடையே முரண்பாடுகள் இல்லாவிட்டாலும் பிரமத்தை அறிந்து எல்லாக் குற்றங்களினின்றும் விடுபட்ட அவைகள் வேறுபட்டவையாகவே உள்ளன என மத்துவர் கூறி நிற்கின்றார். இவரும் இராமானுசர் போன்று புராண நாலாயிரத்திவ்விய பிரபந்த பக்தி மரபினின்றே பிரமசூத்திரத்திற்கு விளக்கம் கொடுத்தால் இவருடைய தத்துவத்திலும் பக்திக் கோட்பாடு சிறப்பிடம் பெறுகின்றதெனலாம்.

## முடிவுரை

தொகுத்து நோக்கின் காண்டல், கருதல் உரை என்னும் மூன்று பிரமாணங்களையும் ஏற்பதுடன் பிரமசூத்திரத்தினைத் தமது தத்துவக் கொள்கைக்கு அடிப்படையாகக் கெண்ட அத்துவித, துவித, விசிட்டாத்துவித கொள்கைகள் அவ்வவ் ஆசிரியர்களின் அறிவு, அனுபவ யுத்திக்கு ஏற்ற வகையில் அமைந்து விளங்குகின்றன.

இறைவன், உலகம், உயிர் ஆகிய முப்பொருள்கள் பற்றிய ஆய்வில் மூன்று தத்துவங்களும் ஈடுபட்டிருந்த போதும் அவற்றிற்குக் கொடுக்கும் விளக்கங்களிலிருந்து வேறுபடுவதையும் அவதானிக்க முடிகின்றது. இறையனுபூதி பெற்ற சங்கரர், இராமானுசர், மத்துவர் ஆகிய மூவரும் அறிவின் தூலங்களினால் மாத்திரம் தமது தத்துவக் கொள்கைளை நிலைநிறுத்தியவர்களல்ல அவர்களது ஆக்கத்திற் துலங்குவது ஆண்டவனை அனுபவிப்பதற்கான அழைப்பேயன்றி அறிவை மாத்திரம் பெருக்குவதற்கான ஒரு பின்னணியைக் கொண்டதல்ல. சத்தியத்திற் தோய்த்தெழுந்த மனுக்குலத்தை சத்திய நெறிப்படுத்தும் முயற்சியிலேயே தமது ஆக்கத்தை எமக்கு விட்டுச் சென்றுள்ளனர். எனவே இவற்றைக் கற்றுணர்ந்து அவர்கள் புகட்டிய ஒளிநெறியாம் சத்திய நெறியில் வாழ்ந்து பயன் பெறுவோமாக. □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. சுதன
ஆண்டு 13
வர்த்தகப்பிரிவு 94

# இந்தியக் கலைகள்

கலை என்பது கருத்தின் உறைவிடம், அழகின் பிறப்பிடம். இன்பம். இதன் பயன் ரவீந்திர நாததாகூர் கூறியபடி தன்னலமும், பழிபாவங்களும் நிறைந்த உலகை விட்டு நம்மை அழைத்துச் செல்லவல்லது கலை. ஏனெனில் இந்தியக் கலை அளிக்கும் அழகு வெறும் செயற்கை அல்லது இயற்கை அழகன்று ஆழ்ந்த உயர்ந்த கருத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இக் கலையானது மனித இனத்தின் வழிமுறை அனுபவத்தைக் காட்டுவதோடு வாழ்வின் நோக்கத்தையும் நிறைவேற்றுகின்றது.

இந்திய கலைத்தத்துவம் இந்திய சமய, தத்துவக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தியர் ஆன்மாவின் உண்மையைப் பல திறப்பட்ட கலைகளிலும் ஒலி, நிறம், வடிவங்களின் மூலம் குறியீட்டு முறையிலும் காட்டமுயன்றனர். இந்நோக்கம் நிறைவேறுவதற்கென்றே சில கலை முறைகளை வகுத்துள்ளனர்.

இந்தியர் கலையுணர்வும், கவிப்பண்பும் பெற்றவர்கள் இப்பண்புகள் இந்தியக் கலைகளிற் காணப்படுகின்றன. கூத்தும், பாட்டும் இயற்கைக் சூழலையொட்டி இயல்பாக எழுந்த கலைகளாகும். இந்தியரின் எளிமை, தூய்மை, மேன்மை, சமயப்பற்று பண்பாடு முதலியனவெல்லாம் இக் கலைகளில் இடம் பெற்றுள்ளன. இந்தியக் கலை கடந்தகால நினைவல்ல. வாழும்மரபாகும் ஆகவே ஆன்மீகக் கருத்தைச் சடப்பொருளால் காட்டுவது இந்தியக்கலையின் தத்துவமாகும்.

கி. பி. 2ம் நா. ஆண்டு முதல் இந்தியச் சமயங்கள் ஓங்கி வளரலாயின கலைத் துறையில் சமயம் கொள்கைளும் தத்துவங்களும் புகுந்தன. சமயக் வகுத்த முறையின்படி கடவுள் சிலை போன்ற கலைப் பொருட்கள் உருவாக்கப்பட்டன. வழிமுறையாக வளர்ந்துவந்த கலையறிவுஇந்து தெய்வங்ளுக்கு உருவச்சிலை எடுப்பதற்குப் பயன்பட்டது இதற்கு எடுத்துக்காட்டாக சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் வைத்துக் காக்கப்பட்டு வரும் நடராஜ வடிவம் அழகிலும் தத்துவக் கருத்திலும் சிறப்பெய்தி விளங்குகிறது.

ஆலையங்களை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த கலைகளுள் கட்டிடக் கலையும், சிற்பக்கலையும், ஓவியக்கலையும், இசைக்கலையும் நிருத்தியக்கலையும் சிறப்பிடம் பெறுகின்றன. இந்தியாவின் கட்டிடக் கலையின் தொன்மையை சிந்து வெளியில் காணினும் அரப்பாப் பண்பாட்டிற்கே உரிய செங்கற் கட்டிடங்கள் உறுதியாகவும், தகுதியுடனும் அமைக்கபட்டதாயினும் கலைச் சுவை பொருந்திய சிறப வனப்பை அவை பெறவில்லை எனலாம்.

சிந்து வெளிக்காலத்திற்கும் மௌரியர் காலத்திற்குமிடைப்பட்ட காலத்தில் கட்டிடக் கலையின் சிறப்பைக் காண முடியாதுள்ளன மௌரியர் காலத்திற்கும் குப்தர் காலத்திற்குமிடைப்பட்ட காலத்தில் பழைய தூபிகள் பெருப்பித்து அழகுற அமைக்கப் பட்டன. இவற்றுள் குறிப்பிடத் தக்கவை மத்திய பாரதத்தைச் சேர்ந்த பாரூத்திலும் பழைய போப்பால் அரசைச் சேர்ந்த சாஞ்சியிலும் கீழ் கிருஷ்னைப் பள்ளத்தாக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த அமராவதியிலுமுள்ள தூபிகளாகும். சாஞ்சியிலுள்ள தூபியே பண்டைய இந்தியாவின் ஒப்பற்ற கட்டடக் கலையை விளக்கும் சான்றுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

இந்தியாவின் பல பாகங்களிலும் அமைக்கப்பட்ட குகைக்கோயில்களும் இந்தியக் கலையின் சிறப்பைப் பறைசாற்றுகின்றன பூனாவுக்கு அண்மையில் உள்ள தக்கணக் குகைக்கோயில், அஜந்தாவிற்கு ஏறக்குறைய 30 மைல் தொலைவில் ஔரங்கபாத்துக்கு அண்மையில் உள்ள எல்லோராக் குகைகள் ஆகியவை தோற்றப் பொலிவுடையவை எலோராக் கலைப் படைப்புக்களில் தலைசிறந்தது கைலாசநாதர் கோயிலாகும் அங்கு பாறையின் முகப்பு வெட்டப்பட்டு உன்னதமான தோற்றத்துடன் விளங்கும் கோயிலொன்று குன்றுச் சரிவிலே ஒரு சிலையைச் செதுக்குமாப்போல் செதுக்கப்பட்டுள்ளது.

கற்பாறையில் குடையப்பட்ட கோயில்களில் காலத்தால் முந்தியது மாமல்லபுரத்தில் உள்ள குகைக் கோயில்களாகும். இங்குள்ள பதினேழு கோயில்களும் பல்லவ அரசர்கள் ஆதரவிலே வெளித்தள்ளியுள்ள கருங்கற்குன்றுகளிற் செதுக்கப்பட்டவை தனிப்பாணியில் அமைக்கப்பட்ட இவை திராவிட முன்மாதிரிகளை தழுவ எழுந்தவை எனலாம். 8 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அமைக்கப்பட்ட மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலிலும் காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயிலிலும் பல்லவ பாணி அதன் உச்ச நிலையை எய்தியுள்ளது.

சோழர் காலத்திலும் சிறந்த படைப்புக்கள் தோன்றின என்பதற்கு மாமன்னன் இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சைச் சிவன் கோயிலும் இராசேந்திரச் சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டிய கோயிலும் சான்றுகளாக விளங்குகின்றன. இவ்விரு கோயில்களிலும் விரிவான வேலைப்பாடுள்ள கற்றூண் மண்டபங்களும் எழில் மிகு அலங்கார வேலைகளும் உள்ளன. பாண்டிய மன்னர் காலத்திலும் வானளாவிய கோபுரங்கள் அமைக்கும் பணி தொடங்கியது. மதுரையிலும், திருவரங்கத்திலும் மாபெரும் கோயில்களில் பாண்டியத் திருப்பணி உச்சநிலை அடைந்தது.

இந்தியக் கலைகளில் சிற்பக் கலையானது தனித்துவமான கலையாக விளங்கியது. இக் கலையானது மிகப் பழமை வாய்ந்த கலையாக விளங்குகிறது. அசோகன் காலத்து தூண்களிற் காணும் போதிகைகளே இந்துநதிப் பள்ளத்தாக்குச் சிற்பங்களையடுத்துத் தோன்றிய மிகப் பழைய முதன்மை வாய்ந்த சிற்பங்களாகும். போதிகை வரிச்சுக்கள் உச்சியிலுள்ள உருவங்களிலும் இந்தியக் கலைப் பண்பினைக் காணலாம். இயங்குவனபோல் காட்சியளிக்கும் விலங்குச் சிற்பங்கள், புத்தபகவானையும் மௌரியப் பேரரசன் அசோகனையும் குறிக்கும் ஆழிகள், பூக்களையும், இலைகளையும் கொண்ட சித்திர வேலைகள் யாவும் அப்போதிகை வரிச்சுகளில் இடம் பெற்றுள்ளன.

குப்தர் காலத்திலும் சிற்பக்கலை சிறந்து விளங்கியது. இக்காலச் சிற்பங்கள் யாவற்றிலும் கம்பீரமானது உதயகிரிக் குகையின் வாயிலில் புடைப்புச் சிற்பமாய் அமைந்துள்ள வராகம் எனலாம். பல்லவ அரசர்களால் கட்டப்பெற்ற வியப்புமிக்க கோயிற் தொகுதிகளை அணி செய்யும் மாமல்லபுரச் சிற்பங்கள் தனித்தன்மை வாய்ந்தவை இச்சிற்பங்களில் மிகக் கவர்ச்சியானது 80' மேலான நீளமும் ஏறக்குறைய 80' உயரமுமுள்ள பாறை முகப்பை அணி செய்கின்ற காங்காதேவி வானினின்றும் தோற்றமாகிய படைப்புச் சிற்பமாகும். இப்புண்ணிய நதியைக் காட்டுவதற்கு அப்பாறையில் இயற்கையாக அமைந்த ஒரு பிளவு பயன்படுத்தப்பட்டுள்ளது.

மாமல்லபுரத்தில் நேர்த்தியான பிற புடைப்புச் சிற்பங்களும் உண்டு. ஆற்றல் மிக்க மகேந்திரவர்மனையும் அவன் தேவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரையும் சித்தரித்துக் காட்டுகின்ற படிமச் சிற்பமும் தனித்தனி நிற்கும் விலங்குகளின் வடிவங்களும் உள. சோழர் காலத்திலும் அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தோரின் காலத்திலும் உன்னதமான பல வெண்கலச் சிலைகள் வடிக்கப்பட்டன. இடைக்காலப் பகுதியில் திராவிடச் சிற்பிகள் வடித்த சிறப்பான படைப்புக்கள் அவையாகும்.

சிற்பக்கலை போன்றே ஓவியக்கலையும் சிறப்புமிக்க கலையாக கருதப்படுகின்றது. இக் கலையானது இந்தியாவின் மிக வளர்ச்சி யுற்ற ஒரு கலையாக விளங்கியது என்பதற்கு சான்றுகள் உள்ளன. செல்வர்களின் இல்லங் களிலும், மாளிகைகளிலும் எழில்மிக்க சுவ ரோவியங்களால் அணி செய்யப்பட்டன. ஓவியக்கலையின் சிறப்பை குகைகோயில் சுவரோவியங்களில் காணலாம். இந்துக் கோயில்களிலே இன்று போலவே அந் நாளி லும் சுவரோவியங்கள் தீட்டப்பட்டன. பண்டை நாகரீகத்திற்குரிய ஓவியங்களுள் இன்று நிலைத்துள்ள அஜந்தாச் சுவரோ வியங்கள் சமயச்சார்பில் வரையப்பட்டா லும் உலகியல் போக்கையே மிகுதியாகக் காணலாம். மாளிகையில் வாழும் இளவர சர், மாடங்களில்உலவும் பெண்கள் தோளில் சுமைதாங்கும் கூலியாட்கள், இரவ லர், உழவர், துறவியர் விலங்குகள் பறவை கள், பூக்கள் ஆகியவையெல்லாம் பல கம் மியர்கள் தம் அன்புக் கரங்களால் இருண்ட குகைளின் சுவர்களில் அழகுறச் சித்தரித் தனர்.

இக்கால மரபுக்குரிய ஓவியங்கள் சில இலங்கையில் உள்ள சிகிரியா என்னும் குன் றில் காணப்படுகின்றன. காசியப்பன் என் னும் மன்னன் சிகிரியாப் பாறையின் வெறும் சுவர்களில் ஆரணங்குகளையும், தேவர்க ளையும் ஓவியமாகத் தீட்டினான் இன்னும் இவ் ஓவியங்களைக் கண்டு இன்புறலாம்.

நாதப்பிரமமாய் நானிருக்கின்றேன் நான் தேவலோகத்திலும் இல்லை ஆயர் பாடியிலும் இல்லை பக்தர் இருக்கும் இடத் தில்தான் இருக்கின்றேன் என்று நாராயண மூர்த்தி சொல்வதிலிருந்து இசைக்கலையின் சிறப்பு விளங்குகின்றது. இந்தியாவின் மிகச் சிறப்பு வாய்ந்ததும் தொன்மையானது மாக இசைக்கலை விளங்குகின்றது. இந்துக் கள் வளர்த்த நுண்கலைகளுள் இதுவும் ஒன்று. இராவணன் சாமகானம்பாடிசிவனை வென்றுள்ளான் இதன் மூலம் இறைவன் இசையால் வசமாவான் என்ற உண்மை புலனாவதுடன் இசைக்கலையின் தொன் மையையும் அறிய முடிகின்றது.

இசைக்கலையானது கோயிலை அடிப் படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்தது. ஏழிசையாய் இசைப்பயனாய் என்று சம் பந்தர் பாடியுள்ளமையால் இசையின் மகத் துவம் புலனாகின்றது. சாமவேதம் இசைக்கு அடிப்படையாய்யாகின்றது. நாயன்மார் இசையைப் பயன்படுத்தியே பண்கனிந்த பாடல்களைப் பாடி பக்தியைப் பரப்பினர். கலைமகள் கையில் உள்ள வீணைஇசையின் பெருமையை எடுத்துக்காட்டுகின்றது. கண் ணனின் கையில் உள்ள புல்லாங்குழலும் இதன் மகிமையையே உணர்த்துகிறது.

பல்லவராட்சிக் காலத்தில் இசை, நடனம் என்பன சிறப்படைந்திருந்தன. மன்னனே தன்னைச் சங்கீதப்பிரியன் எனக் குறிப்பிட்டுள்ளான். மகேந்திரபல்லவனு டைய காலத்திலும் நரசிம்மவர்மன் காலத்தி லும் வாழ்ந்த ஆயனச் சிற்பியின் மகளாகிய சிவகாமியின் நடனத் தோற்றங்கள் சிற்பங் களாக வடிக்கப்பட்டன. இக் காலத்தில் நிருத்தியக் கலையும் சிறப்புப் பெற்றிருந்தது இறைவனது நடனத் தோற்றம் நடனக் கலையின் பெருமையை விளக்கி நிற்கிறது.

நாடகம், இசை, நடனம் பற்றிய நூலாகிய பரத நாட்டிய சாஸ்திரத்தை பரத முனிவர் இயற்றியுள்ளார். இந்திய ஆடற் கலையானது கால்களின் அசைவோடு நில்லாது உடல் முழுவதையும் உள்ளடக்குவ தாகும். இவ் வாடற் கலையில் வியக்கத் தக்க அம்சம் கைக்குறிப்புக்களே அதாவது முத்திரைகளே அழகும் நுட்பமும் வாய்ந்த இம் முத்திரைகள் மூலமாக பல வகைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட மெய்பாடுகளை காட்டுவதோடு கடவுளர் மக்கள், விலங்குகள் இயற்கை காட்சிகள் ஆகியவற்றையும் காட்டலாம் பண்டைக் காலம் தொட்டு சிறப்புற விளங்கிய நடனக்கலை பிற்காலத்தில்பெரு வளர்ச்சிபெற்று விளங்குகின்றது. இசைக் கலையும்புதிய பரிணாமங்களைப் பெற்றுள்ளமையை காணலாம். இசைக் கருவிகளைப் பயன்படுத்தும் முறையும் பரவியுள்ளது. இவை ஆலயங்களை மையமாக வைத்தே பெருவளர்ச்சி பெற்றன.

இந்தியக் கலையானது சிறப்பான பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதுடன் மேலைநாட்டுக் கலைகளுக்கும் வழிகாட்டியாக விளங்கியது என்பதை மறுக்க முடியாது. □

---

**இசுஸு சதோச மோட்டேர்ஸ் கூட்டிணைப்பு**

இது 1992 ல் கம்பனியாக நிறுவப்பட்டது. இதன் பிரதான பங்கு நிலமையாளர் யப்பானின் இட்டொஷு கோர்ப்பொறேஷன்.

இது முதலில் ஒரு கூட்டுறவுமொத்த விற்பனை நிறுவன இலாகாவாக ஆரம்பித்தது.

இதன்மூலம், பயணிகள் வாகனம், பெற்றோல் பௌசர்கள், ஜீப்புகள், லொறிகள், தீயணைப்புப் படைக்கான, ட்ரக்குகள், பிக்கப்புகள், பாரம்குறைந்த கனரக வாகனங்கள் முதலியன வழங்கிவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி நாகரட்ணம் வேலுப்பிள்ளை
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
யாழ். மாவட்டம்

# இலங்கையின் கல்வி நோக்கங்களில் வர்த்தகக் கல்வியின் பங்களிப்பு

உலக நாடுகளிடையே பல்வேறுபட்ட கல்வி நோக்கங்கள் முன்வைக்கப்பட்டு அதற்கான முறையில் மாணவர்களை விருத்தி செய்கின்றமையை அறிய முடிகின்றது. மக்கள் சீனா, யப்பான், அமெரிக்கஐக்கியக் குடியரசு, ஐக்கிய இராச்சியம் முதலிய நாடுகள் பலவும் தனியார் அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்டு சமூகஅபிவிருத்தி தேசிய அபிவிருத்தி போன்ற அம்சங்களைக் கட்டி எழுப்புவதையே தங்கள் கல்வி நோக்கங்களாகக் கொண்டுள்ளன. ஆனால் இலங்கையில் காலத்திற்குக்காலம் மாற்றமுறும் சமூக மாற்றங்களுக்கேற்ப கல்வி நோக்கங்களும் அறிக்கையிடப்பட்டிருத்தலை நாம் காணலாம். இலங்கையில் 1981 இன் வெள்ளை அறிக்கையில் கல்விநோக்கமாகக் குறிப்பிடப் பட்டதன் ''சாரமாக பிள்ளையின் வளர்ச்சி இயல்பாக ஏற்பட இடமளித்து அதன் மூலம் பிள்ளையைச் சமூகத்திற்கும் சமூகத்தின் தொழில் ஒன்றிற்கும் பொருத்தப்பாடுடைய முழு மனிதனாக்குதல்'' என்பது முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகளை நிறைவேற்றும் குறிக்கோளாக முகாமைத்துவம் விஞ்ஞானம் தொழில்நுட்பம் போன்ற கல்வித்துறைகளில் மாணவரைப்பயிற்றுவித்தலில் முக்கயத்துவம் அளிக்கப்பட்டுள்ளது மாணகர்கள் தலையை (விவேகத்தை) மாத்திரம் வளர்த்துக் கொள்ளும் நூற்கல்வியை மட்டும் பெறாது காந்திமகானின் கூற்றுக்கிணங்க தலை இதயம் கைகள் போன்றவற்றையும் ஒருங்கிணைத்துச் செய்யக் கூடியதான தொழில்நுட்பம் சார்ந்த வர்த்தகக்கல்வியின் இன்றியமையாமை உணரப்பட்டது. ''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்னும் தமிழ்முதுமொழிகூட வணிகக்கல்வியின் சிறப்பை நமக்குத் தொன்று தொட்டே உணர்த்தி நிற்கின்றது எனலாம்.

எமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன் படுத்தக் கூடிய ஒரு முதலீடாக வர்த்தகக்கல்வியை வழங்குதல் வேண்டும். இவ் வர்த்தகக் கல்வியானது மணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்குகளை வளர்க்கக் கூடியதாக இருப்பதால் தேசிய ரீதியில் இலங்கையின் பொருளாதார வளங்களை உபயோகித்து அதற்கேற்றதான திட்டங்களுக்குத் தம்மை ஈடுபடுத்தி உச்சப் பயனை ஈட்டிக் கொள்ள வாய்ப்பை நல்குகின்றதெனலாம். பாடசாலைகளில் பொதுக் கல்வியைப் பெறும் போதும் உயர்கல்வியைப் பெறும் போதும் பாடப்பிரிவுகளைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பங்களில் மாணவர்கள் பல தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். மாணவனது குடும்பத்தினதும் சமூகத் தாக்கமானது இதில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. மாணவனது தனி ஆற்றல் விருத்தி செய்வது இச்சமூகத் தாக்கமானது கலைப் பிரிவுகளில் பெரும்பாலும், கீழ்ச் சமூகவகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் அதிகரிப்பதற்கு வழிவகுக்கின்றது. இலங்கையில் சமூக அமைப்பைப் பொறுத்தவரையில் இன்னும் கூட நடுத்தர, மேல்வர்க்கத்தினர் பொறியியல், மருத்துவம், சட்டம் போன்ற துறைகளையே கற்கத் தெரிவு செய்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். இதற்கான காரணம் சமூக மதிப்பும், உயர்ந்த சம்பளத்தை அவாவி நிற்கின்ற தன்மையுமேயாகும். கல்வியில் சம வாய்ப்பு வழங்கப்பட்டதாகக் கூறப்படினும் கிராம நகர இடைவெளி அதிகரித்துக் காணப்படுவதும், கிராமப் புறங்கள் அதிக அளவில் வளங்கள் பற்றாக்குறையினால் தாக்கமுறுவதும் மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினையாகும். திறமை மிக்க ஒவ்வொரு மாணவனுக்கும் விஞ்ஞானம், வர்த்தகம் போன்ற பாடங்களைக் கற்க வாய்ப்பு ஏற்படுவதில்லை. வறுமையால் அவதியுறும் பிள்ளைகள் இடத்தோ திறமை காணப்படினும் தத்தமது பாடசாலைகளில் போதிக்கப்படும் வரையறுக்கப்பட்ட பாடங்களையே கற்கிறார்கள். பிரபல்யம் வாய்ந்த பாடசாலைகளில் சேரும் வாய்ப்பு இவர்களுக்குக் கிட்டுவதில்லை. இதனால் கல்வியை முடித்து தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் போது சமூகத்தாக்கம் ஏற்படுகின்றது. இன்றைய காலகட்டத்தைப் பார்ப்போமானால் பொதுக்கல்வியிலும் சரி, உயர்கல்வியிலும் சரி பாடசாலைகளில் வர்த்தகம் கற்கும் மாணவர் தொகை வருடா வருடம் அதிகரித்துக் கொண்டு வருகின்றதை அவதானிக்கலாம். யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உயர் வகுப்பில் வர்த்தகம் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆறு ஆண்டுகளில் 30% விருந்து 65% ஆக அதிகரித்துக் காணப்படுகின்றமை நோக்கற்குரியதாகும். அதற்கான காரணங்களில் முதன்மைபெறுவது, மாணவர்கள் நாட்டின் பொருளாதார தேவையை உணர்ந்து அதற்கேற்ற தொழிலைப் பெறும் குறிக்கோளை முன்வைத்தே தமது கல்வி இலக்கை அடைய முற்படுகின்றனர் என்றால் மிகையாகாது. இதன் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்திற்குரிய வெட்டுப்புள்ளியின் அளவு அதிகரித்துச் செல்வதும் குறிப்பிடத்தக்கது.

பொதுக்கல்வியில் வர்த்தகவியல் கற்கும் மாணவர்கள் கணக்கியல், சுருக்கெழுத்து தட்டெழுத்து, செயலாளர் நடைமுறை, விற்பனைத்துவம், கூட்டுறவு முதலிய பாடங்களைக் கற்பதன்மூலம் பொதுக்கல்வியை முடித்து, உயர்கல்வியைத் தொடராத சந்தர்ப்பத்திலும் கணக்கு எழுதுவினைஞனாகவோ, கணக்குப்பதிவாளராகவோ, சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளராகவோ, முகாமையாளராகவோ தனியார், அரசாங்க நிறுவனங்களில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டிருப்பதை நடைமுறையில் காணலாம். எனவே பொதுக்கல்வியில் தொழில்நுட்பப் பாடங்களை மாணவர்கள் கற்கும் போது செயல்முறை ரீதியாக கற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. கற்றல் கற்பித்தல் செயற்பாடானது பாடசாலையில் மட்டும் அமையாது சமூகத்துடன் தொடர்பு கொண்டு நடைமுறை ரீதியான செயற்பாடுகளிலும் கற்றல் நிகழ்ச்சிகள் இடம் பெற வேண்டும். எனவே கல்வியின் இலக்கை அடைய நற்கல்வியை மட்டும் கொடுக்காத கல்வியாக வர்த்தகக் கல்வி இன்று அமைந்திருப்பதனைக் காணலாம். இதற்கு ஏற்றாற் போல் இக் கல்வி பயிலும் மாணவர்களது தொழில் கூட்டமாக வகுப்பறை மட்டுமன்றி, சந்தைகள், கூட்டுறவு நிலையங்கள், வங்கிகள், திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் போன்றனவும் ஒன்றினைக்கப்படவேண்டும். வகுப்பறைக் கல்வியை மட்டும் வர்த்தகக்கல்விமூலம் பெற்ற ஒரு மாணவர் அக்கல்வியால் எதிர்காலத்தில் தொழில் பெறமுடியாது. வாழிவிருத்தல் ஏற்படும். எனவே கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் அனைவரது கவனமும் செய்முறை கொண்ட செயற்பாடாக அமைதல் சிறந்ததாகும். இவ்வாறு கற்ற அணியினர் பாடசாலையைவிட்டு விலகியதும் மனம் சோராது தொழில் நிலையங்களில் தொழில் பெற்றுக் கொள்ளல் சுலபமாக அமைவதுடன் எழுச்சியான மனப்பாங்குடன் தொழிலை நாடிச் செல்லவும் முடியும் என்பதில் ஐயமில்லை. அத்துடன் சுய தொழிலில் ஈடுபடவும் உந்து சக்தியாக வர்த்தகக்கல்வி துணைபுரியும்.

உயர் வகுப்புக்களில் கற்கும் மாணவர் தமது இலக்காகப் பல்கலைக்கழக அனும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியையே குறிக்கோளாகக் கொண்டிருப்பர் என்பது யாதார்த்தமானதாகும். ஆனால் எல்லா மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதி கிட்டுவதில்லை. ஏறக்குறைய 10% க்கும் குறைவாகவே அனுமதி பெறக் கூடியதாக இன்று வர்த்தகக் கல்வியில் போட்டி ஏற்பட்டுள்ளது. இருந்தும் இத் துறை பயில்வோர் எண்ணிக்கை அளவிளந்து செல்வதையும் பாடசாலைகளில் இட நெருக்கடி, ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. முயற்சி திருவினையாக்கும், மெய் வருந்தக் கூலிதரும், என்பதாலும் மாணவர்கள் வர்த்தகக் கல்வியை அக்கறையுடன் கற்கின்றார்கள். பல்கலைக்கழகம் புக முடியாத மாணவர் நலன்கருதி கல்வி வழங்கும் நிறுவனங்கள் பல இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வர்த்தகக்கல்வியை உயர் வகுப்பில் கற்று அடிப்படைத் தன்மையைப் பெற்ற மாணவர்கள் தொழில்சார்கல்வி பெறக் கூடியதாக இலங்கையின் பின்வரும் நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1. நுண்கலைத் தொழில் நுட்பக் கல்லூரிகள்
2. தொழில் நுட்பக்கல்லூரிகள்
3. இலங்கை நிர்வா அபிவிருத்தி பயிற்சி நிறுவனம்
4. இலங்கை வரையறுக்கப்பட்ட கணக்காளர் நிறுவனம்
5. வரையறுக்கப்பட்ட செயலாளர் நிறுவனம்,
6. இலங்கைச் சட்டக்கல்லூரி
7. தேசிய தொழில் பயிலுநர்சபை

மேற்குறிப்பிட்ட பன்முக நிறுவனங்களுடாக உயர்கல்வியைக்கற்று தொழில் ஒன்றைப் பெறக் கூடியதாக இருக்கும். இதற்குவழிகாட்டும் பெரும்பணி கற்பிக்கும் ஆசிரியர்களைச் சார்ந்ததாகும். கற்பித்தலுடன் மட்டும் நின்று விடாது மாணவர்களை நற்பிரசையாக, சமூகநிதி உணர்வுடையவராக, பொருளாதார வளமுடைய ஒருவராக ஆக்குவதற்கான ஆலோசனை, வழிமுறைகள் ஆகியவற்றினை முன்வைத்தலும் ஆசிரியரின்தலையாயகடமையாகும்.

இலங்கையில் கல்விச் செலவீடுகளில் பெரும்பகுதியை அரசாங்கங்களே ஏற்றுக் கொள்கின்றது. இலங்கையில் அமைந்துள்ள ஏறக்குறைய 10000 பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்கள், மற்றும் தொழில் சார் நிறுவனங்களிலும் பயிலும் மாணவர்களுக்காக, பாலர்வகுப்புமுதல் பல்கலைக் கழகம் வரை இலவசக்கல்வி ஏனைய வசதிகளை வழங்குவதற்கு பெரும் தொகை பணத்தை அரசு நாட்டின் அபிவிருத்தி கருதி முதலிடுகின்றது. பாடசாலைகளில் கற்கும் 80% மாணவர்கள் கிராமப்புறத்து வறிய மாணவாகள். இதனைக்கருதியே இலவசக்கல்வி, இலவசபாடப்புததகம், இலவசஉணவு, இலவசஉடை முதலிய சமூக நலன் பேணும் திட்டங்கள் இலங்கையில் கற்கும் 42 இலட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் பயனடையும் பொருட்டு அரசால் நிறைவேற்றப்பட்டது. வர்த்தகக் கல்வி நாட்டில் தேசிய முதலீடு என்பதால் அதைக்கற்கும் மாணவர்கள் எதிர்காலத்தில் நாட்டின் அபிவிருத்திக்கு உதவுவார் என்பதாகக் கருதுகிறது. ஆனால் பல்கலைக் கழகம் சென்று மருத்துவம், பொறியியல் கற்று வெளியேறும் மாணவர்கள் நாட்டிற்கு வெளியே தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்று வருவதால் அரசாங்கம் தனது இலக்கை அடைய முடியாது முதலிட்ட பணம் வீண்விரயமாவதுடன் மூளைசாலிகளை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் வர்த்தகமும், முகாமைத்துவமும் பொது நிர்வாகம் போன்ற துறைகளில் தொழில் சார் கல்விகற்ற மாணவர்கள் எமது நாட்டின் அபிவிருத்திக்கு தொடர்ந்து பங்களிப்புச் செய்யும் பணியில் கூடுதலாக ஈடுபட்டு வருவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகக் கல்வியானது வாழ்க்கைக் கல்வி என்பதற்கிணங்க மாணவனை இட்டுச் செல்லும் செயல் ரீதியான தன்மை கொண்டமைவதால் இன்று இக்கல்வியானது மெருகூட்டப்பட்ட நிலையில் ஏறு நடை போடுவதைக் காணலாம். எமது நாட்டின் கல்வியின் நோக்கை அடையும் விதத்தில் வர்த்தகக்கல்வி பாடசாலைகளில் பல்கலைக் கழகங்களில் தொழில் சார் நிறுவனங்களில் செயல் முறையுடன் இணைந்து கற்பிக்கப்பட்டு மாணவர்களை நாட்டின் அபிவிருத்திகளுக்கு இட்டுச் செல்கின்றது. என்றால் மிகையாகாது.

''வாணிபம் செய்வார்கு வாணிபம் பேணிப்
பிறவும் தம் போற் செயின்''

□

---

ஏற்றுமதிக் கடன்கள்

1. நிரம்பலர் கடன் ( Suppliers Credit )
2. வாங்குபவர் கடன் ( Buyers Credit )
3. அலுவல் சார் ஏற்றுமதிக் கடன்கள் ( Offical Export Credit )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ. பிரபாகரன்
ஆண்டு 13
வர்த்தகப்பிரிவு 94

# வாழ்க வணிகச் சுடரே !

வணிகத் துறையின் வளமிக்க சுடரே
புவியினில் உன்பணி நாளும் தொடரவே
நீயும் உழைத்திடு கல்வியை வளர்த்திடு
விடா முயற்சியாய் என்றுமே சுடர்ந்திடு
நன்றோ ஜொலிக்கும் சுடரின் ஒளியினால்
நின்றே உழைத்திட வழிவகை செய்திடு
ஈழமதில் சுடரே உன்புகள் ஜொலிக்கவே.

வையகத்தில் உரை பணி நரளும் தொடர்ந்திடட்டும்
நீயிந்த பள்ளியில் நிலையாக வாளர்ந்திடவே
நாளும் நாம் பல்லாண்டு பாடுகிறோம்
எண்திசையும் நீ தண்ணொளி பரப்பிடவே
இறைவனை வேண்டுகிறோம் இருகரம்கூப்பியே
என்றும் நீ இறவாத வாழ்வினைப் பெற்றிடவே
எம் இதய வாழ்த்துக்கள் உனக்காகட்டும்
இப்பள்ளியில் இரண்டாம் வணிகச் சுடராக நீ பிறந்தபோதும்

இனிவருங் கால பாடத்தில் பல பிறப்பை பெறுவாய்
இளைய மாணவர் எம் கைவண்ணம் தாங்கி
இன்று நீ இப் புவியில் இனிதே இறங்குகின்றாய்
இரண்டாவது மலராக பலதிருக் கதிர்களோடு
பல அறிஞர் உன்னைப் புகழ மண்ணில் நீ மலர்கின்றாய்

எம் மண்ணில் உன் வளப்பு தனைக் கண்டே
எம் உவகை உள்ளத்தில் பாய்கிறதே தினம்
வணிகத்தின் வளர்பிறை நீயே எந்நாளும்
வாழ்க வணிகச் சுடரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

க. பொ. த. (உயர்தர)த் தேர்வு

வணிகத்துறை

## பல்கலைக்கழக அநுமதி

| ஆண்டு | தோற்றியோர் | தகுதியுடையோர் |
|---|---|---|
| 1991 | 86 | 51 |
| 1992 | 94 | 60 |

**1991 இல் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானோர்:**

முகாமைத்துவம்: 1. செல்வன் உமாமகேஸ்வரன்
2. செல்வன் விக்னராசா

வணிக பீடம்: 3. செல்வி ஜெயபாலினி அன்னலிங்கம்
4. செல்வி சிறீமதி பரமலிங்கம்

இவர்களை வணிக மன்றம் வாழ்த்துகிறது.

பொறுப்பாசிரியர்

கொக்குவில் இந்துக்கல்லூரி

# வணிக மாணவர் மன்றம் 1993 – 1994

| | |
|---|---|
| காப்பாளர்: | திரு. இ மகேந்திரன் அதிபர் |
| பொறுப்பாசிரியர்: | திரு. மு. வேலாயுதபிள்ளை |
| தலைவர்: | செல்வன் கு. குமாரதாசன் |
| உபதலைவர்: | செல்வி எஸ். தமிழ்செல்வி |
| செயலாளர்: | செல்வன் க. சிவதாசன் |
| உப செயலாளர்: | செல்வி சி. சுபாஜினி |
| பொருளாளர்: | செல்வன் ச. குகன் |
| பத்திராதிபர்: | செல்வன். எஸ். பகிரததராஜ் |
| சுடற்குழு: | இ. ராம்ராஜ்<br>க. நிரஞ்சன்<br>இ. ரகுராகவன்<br>செ. சர்வேஸ்வரன்<br>வி. ஆரூரன்<br>பா. பாலமகிந்தன்<br>அ. மயூரன்<br>கி. கிருபாகரன் |
| கணக்காய்வாளர்கள்: | நா. பத்மராஜா<br>சி. அமுதரசி |
| விளம்பராதிபர்: | ம. அரவிந்தன்<br>அ. ஜெயதீபன்<br>ம. சுதேஸ்<br>க. குவேந்திரா |
| சுடற்குழு ஆசிரியர்கள் | திரு. சி. சிவகுமாரன்<br>திரு. செ. தங்கராஜா<br>திரு. த. பரமேஸ்வரன்<br>திரு. மா. குலசேகரம்<br>திரு. ச. கணேசபிள்ளை<br>திரு. எஸ். உமாசங்கர்<br>செல்வி க. புண்ணியவதி<br>செல்வி ஆர். தேவராணி<br>செல்வி க. பத்மலோஜினி<br>செல்வி ந. ரேவதி<br>திருமதி நா. நாகேஸ்வரன்<br>திருமதி க. சிவகுமார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments
from

# Ragamalika

**Dealers in Textiles**

No. 4, New Market (inside)
Jaffna.

வணிகச்சுடரை வாழ்த்துகிறோம்

ஆண்கள் பெண்கள் இரு பாலருக்குமான
நவநாகரீக ஆடைகளை மலிவாகப்
பெற்றுக்கொள்ள

# லிதா பிடவை மாளிகை

இல. 5, 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் இந்துக் கல்லூரியின்

வணிகச்சுடர்

பல ஆண்டுகள் சுடர்விட்டு மிளிர

வாழ்த்துகிறேன்

பொருளியல் - திரு. உதயன்
(ஆசிரியர்)

வணிகச்சுடர் தொடர்ந்து ஒளி வீச

எமது வாழ்த்துக்கள்

சாந்தி விலாஸ்

143 A, கஸ்தூரியார் வீதி, யாழ் நகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகச்சுடரை

வாழ்த்துகின்றோம்

# அளவெட்டி
# ப. நோ. கூட்டுறவுச் சங்கம்

வணிகச்சுடர் வளர வாழ்த்துகிறோம்

# சாந்தினி அச்சகம்

பிரதான வீதி, மானிப்பாய்.

வணிகச்சுடரை வாழ்த்துகின்றோம்

# ரஞ்சன் ஹாட்வெயர்ஸ்

மருதடி விநாயகர் கோவிலடி, யாழ்ப்பாணம் றோட்,

மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகச்சுடர் வளர வாழ்த்துகிறோம்

உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு 18, 20, 22 கரட் தங்க நகைகளை
உடன் செய்து பெற்றுக் கொள்ளலாம்

தரம் நாடுவோர்
தவறாமல் நாட வேண்டிய இடம்:

# ராதா ஜுவல்லறி

இல. 131 (212) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வணிகச்சுடர் வளம் பெற வாழ்த்துகிறோம்

தங்களின் விருப்பத்திற்கேற்ற நவீன டிசைன்களில் நகைகள் செய்து கொடுக்கப்படும். 18 கரட், 20 கரட் றெடிமேட் நகைகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். 22 கரட் நகைகள் ஓடருக்கு மட்டும் செய்து தரப்படும்.

மங்கையர் சிறுமியருக்கு ஏனைய நவீன டிசைன்களில்
வெள்ளி காற்சலங்கைகள் றெடிமேட்டாக
பெற்றுக் கொள்ளலாம்.
நகைச் சோடனைகள் விரும்பிய டிசைன்களில்
வாடகைக்குப் பெற ஒரே நிறுவனம்

# கயல்விழி நகைப் பூங்கா

தங்கப்பவுண் நகை வியாபாரம்

இல. 224/B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தரம் நாடுவோர் தவறாமல் நாடுங்கள்

வணிகச்சுடரை வாழ்த்துகிறோம்

சிறந்தரக திருமணப் பட்டுப் புடவைகள்
மற்றும் றெடிமேட் தினுசுகளுக்கும்
தலைநகரில் சிறந்த ஸ்தாபனம்

# கிருஷிகா ஆடை அகம்

**இல. 69A, நவீன சந்தை (உட்புறம்)**
**யாழ்ப்பாணம்**

---

## தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எலக்ரோனிக் துறையில் தொழில் வாய்ப்பு பெறக்கூடிய முறையில் பயிற்சியளிக்கப்படுகின்றன.

(1) ● **றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பயரிங்**
சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் தொழிற்படும் முறைகள், பழுதுகள் திருத்தப்படும் முறைகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும். காலம்: 6 மாதம்

(2) ● **றீவைண்டிங்**
டைனமோ, ரான்ஸ்போமர், மோட்டார் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும். காலம்: 5 மாதம்

(3) ● **மோட்ட பைசிக்கிள் மெக்கானிசம்**
நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டார் பைசிக்கிள் திருத்தப்படும் முறைகள் விளக்கமாக பயிற்சியளிக்கப்படும். காலம்: 4 மாதம்

(4) ● "Special English Class"

விபரங்களிற்கு: **Jaffna Technical Institute**

ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

(றெயில்வே கடவை அருகாமை – மேல்மாடி)

வணிகச்சுடர் பல்லாண்டு சிறப்புமலர் வெளிவர
வாழ்த்துகிறோம்

**1994ம் கல்வியாண்டு**
**ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை**
**ஆரம்பம்: 05-12-93**

EDUCATION IS WEALTH
NTC
NIRU TUITION CENTRE

**A/L 94, 95 வகுப்புகள் நடைபெறுகின்றன**

# நிரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகச்சுடரின் பணி மேலும் தொடர
வாழ்த்துகிறோம்

# ஸ்ரீ கிருஷ்ண பவான்

தித்திக்கும் சைவ உணவுகளைச் சுவைக்கப் போகிறீர்களா?
தயங்காமல் நாடுங்கள் ஸ்ரீ கிருஷ்ண பவானிற்கு
உங்கள் இல்லங்களில் இடம்பெறும் மங்கள விழாக்களிற்கு
என்னென்ன ருசியான உணவு தேவையோ உடனே ஆடருக்குப்
பெற்றுக் கொள்ளலாம்

விலையோ சிறிது சுவையோ பெரிது
தரமோ அதைவிடப் பெரிது

நாடுங்கள்

# ஸ்ரீ கிருஷ்ண பவான்

**இல. 171 (37), கே. கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகச்சுடர் விருட்சம் போல் தழைக்க
வாழ்த்துகிறோம்

முகுந்தாஸ் பிடவை மாளிகை

நங்கையர் விரும்பும் நவநாகரிகத்திற்கேற்ப
சகலவிதமான

சாறி வகைகள்
பஞ்சாபி, T சேட்
ஸ்கேட் & பிளவுஸ்
சேட்டிங் — சூட்டிங்
மற்றும் அழகிய டிசைன்களில்
பெரியவர்கள் சிறியவர்களுக்கேற்ற
ரெடிமேட் ஆடைகளை
மலிவாகப் பெற்றுக் கொள்ள
இன்றே நாடுங்கள்

# முகுந்தாஸ் பிடவை மாளிகை

இல. 2, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகச்சுடரின்
ஒளி பரவ
வாழ்த்துகிறோம்

# தீபன் ஸ்டோர்

BEST COMPLIMENTS

# Singham Pharmacy

**Hospital Road, Jaffna.**

வணிகச்சுடரை வாழ்த்துகிறோம்

அழகிய தங்க வைர நகை வியாபாரம்

# வைர மாளிகை லிமிட்டெட்

79, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சி மருந்தகம்

இல. 3, நவீன சந்தை, பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.

எங்களிடம் சகலவிதமான மருந்து வகைகள், பால்மா வகைகள்,
அன்பளிப்புப் பொருட்கள், சொக்லெட், இனிப்பு வகைகள்,
முட்டை, சுத்தமான தேன், நல்லெண்ணெய் முதலியன
நிதானமான விலையில் கிடைக்கும்

"உங்கள் திருப்திக்கே எங்கள் முயற்சி"

Note:- எங்களிற்கு வேறு கிளைகள் இல்லை.

உரிமையாளர்: V, கணேசரத்தினம்
குறிஞ்சி மருந்தகம்
திருநெல்வேலிச் சந்தி

---

வணிகச்சுடர் மென்மேலும் வளர வாழ்த்துகிறோம்

# கணேசன் சென்ரர்

தாவடி வடக்கு, கொக்குவில்.

---

வணிகச்சுடரை வாழ்த்துகிறோம்

# சிவசம்பு களஞ்சியம்

3, மின்சார நிலைய வீதி, பெரிய கடை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகச்சுடரின் ஒளி பாரெங்கும் பரவ
வாழ்த்துகிறோம்

# கலை வர்த்தகக் கல்லூரி

**374, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.**

## பட்டதாரி ஆசிரியர்களினால்
## யாழ். நகரில் கல்வி போதிக்கப்படும்
## தனித்துவம் வாய்ந்த ஓரே நிறுவனம்

எமது விரிவுரையாளர் குழு:

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு ஶ்ரீ |
| வர்த்தகம் | — | திரு. இரட்ணம் |
| அளவையியல் | — | திரு. சயந்தன் |
| புவியியல் | — | திரு. வேலாயுதபிள்ளை |
| இந்து நாகரீகம் | — | திரு. ஜோதிஸ்வரன் |
| தமிழ் | — | திரு. தங்கராசா |
| அரசியல் | — | திரு. பஞ்சாட்சரம் |
| கிறிஸ்தவ நாகரீகம் | — | திரு. றோபேட் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல வசதிகளையும் கொண்ட தங்குமிட வசதி
24 மணித்தியால சேவை

## குமரன் ரூரிஸ்ட் இன்

67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: எட்வேட் T. இராஜகுமார் Phone: 23753

என்றும் ஆண்களுக்கான
சேட் ஜீன்ஸ் சோட்ஸ் தைத்துக் கொடுப்பதில்
தனக்கென ஒரு தனியிடம் பெற்றது. அதுவே:

## சிற்றி ரெயிலர்ஸ்

சின்னக்கடை யாழ்ப்பாணம்

உங்களுக்குத் தேவையான சகல எவர்சில்வர் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள் ஏனைய அலங்காரப் பொருட்களை
தரமானதாகப் பெற்றுக் கொள்ள விரையுங்கள்

## ஸ்ரீராம்

இல. 326, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கடிகாரங்கள் சிறந்த முறையில், குறித்த தவணையிற்
திருத்திப் பெற்றுக் கொள்ளவும், புதிய கைக்கடிகாரங்கள் தரமானதாகவும்
பெற்றுக் கொள்ள விரையுங்கள்

## ரதி வோச் வேக்ஸ்

இல. 64, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகச்சுடரை வாழ்த்துகிறோம்

# R. K. ரெயிலறிங்

பெரிய கடை,

யாழ்ப்பாணம்,

பாடசாலை புத்தகங்கள் உபகரணங்கள் இலங்கை இந்திய நாவல்கள்

பிறந்த தின, திருமண, பண்டிகைக் கால வாழ்த்து மடல்கள் விற்பனையாளர்கள்

# ஆனந்த்ஸ் புத்தக நிலையம்

21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

வணிகச்சுடருக்கு எமது வாழ்த்துக்கள்

# பிரகாஸ்பதி ரெயிலறிங்

இல, 15, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக மன்றத்தை வாழ்த்துகிறேன்

தனம்

வணிக மன்றம் வளர வாழ்த்தும்

ரஞ்சன்ஸ்

17-18-18A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 8015

நாளுக்கோர் புதுமை நாடுவது உண்மை
இவற்றை அளிப்பது தான்

சீமாட்டி

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்,

உறுதியும் உத்தரவாதமுமுள்ள தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

பிருந்தா நகை மாளிகை
(தங்க, வைர நகை வியாபாரம்)

இல. 301, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பக்ட் டிஸ்க்கிலிருந்து பாடல்களைப்
பதிவு செய்து பெற்றிட
நவீன வீடியோ கமரா, மிக்ஷர் கொண்டு
வீடியோப் படம் பிடித்திட

ஷண் றெக்கோடிங் ஸ்பொட்
இல. 165, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.

ஆண்களுக்கான
சேட், ஜீன்ஸ், சோட்ஸ் என்பன
அழகாகவும் அளவாகவும் தைத்துப் பெற்றுக் கொள்ளலாம்

HAPPY TAILORS
211. Sivan Kovilady, K. K. S. Road, Jaffna.

நாவிற்குச் சுவையான சிறந்த தரமான சைவ உணவுகளை ருசிப்பதற்கு
நாடுங்கள் அபிராமியை

அத்துடன் உங்கள் இல்லங்களில் இடம்பெறும்
சிறப்பு மங்கள நிகழ்ச்சிகளுக்குத் தேவையான
சிற்றுண்டி வகைகளைப் பெறவும்,
கேக் ஐசிங் ஓடருக்கு குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளவும்
நாடுங்கள்

அபிராமி விலாஸ்
இல. 212, சேர். பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
(யாழ். பல்கலைக்கழகம் முன்பாக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் துணை

ஸ்ரீ தேவிகருமாரி அம்மன் துணை



# கருமாரி மோட்டோர்ஸ்

**J/S 281, ஸ்ரான்லி வீதி,**

**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Compliments from*

# S. M. Fernando

QUALIFIED OPTICIAN

**580, HOSPITAL ROAD, JAFFNA.**

**For All Your Optical Requirements**
**Just Step Into**



**S·M·FERNANDO**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய அறிமுகம் நாளைய நாகரீகம்

ஆடை வரும் முன்னே
நாகரிகம் வரும் பின்னே
ஆம் அதற்கேற்ப
ஆடை வகைகளை அறிமுகம் செய்து வைப்பவர்கள்

# சோபனா ஆடை அகம்

16, பெரிய கடை.
யாழ்ப்பாணம்.

தேன்மதுரத் தென்றலாள் வான்பரப்பில் வந்தது போல்
யாழ் நகரில் வந்துதித்தாள்

மதுரா பட்டு மஹால்

தலைசிறந்த உடைகளை நயத்துடன் பெற்றிடவே
மனமிணுந்து ஏவி மதுராவை நாடிடுவீர்
ஆம்

# மதுரா பட்டு மஹால்

75, பெரிய கடை, யாழ்ப்பாணம்

குறிப்பு:- மதுரா ஆதரவாளர்களின் பொருள் பெற்ற சிட்டைகள் அனைத்தும் 1994 சித்திரையில் பரிசுத் திட்டக் குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்பட விருப்பதால் சிட்டைகளைப் பத்திரப்படுத்துங்கள்.



பாரதி பதிப்பகம் (A. B. Printers) 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org